

# ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமம்.

ஐப்பசி

214 ஆவது மலர்

2015




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்றாதவர்.**

**பொருள் :** கூடி மகிழுமாறு இனிய சொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலை அறியாதவர், தம்மைவிட்டு நீங்கும்படி புறங்கூறித் தமது உறவினரையும் பிரியப் பண்ணுவர். (187)

**துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு.**

**பொருள் :** தம்மோடு நெருங்கிப் பழகுவோருடைய குற்றத்தையும் புறங் கூறிப் பரப்புகின்றவர், அயலவர் குற்றத்தை எப்படித் தூற்றாமலிருப்பர்? (188)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



அஞ்ஞான விருளை யகற்று மாதவன்
மெய்ஞ்ஞானி கட்கு வீட்டைத் தருபவன்
செஞ்ஞா யிற்றை யொத்த சிவனார்
எஞ்ஞான்று மென்ற னுள்ளத் துளனே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 44

இடம்வல மோடி யியங்கும் பிராணனைத்
திடம்பெறச் சுழுமுனை தன்னிற் சேர்த்தால்
திடம்பெறுங் காயஞ் சித்திக ளெய்தும்
மடம்பெறு வஞ்சக மனம்மா யும்மே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 45

வணக்கி னான்மா மேரு மலையினைக்
கணக்கிலா வசுர கணங்கள் மாய்ந்தன
பண்ணாமுடி யாதி சேடனும் பயந்தான்
கணாதி பர்கள் கண்ணுற்று மகிழ்ந்தனர்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஞானச்சுடர்



வெளியீடு - 2 214ஆவது மலர்

2015 ஐப்பசி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| மனிதன் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -06 |
| சைவப் பெருமக்கள் பக்தி... | எம்.பி. அருளானந்தன் | 07 -08 |
| வித்தகா உன் ஆடல் ஆர்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 09 -11 |
| வெற்றியருளும் வேலவனை... | அ. சுப்பிரமணியம் | 12 -15 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 16 -18 |
| மனவிருளைப் போக்கும்... | திருமதி நா. சந்திரலீலா | 19 -21 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 22 -23 |
| திருப்புகழ் அமுதம் தந்த... | ஆர்.வீ. கந்தசாமி | 24 -29 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 30 -33 |
| அவன் அருளாலே அவன்... | நா. நல்லதம்பி | 34 -35 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 36 -38 |
| இந்து மதத்தில்... | வி. செல்வரெத்தினம் | 39 -40 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 41 -42 |
| திருவாரூர் பற்றிய... | T. ஸ்ரீரெங்கநாதன் | 43 -44 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 45 -47 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 48 -53 |
| தமிழகத் திருக்கோயில் ... | வல்வையூர் அப்பாண்ணா | 54 -56 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

புரட்டாதிமாத ஞானச்சுடரின் வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பு கொண்டவரும் சமாதான நீதவானுமாகிய சிவ. ஆறுமுகஸ்வாமி அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

அவர் தம் ஆரம்ப உரையில் ஆச்சிரமம் ஆரம்பகாலந் தொடங்கி இன்றுவரையான காலப்பகுதிக்குள் ஒரு அபரிதமான வளர்ச்சி பெற்றிருப்பது ஒரு சாதனையாகவே உள்ளது என்பது எம்மால் உணரக்கூடியதாக இருக்கின்றது. அதோடு ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பலவித சமய, சமூகப் பணிகளை சபையில் உள்ளோருக்கு விளக்கிக் கூறியதோடு, பல ஆண்டு காலமாக இவ்வெளியீட்டில் பங்குபற்ற சந்நிதியான் அருள்பாலித்துக் கொண்டிருப்பதும் ஒரு போற்றத்தக்க விடயமாகவே அமைந்துள்ளது எனக் கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

213ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் வழங்கினார்கள்.

அவர் தமதுரையில் ஒரு மலர் வெளியீடு என்பது மிகவும் கடினமானதொன்று. பலபேரது உழைப்பைக் கொண்டுதான் ஒரு மலரை நாம் வெளிக்கொணரக்கூடியதாக உள்ளது. ஆனாலும் ஞானச்சுடர் மலரானது 213ஆவது மலராக ஒருவிதத் தடையும் இல்லாது வெளிவந்திருக்கின்றதென்றால் வியக்கத்தகு விடயமாகவே கணிக்கப்படுகின்றது.

மேலும் இம்மலருக்கு தொடர்ச்சியாக ஆக்கங்களை வழங்குவோரின் ஆக்கங்கள் மென்மேலும் சிறப்புற அமைவதற்கும், புதிய இளம் அறிமுக எழுத்தாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது எழுத்தாற்றலை வளர்ப்பதற்கும் ஒரு காரணியாக அமைகின்றது.

இவ்வகையான செயற்பாடுகளின்மூலம் ஆச்சிரமமும், பேரவையும் தங்கள் பணியை முன்னெடுத்துச் செல்வதன் அடிப்படையில் நாங்களும் பல வருடங்களாக ஆச்சிரமத்தோடு இணைந்து இங்கே இடம்பெறும் அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றக்கூடிய வாய்ப்பை சந்நிதி வேலவன் வழங்குவதும் நாம் செய்த புண்ணியப் பேறே என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தொகுப்பை கூடியிருந்த அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

இன்று உலகில் தனிமனித ரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற முன்னேற்றங்கள் யாவும் கல்வியால் கிடைத்த பயன்களே என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

மேலும் எந்தவொரு முன்னேற்றத்தை ஏற்படுத்த விரும்பினாலும் அதனைக் கல்வித் துறையினூடாகவே ஏற்படுத்த வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக கணனி அறிவை இலங்கையில் வளர்க்க வேண்டுமென்பது கட்டாயத் தேவையாக இருக்கின்றது. இத்தகைய அறிவை தேசிய ரீதியில் எல்லோருக்கும் ஏற்படுத்த வேண்டுமானால் அதனைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதன்மூலமே அதனைச் சாதிக்க முடியும் என்பதால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்று அதன் தாக்கம் மேலோங்கி வருகின்றமை கண்கூடு.

இதே நேரத்தில் மக்கள் சமுதாயத்தில் நல்ல பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், விழுமியங்கள் எல்லாம் குறைந்து வருவதும் சுட்டிக்காட்டப்படுகிறது. அதுவும் மாணவர் மத்தியில் ஒழுங்கு, ஒழுக்கம், கீழ்ப்படிவு, நன்றி மறவாமை போன்ற நற்பண்புகள் குறைந்து வருவதுடன் பாடசாலை மாணவர்களே வன்முறைகள், பலாத்காரச் செயற்பாடுகளில் ஈடுபடுவதெல்லாம் மனித சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதல்ல எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்த நிலைமைகளை மாற்றவேண்டுமானால் கீழைத் தேசங்களில் நீண்டகாலமாக நிலவிவந்த குருகுலக் கல்வி, ஆன்மிகக் கல்வி போன்றவற்றின் பண்புகளை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தும் அவசியமும் சர்வதேச ரீதியாக கல்வியியலாளர் களிடையே ஏற்பட்டு வருவதையும் காணமுடிகின்றது.

இவ்வாறு கல்வியின் மூலம், பாடசாலைகளினூடாக இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கூறும்பொழுது அது உண்மையில் ஆசிரிய சமுதாயத் தினாலே ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் அதன் கருத்தாகும். இதனால்த்தான் ஆசிரிய சமுதாயம் என்பது இன்றும் உலகின் உயர்விற்கு அவசியம் என்பதை ஏற்று அதற்கான முக்கியத்துவத்தை வழங்கி ஒக்டோபர் ஆறாம் திகதியை உலக ஆசிரியர் தினமாக உலக சமுதாயம் கொண்டாடி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

## I. காப்புப் பருவம் (தொடர்...

### வைரவப் பெருமான்

உலகத்தி னோடுறை
உயிர்களைப் படைத்திடும்
உரிமையா லகங்கரித்த
உருத்திரன், சிவனையும்
மதியாத பிரமனின்
ஒரு தலையை உறுத்திக் கிள்ளி
கலகமுற மறுதேவர்
உதிரமோ டகந்தையையும்
கைக்கொண்டு சூலமுடனே
காத்தெல்லாக் கோயிலையும்
பாலிக்கும் வைரவனை
கழல் பணிந்து வேண்டுவேனே
பலபல திருக்கோயில்
பண்படியா ருளக்கோயில்
பற்றியே வாழுமொருவன்
பாற்பிள்ளை வேற்பிள்ளை
பத்தர்களி னொருபிள்ளை
பழநிமலை சேர்ந்த பிள்ளை
குலவரைகள் குறிஞ்சி நிலங்
குலவுதினை யிடியவலும்
குழையமுதும் விரும்பும் பிள்ளை
குழந்தையன் சந்நிதியில்
குறையாது அன்ன மருள்
குகனவனைக் காக்க வென்றே.

*-முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா
(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி
(கனடா)

கனகராசா ஸ்ரீமோகனன்
(பிரதேச செயலர், தெல்லிப்பழை)

செ. ஞானசபேசன்
(கிராம அலுவலர், ஏழாலை)

சி. மகேஸ்வரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர் )

சி. உதயகுமார்
(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்
(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

ஆ. வடிவேலு
(இளைப்பாறிய அதிபர், தும்பளை)

ச. நாராயணன்
(கிராம அலுவலர், வடலியடைப்பு)

சி. ஜெயபரன்
(மானிப்பாய்)

உரிமையாளர்
(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

சி. துளசிங்கம்
(சந்நிதி, தொண்டைமானாறு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. இராசசேகரம்
(இளைப்பாறிய பொது முகாமையாளர், நீர்வேலி)
இ. சண்முகசுந்தரம்
(ஆசிரியர், மந்திகை)
S. செல்வராசா (செல்வி)
(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)
மு. அப்புலிங்கம்
(கோண்டாவில் கிழக்கு)
S. தங்கசிவம்
(நல்லூர் யாழ்ப்பாணம்)
ந. சிவக்குமார்
(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)
திருமதி ஜெயராஜன் சசிலேகா
(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)
ப. தியாகராஜசர்மா
(திருமகள் வாசா, ஆவரங்கால்)
மகாலிங்கம் செல்வமணி
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)
K. முகுந்தன்
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)
நா. நாகராசா
(பக்கிஸ்லேன், மானிப்பாய்)
ந. மணிவண்ணன்
(இரும்புமதவடி, வதிரி)
இராதாகிருஷ்ணன் கிரிதரன்
(தம்பலடி, பொலிகண்டி)
ஆ. யோகதாசன்
(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)
செ. இராசநாயகம்
(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)
K. சீவரெட்ணம்
(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைரவன் கனகன்**
(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)

**வே. முருகவேள்**
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

**க. சத்தியதாஸ்**
(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

**வ. இராசநாயகம்**
(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

**க. வசந்தகுமார்**
(ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

**விக்னேஸ்வரி கணேசநாதன்**
(வேளாங்கண்ணி, ஏழாலை)

**சி. பத்மராசா**
(நவிண்டில், கரணவாய்)

**T.R. இரத்தினவேல்**
(அரசவீதி, உரும்பராய்)

**கா. குணவதி**
(நேசப்பவனம், உடுப்பிட்டி)

**பா. இந்துராணி**
(மல்ரி ஓயில், இணுவில்)

**சு. சுந்தரலிங்கம்**
(வேவில் லேன், வல்வெட்டி)

**வீ. வடிவேலு**
(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**பொ. கணேசபிள்ளை**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)

**சிவலிங்கம் சுகந்திகா**
(ஆதியாமலை, உடுப்பிட்டி)

**த. கனகம்**
(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவரத்தினம் இந்திரமோகன்**

(சண்டிலிப்பாய் மேற்கு)

**திருமதி சிவநிதி முருகானந்தன்**

(கட்டுடை, மானிப்பாய்)

**இராசரத்தினம் வேல்குமார்**

(இணுவில்வீதி, மானிப்பாய்)

**P. சபாநாதன்**

(யாழ்வீதி, மானிப்பாய்)

**M. செந்தூரன்**

(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

**க. முருகானந்தம்**

(காளிகோவிலடி, மல்லாகம்)

**த. சொக்கலிங்கம்**

(இணுவில் தென்மேற்கு)

**பா. சியாமளநாயகி**

(சுண்ணாகம் கிழக்கு)

**கிட்டிணன் ஜெயக்குமார்**

(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

**கு. ஜெகதீஸ்வரன்**

(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

**கி. ஜெயக்குமரபதி**

(இடைக்காடு, அச்சுவேலி)

**க. துரைராசா**

(சுதுமலை தெற்கு)

**அருச்சுனன் சுனோஜா**

(தும்பளை தெற்கு)

**சி. புஸ்பரதி**

(கரணவாய் மத்தி)

**இ. சிவபாதம்**

(நீலமயில் வாசா, அல்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம்முடன்...



முதுபெரும்புலவரும் மரபுக் கவிஞருமாகிய திரு வை.க. சிற்றம்பலம் அவர்கள் 02.11.2015 திங்கட்கிழமை இறைவனடி எய்தமையையிட்டு சந்நிதி யான் ஆச்சிரமமும், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யினரும் குறிப்பாக ஞானச்சுடர் வாசக அன்பர்களின் சார்பிலும் ஆழ்ந்த துயருறு வதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல சந்நிதி வேற்பெருமானது பாதார விந்தங்களை அடையவேண்டும் என்று பிரார்த்திப்பதோடு அமரரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*-சந்நிதியான் ஆச்சிரமம்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவையின்

ஆரம்பகால நிர்வாக உறுப்பினரின் செயற்பாட்டின்மூலம்

பேரவைத் தலைவராக விளங்கிய திரு க. அருள்லிங்கம் அவர்களது

துணைவியார் திருமதி இராசபூபதி அருள்லிங்கம் அவர்கள்

இறைவனடி சேர்ந்ததையிட்டு சந்நிதியான் ஆச்சிரமம்

சார்பிலும் பேரவை சார்பிலும் அன்னாரின்

குடும்பத்தினரோடு நாமும் துயரினைப்

பகிர்கின்றோம்.

-சந்நிதியான் ஆச்சிரமம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

மனம் என்ற ஒன்று இருப்பதால் அவன் பெயர் மனிதன். கடவுள் படைத்த உயிர்களுள் முதன்மையானது மனித இனம். ஏனைய உயிரினங்கட்கு ஓரறிவு முதல் ஐந்து அறிவுகளை வைத்த இறைவன் மனிதனுக்கு மட்டும் ஒரு அறிவைக் கூட வைத்துள்ளான். அதுவே ஆறாவது பகுத்தறிவு. நல்லது கெட்டதை அறியும் அறிவு.

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது அதிலும் கூன், குருடு, செவிடு, நீங்கிப் பிறத்தல் அரிது" இது ஔவையார் சொன்னது.

மனிதனுக்குள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்து உறுப்புக்கள் உள்ளன. அவை பஞ்சேந்திரியங்கள் எனப்படும். இவ்வுறுப்புகளில் உண்டாகும் உணர்வுகளே ஐம்புலன்களாகும். புலன்கள் வேகமாகச் செல்லக்கூடியன. இந்த வேகத்தைக் கட்டுப்படுத்த மனிதன் பழக வேண்டும். மனிதன் பூமியில் பிறக்கும்போது நல்ல குணங்களுடன் பிறக்கின்றான். பின் அவன் வளரும் சூழல், போகும் பாதைதான் குணங்கள் மாறுவதற்கான காரணங்களாகும். மனிதனிடம் அறிவும் உண்டு. அந்த அறிவுக்குப் பகைவர்களுமுண்டு. "அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், காமம், மயக்கம் இவையே அறிவுக்குப் பகைகளாகும்.

அழுக்காறு - மனதில் பொறாமை, வஞ்சகம், சூது

அவா - ஆசை, மண், பொன், பெண்மீது உண்டாவது.

ஆசை- அறிவை மயக்கும், அழிவைத் தரும். காமம் அழிவு தரும்.

கோபம்- பொல்லாதது. எந்தக் கொடூரமான செயல்களுக்கும் மூலகாரணம்.

ஆசையையும் கோபத்தையும் அடக்கினால் மனிதன் தேவனாகிறான். மனமாசே யாவுக்கும் மூலகாரணம். மாசு- அழுக்கு. பொறாமை, கோபம் "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்" எப்பொழுது ஒருவன் மனதில் பொறாமை துளிர்விடுமோ அப்போது அயலான், கல்வி, செல்வம், பட்டம், பதவி, அந்தஸ்துகள் தன்னிலும் பார்க்கக் கூடுவது கண்டு தாங்கமாட்டான். அதைத் தடுக்க பல சூழ்ச்சிகள் செய்வான். ஆசையும் கோபமும் மனிதனை ஆட்டிப்படைத்த சம்பவங்கள் வரலாறு. இராவணன், இந்திரன், சந்திரன் கெட்டது பெண்ணால். துரியோதனன் கெட்டது பாண்டவர்க்குரிய இராச்சியத்தின்மீது கொண்ட ஆசை. மந்தரையின் சூழ்ச்சி இராமனைக் காடாள வைத்தது. கைகேயி பரதனே அயோத்தியை ஆளவேண்டும். இராமன் காடேக வேண்டும் என்பதே. முடிபு என்ன?.

துரியோதனன், இராவணன் போரில் மாண்டனர். தசரதன் மாள கைகேயி விதவையானாள். விஸ்வாமித்திரரின் கோபம் அகலிகை கல்லானாள். கண்ணகியின் கோபம் மதுரை மாநகரமே எரிந்தது.

இனி, மனித மனம்பற்றிப் பேசுவோம். மனம் ஒரு குரங்கு. அது தன்னிச்சையாகத் திரியும். அப்படி அலையும்போது அவன் என்ன செய்கிறான்; செய்வான். பாவமா புண்ணியமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அவனுக்கே தெரியாது. அவன் செய்யும் செயல்களுக்கு ஒரு சாட்சி வேண்டும். அதை எங்கே வைக்கலாம்? இறைவன் சிந்திக்கிறான். பஞ்சபூதங்கள் யாவும் மனிதனுடைய விஞ்ஞான ஆராய்ச்சிக்குட்பட்டன. உமாதேவி சொல்கிறா, "சுவாமி! மனித மனம் இருக்கிறதே அது ஒரு குகை, அவனுக்கு மட்டும்தான் தெரியும்" அப்படியே அவன் மனத்துள் சாட்சியை வைத்து விட்டார். அதுவே மனச்சாட்சி. உடனே சொல்லாவிடினும் காலப்போக்கில் அவன் செய்த நல்லன அல்லன பாவம், புண்ணியம் எவையென அவன் மனச்சாட்சி உறுத்தும். ஒருவனின் செயல்கண்டு அவன் மனச்சாட்சியோடு நடக்கிறான்; அவனிடம் மனச்சாட்சியே இல்லையென மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

அடுத்து, ஔவையார் ஏன் கூன், குருடு, செவிடு நீங்கிய பிறவி நல்லது எனக் கூறினார். காரணம் உண்டு.

கண் இல்லாதவன் குருடன்
காது கேளாதவன் செவிடன்
வாய் பேசாதவன் ஊமை
நடக்க முடியாதவன் நொண்டி

(சுவாசிக்க) முகர முடியாதவன் மூங்கை. சுவாசம் இல்லையெனில் உயிர இல்லை. அவன் பிணம்.

இனி யார் குருடன்? என்று பார்ப்போம். கண்ணிருந்தும் கண் இல்லாதவன்போல் நடப்பவன். நாஸ்திகன் குருடனிலும் பார்க்க ஆசையுடையவன்; படித்தும் கெட்ட செயல்கள் செய்பவன். யார் செவிடன்? நன்மையானவற்றைக் கேட்காதவன். யார் ஊமை? சரியான சந்தர்ப்பத்தில் தகுந்த வார்த்தைகளை எடுத்துச் சொல்லமுடியாதவன். யார் நொண்டி? திருக்கோயிலை வலம் வராதவன். யார் முடவன்? வயோதிபம் அடைந்ததும் தீர்த்த யாத்திரை போக விரும்புபவன். விழிப்புடையவன் தர்மம் செய்வான். நல் நடத்தையுடையவன் சாது. மனிதன் தனக்குக் கிடைத்த உயர்வான பிறவியை சிறப்பாகப் பேணவேண்டும். "நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கே" என நாவலர் ஐயா சொல்கிறார். அதனையே அவருக்கு முந்திய காலத்தில் அவதரித்த அப்பர் சுவாமிகள் யாக்கையாற் பயன் என்ன? எனக் கேட்டு உடல் உறுப்புகள் யாவும் கடவுளை வழிபட்டு உய்தி அடையவே என தான் பாடிய திருவங்கமாலையில் கூறியுள்ளார்.

அடுத்து யார் மனிதன் என்ற சொல்லுக்கு அமைய வாழ்பவன் எனப் பார்ப்போம். தன்னைத்தான் காதலிப்பவன் பிறர்க்குத் தீமையை எண்ணமாட்டான். வள்ளுவர் சொல்கிறார்.

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப்பால்"

நல்ல காரியங்கள் செய்பவனே மனிதன். கண் தெரியாத குருடன் செய்த நல்ல காரியம் நம்மவர்க்குப் படிப்பனையாகக் கொள்வோம்.

அது ஒரு குறுகலான பாதை. அதனூடாகப் பலரும் போய்வருகிறார்கள். அவ்வழியில் இடை நடுவே ஒருகல். போவோர் வருவோர்க்கு இடைஞ்சலாக இருக்குமே என்பதை யாரும் கண்டுகொள்ளவில்லை. கையில் கோலை ஊன்றி தட்டியபடியே ஒரு குருடன் அவ்வழியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறான். காலில் ஏதோ தட்டுப்படுகிறது. கோலினால் தட்டுகிறான். கல் என்பதை கைத்தடி உணர்த்துகிறது. மனம் விரைகிறது. கையால் தடவி அக்கல்லை எடுத்துப் பாதை யோரம் அப்பால் வைத்துவிட்டுச் செல்கிறான். அவன் மனச்சாட்சி தெரிந்த மனிதன். அடுத்த தாக, மனிதனைத் தேடிய மனிதன் ஒருவனைப் பார்ப்போம்.

நன்றாகப் படித்தவன். கல்வியறிவு, உலகியல் தெரிந்தவன், வாலிபப்பருவம், கெட்ட நண்பர்கள் சகவாசம் எப்படியோ கிடைத்தது. தடுமாறும் பருவம். "அடிக்குமேல் அடி அம்மியும் நகரும்" படிப்படியாக நண்பர்கள் அவனைத் தம்வழிக்கு இழுத்துவிட்டார்கள். கண்ட பலன் மது, மாது இரண்டுமே அவனுக்கு இன்பம். மெய்மறந்த நிலை. கைப்பொருள் யாவும் தீர்ந்துவிட்டது. செத்த மாட்டில் உண்ணி கழர்வதுபோல் நண்பர்களும் விலகிவிட்டனர். "நான் எத்தனை புத்தி சொன் னாலும் கேட்கிறாய் இல்லை" என பெற்றோர், மற்றுமுளோர் பல தடவை எச்சரித்தார்களே. மது, மாது மயக்கம் விடவில்லை. எல்லாம் இழந்த நிலை. புகலிடமும் இல்லை. உணவு இல்லை. நோய் வேறு வாட்டி வதைக்கிறது. அவனைக் காண்பவர்கள் சீ-தூ என்று ஒதுங்கு கிறார்கள். இப்பொழுது மனம் பேசுகிறது. "நீ கெட்டழிந்து போகிறாய் இன்னமும் நீ இங்கு இருக்காதே" பசி, தாகம், வெயில் கொடூரம், நோயின் வலி தாங்கமுடியவில்லை. எனது நிலை வேறு யாருக்குமே வரக்கூடாது. ஒரு மதகினுள் சென்று மறைந்து நோயின் உக்கிரம் தாங்க முடியாமல் முனகுகிறான். வழிப்போக் கன் ஒருவன் பட்டப்பகலில் கைவிளக்கின் உதவியுடன் தேடி மதகின் உள்ளிருப்பதைக் கண்டான். அவனது பரிதாப நிலை கண்டு இரங்கி தூக்கியெடுத்து மருத்துவமனையில் சேர்க்கிறான். தன்நிலையை உணர்ந்து பிறருக் குத் தீங்கு நேராது ஒதுங்கிய மதகுமனிதனும் மனிதன். ஆதரவற்ற நிலையில் அந்தக் கொடிய நோய் பிடித்தவன்மீது இரக்கம் காட்டி மருத்துவமனையில் சேர்த்தவனும் மனிதன். இங்கு குருடன், குஷ்டரோகி, தந்நலம் பாராமல் பிறன்நிலை கண்டு இரங்கிய மூன்று மனிதர் களைக் கண்டோம். மூவரிடமும் மனிதப் பண்பு தெரிகிறது.

உண்மை, நேர்மை, நீதி, ஒழுக்கம் இவை மனிதப்பண்புகளிற் சில. இன்றைய மனிதர்களிடம் மனிதப்பண்புகள் அருகி வரு கின்றன. ஊழல் மோசடி பெருக நீதி செத்துக் கொண்டிருக்கிறது. காரணம் பண ஆசை, பதவி மோகம். மனிதன் எப்பொழுது நீதியைக் குறுக்கி நிதி செய்யாது, நிதியை நீட்டி நீதி செய்கிறானோ அன்றே அவன் மனிதன்; மனி தருள் மாணிக்கம்; வானுறையும் தெய்வமாகின் றான். வினைப்பயன் முடிய உயிர் உடலை விட்டு பிரியும். ஆகவே உயிர் உள்ளவரை அல்லவை செய்யாது நல்லன செய்ய வேண்டும்.

நாவலர் ஐயாவும், அப்பர் பெருமானும் நமக்குச் சொல்வது நாம் மனிதனாகப் பிறந்த பயன் கடவுளை வணங்கி பிறவாப் பேரின்ப மாகிய முத்தியடைவதேயாம். "குனித்த புரு வமும், கொவ்வைச் செவ்வாயில் குமிழ்ஞ் சிரிப்பு, பனித்தசடை, பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறு இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் இத்தனையையும் கொண்ட இறைவனுடைய நடனத்தோற்றத்தை இவ்வுல கில் வாழும்போதே கண்டவர் அப்பர் சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருச்சதகம்

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
–சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

6. கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்கள் உத்தமனே.

**ப.உரை:** இறைவா- இறைவனே, எங்கள் உத்தமனே- அடியோங்களுக்கு அருள் செய்யும் பெரியோனே, குடி கெடினும்- என் குடிப்பிறப்பிற்குரிய செல்வவாழ்வுகெட நேர்ந்தாலும், புரந்தரன் மால் அயன் வாழ்வு கொள்ளேன்- இந்திரன் திருமால் பிரமன் என்னும் தேவத் தலைவர்களின் உயர்ந்த செல்வ வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொள்ள மாட்டேன்; நினது அடியாரொடு அல்லால் நள்ளேன்- உன் அடியாரொடல்லாமல் பிறரொடு நட்புக் கொள்ளேன்; திருவருளாலே இருக்கப்பெறின்- யான் நின் திருவருளாலே திருவருள் நெறியில் இருக்கப் பெறுவேனாயின், நரகம் புகினும் எள்ளேன்- நரகத்தின்கண்ணே செல்ல நேரினும் அதனை இகழமாட்டேன்; உன்னை அல்லாது பிறதெய்வம் உள்ளேன்- உன்னை அல்லாது பிறதெய்வங்களை நினைக்கவுமாட்டேன்.

இறைவா, எங்கள் உத்தமனே, எங்கள் குடிகெட நேர்ந்தாலும் புரந்தரன் மால் அயன் என்னும் தேவத் தலைவர்களின் உயர்ந்த வாழ்க்கையை விரும்பி ஏற்றுக்கொள்ள மாட்டேன்; உன் அடியாரோடல்லாமல் பிறரொடு நட்புக்கொள்ளேன்; நின் திருவருளாலே திருவருள் நெறியில் இருக்கப்பெறுவேனாயின் நரகம் புகினும் அதனை இகழமாட்டேன்; உன்னையல்லாது பிறதெய்வங்களை நினைக்கவும் மாட்டேன் என்பதாம்.

இறைவன் எப்பொருளினும் தங்கின்றவன். பிறப்பினை அறுத்துப் பேரின்ப வாழ்வினை அளிக்கும் பெரியோன் இறைவனேயாகலின் "உத்தமன்" என்றார். உத்தமன்- பெரியோன். பிறஅடியார்களையும் உளப்படுத்தி "எங்கள்" என்றார். "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு எனப் பயனிலையை முன் வைத்துக் கூறியது புரந்தரன் முதலிய இறையவர் வாழ்க்கை நலங்களை வலிந்துதர எத்தனித்தாலும் அவற்றிலுள்ள வெறுப்பின் மிகுதிபற்றியெனக். "வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்" (உயிருண்ணிப் 7) என பிறிதோரிடத்து அடிகள் கூறுதலுங் காண்க.

புரந்தரன் இந்திரன்; வடமொழி பகைவர் புரங்களை அழிப்பவன் என்பது பொருள். மால் அன்பரிடத்து அன்பு செய்பவன். பிறப்பிலி என்னும் பொருள்படும் அஜன் என்னும் வடமொழி அயன் எனத் தமிழில் திரிந்தது. ஈண்டு பிரமனுக்கு உபசார வழக்கு. இந்திரன் வாழ்வு சிறந்ததால் பற்றி அதனை முற்கூறினார். "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திருக்குறள் உரைப்பாயிரம்) எனப் பரிமேலழகர் உரைத்தலுங் காண்க. புரந்தரன் மால் அயன் வாழ்வு இன்பம் பயத்தல் பற்றி அவற்றை எடுத்துக் கூறினார். இந்திராதி பதங்களை அடைந்தவர்க்கும் புநராவர்த்தியினாற் பிறப்புண்டாமதலின் அப்பதங்களைச் சிவனடியார் விரும்பார் என்க.

"கொங்குலா வரிவண்டினிசைபாடுமலர்க் கொன்றைத்
தொங்கலானடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே"

ஞான 177:7.

எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

கொள்ளேன புரந்தரன் மாலயன் வாழ்வு என்றமையால் ஏனையோர் வாழ்வையும் கொள்ளாமை தானே பெறப்படும். வாழ்வும் என்ற சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

"குடிகெடினும்" என்பது மத்திபதீபமாக நின்று குடிகெடினும் புரந்தரன் மாலயன் வாழ்வு கொள்ளேன் எனவும், குடிகெடினும் நினதடியாரொடல்லால் நள்ளேன் எனவும் இயைந்து பொருள் தந்தது. அடியாருறவு வீடுபேற்றிற்கு ஏதுவாதலானும், குடிப்பிறப்பிற்குரிய பெருமைகெட நேருங்கால் அடியவரல்லாதாரோடு நட்புச் செய்தல் குடிப்பிற்கு வருந்தீங்கினும் மிக்க தீங்கினைப் பயத்தலானும் அவ்வடியார் உறவையே வேண்டும் என்பார். "குடிகெடினும் நள்ளேன் நினதடியாரொடல்லால்" என்றார். குடி- குலத்தின் உட்பிரிவு, "விலக்கின்மனை ஒழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண், குலத்தின்கண் வரும் பெருமைக் குறுக்கையர் தங்குடி விளங்கும்" (திருநாவு 15) எனப் பெரியபுராணத்து வருதலுங் காண்க. ஈண்டுக் குடி என்றது குடிப்பிறப்பிற்குரிய பெருமையை உணர்த்துதலின் ஆகுபெயர். கெடினும் என்ற உம்மை கொடாமையை உணர்த்துதலின் எதிர்மறை. நள்ளல்- சிநேகித்தல்.

நரகம், பாதாளத்தில் தீவினையாளர் சென்று தங்கும் இடம். "பாவர் சென்றல்கு நரகம்" (திருக்கோவை 337) என அடிகள் அருளியமையுங் காண்க. அது அள்ளல், ரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என ஏழுவகைப்படும். இறைவன் திருவருளுடையார் நரகம் புகுதல் எக்காலத்துமின்மையின் "நரகம் புகினும்" என்றார். உம்மை எதிர்மறை மிக்க துன்பத்தினைப் பயக்கும் நரகின்கண் ஒரேவழி புகநேருமாயினும் இறைவன் திருவருளுணர்ச்சியோடு இருக்கப்பெறின் அதனையும் இகழேன் என்பார். "நரகம் புகினு மெள்ளேன் திருவருளாலே இருக்கப்பெறின்" என்றார். எள்ளல்- இகழுதல். "ஆற்ற லுடையோராற்றல் போற்றாதென், னுள்ள மெள்ளிய மடவோன்" (புற 73:5-6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. திருவருளால்- ஆல், ஒடுப் பொருட்டு, நரகம் புக்கவர் திருவருளுணர்ச்சியோடு இருக்கப் பெறுதல் அரிதாகலின், இருக்கப் பெறின்" என்றார்.

எங்கும் நிறைதல் எல்லாம் அறிதல் முதலிய இறைவனுக்குரிய குணங்கள் இல்லாத திருமால் முதலியோரைப் "பிற தெய்வம்" என்றார். சிவபரம் பொருளையன்றிப் பிற தெய்வங்களைச் சிறிதும் மனத்தினாலும் நினைத்திலேன் என்பார். "உள்ளேன் பிறதெய்வம்" என்றார். உள்ளல்- நினைத்தல், "உள்ளுவன் மன் யான் மறப்பின்" திருக்குறள் 1125. உள்ளேன் என மனத்தின் செயலைக் கூறியதனால் வாக்கினால் வாழ்த்தேன்; காயத்தால் வணங்கேன் என்பனவுங் கொள்க. அடிகள் பிறதெய்வங்களை வழிபடாமையை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மற்றோர் தெய்வங் கனவிலு நினையாது"

போற்றி 74.

"செழுமணி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்"

வாழாப் 10.

"கற்றறியேன் கலைஞனாம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்" ஏசறவு 5.

என அவர் அருளியவாறானு மறியப்படும்.

"உற்றவரு முறுதுணையு நீயேயென்று முன்னையலால்
ஒருதெய்வ முள்கே னென்றும்... அலறாநில்லே"

(245:7)

"சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" (312:5)

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"வைச்சே யிடர்களைக் களைந்திட வல்ல மணியே மாணிக்கவண்ணா,
நச்சே னொருவரை நானுமை யல்லா னாட்டியத்தான் குடி நம்பீ"

(15:2)

"விரும்பே னுன்னை யல்லா லொருதெய்வமென் மனத்தால்
கரும்பாருங் கழனிக் கழுப்பாலை மேயானே"

(23:4)

"தாழை வாழையந் தண்டாற் செருச்செய்து தருக்கு வாஞ்சியத்துள்
ஏழைபங்காளனை யல்லால் இறையெனக் கருதுதலிலமே"

(76:9)

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளியமையுங் ஈண்டைக்கேற்ப அறியற்பாலன. அடிகள் இறைவன் திருவருளாற் பிறதெய்வம் உள்ளா தொழிந்தாரென்பது "யான் பிறவேத்தா வகையிரங்கித், தன்கடைக்கண் வைத்த தண்டில்லைச் சங்கரன்" (298) எனத் திருக்கோவையாரில் வருதலானறியப்படும்.

இதன்கண் புரந்தரன் மாலயன் வாழ்வு கொள்ளாமையும் பிறதெய்வம் உள்ளாமையும் அடியாரல்லாரோடு நள்ளாமையும், அவை அழிவுடைமையும் பெரும் பயன் தராமையும் பற்றி யாதலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பெருமக்கள் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கும் தலையாய விரதம் கந்தசஷ்டி

– திரு காரை எம்.பீ. அருளானந்தன் அவர்கள் –

ஐப்பசிமாத வளர்பிறையில் அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதல் சஷ்டிதிதி ஈறாக ஆறுநாட்கள் கந்தப் பெருமானை வேண்டி அனுஷ்டிக்கப்படுகின்ற விரதம் கந்தசஷ்டி விரதமாகும்.

முருகப்பெருமான், சூரபத்மனைத் தலைவனாகக் கொண்ட அசுரப் படையை வாட்டி அழித்த திருவிளையாடலைத்தான் கந்தசஷ்டி விரதமாகவும் விழாவாகவும் அனுஷ்டித்து கொண்டாடப்படுகிறது.

பரமேஸ்வரனுக்கும் பார்வதி தேவிக்கும் குமாரனாக உதித்த முருகப்பெருமான் தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பம் செய்த சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் போன்ற கொடிய அசுரத் தலைவர்களையும் அசுரகுலத்தையும் ஆறுநாட்போரில் அடக்கி ஒடுக்கி சம்ஹாரம் செய்தார். வேலினால் சூரபத்மனைப் பிளந்த முருகப்பெருமான் அவனின் ஒரு பகுதியை மயில் வாகனமாகவும் மற்றொரு பகுதியைச் சேவற் கொடியாகவும் தமதாக்கி ஆட்கொண்டு தேவலோகத்தைக் காத்தருளினார்.

“ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையை
பேறா அடியேன் பெறுமாறு உளதோ
சீறா வருசூர் சிதைவித்து இமையோர்
கூறா உலகம் குளிர் வித்தவனே”

என்பது இந்த சூரசம்ஹாரத்தை எடுத்து உரைக்கும் கந்தரநுபூதிப் பாடலாகும்.

தாயாய் தந்தையாய் இறைவனாய் இருந்து பரிபாலிக்கும் கந்தவேள் யாரை அழிப்பது? யாரைக் காப்பது? மறக் கருணையால் அசுரர்களின் அசுர இயல்பை அழித்து தேவ இயல்பூடாக அவர்களை ஆட்கொண்ட திருவிளையாடலே சூரசம்ஹாரம்.

பிளக்க பிளக்க முளைத்த சூரன் ஈற்றில் கடலில் மரமாக வளர்ந்து நின்றான். கடலில் மரமாக நின்ற சூரனை கந்தப் பெருமான் சஷ்டியில் அறுத்தார் என்பது பிறவிதோறும் முளைத்த அவனது ஆணவத்தை அழித்து அவனை ஆட்கொண்டார் என்பதே சூரசம்ஹாரத்தின் உட் கருத்தாகும்.

எமது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதற்கு ஏற்பட்ட ஒரு புற உபகாரத் திருவிளை யாடலே கந்தவேளுக்கும் அசுரப்படைக்குமிடையில் நடந்த போரும் சூரசம்ஹாரமும் ஆகும்.

எம்மில் எழும் அகங்கார, காம, குரோத மதமாற்சர்ய விருத்திகளே அசுரத் தலைவர்கள் என்றும் தீய எண்ணங்களே அசுரப் படை என்றும் சொல்லலாம். இந்த அசுர இயல்புடன் தொடர்ச் சியாக இருக்காது போராடி அடக்கி ஒடுக்கி அழித்து வீடுபேறு அடையவேண்டும் என்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசஷ்டி விரதம் முருகப்பெருமானுக்கு உரிய விரதங்களுள் முதன்மையானதாகும். இதை முறைப்படி கடைப்பிடிப்போர் மற்ற எல்லா விரதங்களையும் நோற்ற பலனைப் பெறுவர் என்பது எம் முன்னோர் எமக்கு அறிவித்த செய்தி.

கந்தசஷ்டி விரதம் ஆறுநாட்களை உள்ளடக்கியது. ஆறுநாட்களும் விரதம் இருப்போர் பூரண உபவாசமிருந்து ஏழாம்நாள் காலை பாரணை பண்ணுவர். அவ்வாறு கடைப்பிடிக்க இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பால், இளநீர், பழம் ஏதாவது உட்கொண்டு ஆறாவது நாளாகிய சஷ்டியிலாவது பூரண உபவாசமிருக்கவேண்டும்.

இவ்வாறு கடைப்பிடிக்க இயலாதவர்கள் தம், தேக மனநிலைக்கு ஏற்ப திரிகரண சுத்தியுடன் இயன்ற மட்டும் கடைப்பிடிக்கலாம். மனச் சுத்தமும் ஆழ்ந்த பக்தியும் தெய்வ நம்பிக்கையுமே இந்த விரதத்துக்கு முக்கியமானவை.

இந்த விரத நாட்களில் கந்தசஷ்டிக் கவசம், கந்தர் கலிவெண்பா, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ், சண்முக கவசம் ஆகிய பாடல்களை பாடிக் கந்தப் பெருமானின் பேரருளைப் பெற்று உய்யலாம்.

ஆகவே இந்தக் கந்தசஷ்டி நாட்களில் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் முருகனையே நினைந்து அவனின் அருட்பாடல்களைப் பாடிப்பரவி உலகத்தில் தாண்டவமாடும் அநீதிகள், தீமைகள், அறியாமைகள் யாவும் ஒழிந்து அழிந்து எல்லோரும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக அருள்பாலிக்கும் முருகனைப் பிரார்த்திப்போமாக.

## சஞ்சலம் தீர்ப்பான் சந்நிதியான்

சந்நிதியான் நீறணிந்தால்
சஞ்சலங்கள் தீருமையா
செந்நிறமாய் உன் முகமும்
சீர்பெற்று மாறுமையா
சொந்தங்கள் எல்லாம் துச்சமாய்
நினைத்த போதும்
சந்நிதியான் கரம் வந்து
காக்குமையா உன் உடலை.
ஆறுதலைப் பெற்றிடவே
ஆறுமுகனை நினைத்துவிடு
தேறுமையா உன் வாழ்க்கை
திண்ணமையா இது உண்மை
சாறுகொண்ட பழம் போல பிழிந்து
கொடு உன் அன்பை
நீறு போல் வெளிக்குமையா
நித்திலத்தில் உன் வாழ்க்கை

-பொ. பாலேஸ்வரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ!

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

வள்ளி நாயகியாரும், தோழியும் தினைப்புனத்தைச் சென்றடைந்தனர். அப்போது விளைந்த தினைகளை வேடுவர்கள் வந்து கண்டு தாயே, இதுகாறும் தினைப்புனத்தைக் காத்து வருத்தமுற்றாய். இனி உனது சிற்றூருக்குச் செல்வாயாக என்றனர். தோழியும் வள்ளியும் ஊருக்குச் செல்லும்போது மான் கூட்டங்களையும், மயிற் கூட்டங்களையும், கிளிகளையும், புறாக்களையும் ஏனைய பறவைகளையும், விலங்குகளையும் நோக்கி யானும் தோழியும் சென்றதை மேலோரான தலைவருக்குக் கூறுங்கள் என்று வேண்டுதல் செய்து அம்மையார் சென்றருளினார். நம்பிராசன் குடிசைக்குட் புகுந்த வள்ளி யாரோடும் பேசாது, விளையாடாது தனித்து இருந்தார்.

பேயொன்று ந்தன்மை பிறக்கு மளவுமே
நீ யொன்றுஞ் செய்யாமல் நில்

மகளின் குணங்கள் வேறுபட்ட தன்மையினை உற்றுநோக்கி மலைச் சாரலிலுள்ள தெய்வம் தீண்டியது போலும் என்றார்கள். சூரனை வதைத்த சூர்ப்பகையாகிய திருமுருகு தீண்டியதை அறியாத மடவார். சுப்பிரமணியப் பெருமானுக்கு வெறியாட்டு விழாவினைச் செய்தார்கள். குமரவேள் வெறியாடுவோன்மீது ஆவேசித்து தினைப்புனத்திலே தனித்தவளாய் இருந்த இப்பெண்ணை யாம் தீண்டினோம். யாம் உளம் மகிழ சிறப்பினை செய்தால் இக்குறை நீங்கும் என்றார். இதனைக் கேட்ட மாத்திரத்தே தலைவி எழுந்திருந்தது கண்டு செவிலித்தாய் முருகனைத் தியானித்து நேர்கடன் செய்தாள். இவ்வாறிருக்கும்போது பெருமான் தமது ஆட்கொண்டருளும் ஆடலைத் தொடர்ந்து செய்வாராய் தினைப் புனத்திலே வள்ளியைக் காணாது புலம்பித் திரிதலுற்றார்.

நம் காதலுக்குரியவள் எங்கு சென்றாள் என்று அங்கிருந்த பறவைகள், மிருகங்கள், சோலைகள், மலைகள் எல்லாவற்றையும் வினவுவார். வாட்டமுற்று, தளர்ந்து, மனம் வருந்தி, மயங்கி, வெய்து உயிர்த்து, குற்றடிச் சுவடுகளை நாடி, திகைப்புற்று, நின்று நடுங்கி, நங்கை தன்னைத் தேடினார். இஃது குமரவேளுக்கு உய்வார்கள் உய்யும்வகை ஆட்கொண்டருளும் திருவிளையாடலேயாம். பகலெல்லாம் அழகிய தினைக்கொல்லை எங்கும் திரிந்து வாடி, நடுயாமத்திலே, வேடர் சிறு குடிலுக்குப் போய் புறத்தே நின்றருளினார்.

பெருமானைத் தோழி கண்டு வணங்கி இராக் காலத்தில் இவ்விடத்துக்கு வருதல் தகாது. தலைவியும் நும்மைப் பிரியின் உயிர் தரியாள். ஆதலால் அத் தலைவியை உடன்கொண்டு சென்றருளுவீர் என்றாள். ஆன்மநாயகராகிய சுப்பிரமணியப் பெருமானை, அவ்விடத்தில் நிற்கச் செய்து வள்ளி நாயகியாரை அடைந்து ஆன்மநாயகர் உன்னைக் கவர்ந்து கரந்து செல்லும் பொருட்டு வந்துள்ளார். தாமதம் செய்யாது வருவாயாக என்று கூற இஃது அழகிதே என்று உடன் போக்குக்கு உடன்பட்டார். எல்லோரும் துயில் செய்யும் யாமப் பொழுதில் வாயிற்கதவை மெல்லத் திறந்து தலைவியை அழைத்துச் சென்று ஒப்படைத்தாள்.

அகக்கரணங்களும், புறக் கரணங்களும் துயில் கூடும் வகையறிந்து கூட்டுந் தோழி குருவருளேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகங்களையுடைய சர்வலோக நாயகராகிய பெருமானை, வள்ளி நாயகியார் தாழ்ந்து வணங்கி நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதரே, சிறுதொழில் எயினர் ஊரில் தீயனேன் பொருட்டு தெய்வ நறுமணங்கமழ்கின்ற மலர்ப்பாதம் நோவ இந்த இருள்யாமத்தில் தேவரீர் நடப்பதோ என இரங்கி தொழுது நின்றார். அவனருளாலே அவன்தாள் வணங்கி நின்றார். தோழி அருள்வள்ளலாகிய சுவாமியை நோக்கி கொடிய வேடுவர் காண்பாராயின் தீமையாய் விளையும். இக்கணமே புகழ்தற்கரிய நும் ஊருக்கு இத்தலைவியை உடன் கொண்டு சென்று காத்து அருள்புரியும் என்று கூறி அடைக்கலப் பொருளாக ஒப்படைத்தாள். முத்தம் விளைகின்ற முறுவலையுடைய வள்ளிநாயகியாரை, மூவிரு முகத்தினான் தன் கைத்தலந் தன்னில் ஈந்து கை தொழுது தோழி நிற்ப, சுவாமி அத்தோழிக்கு கிருபை செய்து நீ எம்பால் வைத்த கருணை தன்னை யாம் ஒருபோதும் மறவோம் என்று கூறியருளினார். தோழி வள்ளியை வணக்கஞ் செய்து, தழுவி, என் தாயே, ஐயனோடு விரைந்து உடன்போக்குச் செய்வாயாக என்று இனிது கூட்டி அவ்விருவரும் விடையீந்தருள மீண்டு சிறுகுடிலைச் சேர்ந்தாள்.

பெருமான் தேவியோடு ஒரு பசிய மரங்கள் செறிந்த சோலையுட் பிரவேசித்தருளினார்.

பரிபக்குவ ஆன்மா தன் இளைப்புக்கள் அனைத்துந் தவிர்ந்து இன்புறுகின்ற தத்துவாதீதச் சோலை அச்சோலை. அப்போது வைகறை விடியல் செய்ய நம்பிராசன் தேவியாகிய கொடிச்சி துயில் ஒழிந்து, நடுக்கமுற்று, தன் ஒப்பில்லாத புதல்வியைக் காணாதவளாய் எங்கும் தேடி, தோழியிடம் கேட்க, தலைவியும் யானும் துயில்கொண்டபின், அத்தலைவி செய்ததை யான் அறியேன் என்றாள். தோழி தலைவி எய்திய பேரின்பநிலை வாக்கு மனங்கெட்டாததாதலின் பின் செய்த தறிகிலேன் என மெய்மையே பேசினாள். வாய்தலிற் கதவை நீக்கி வள்ளியைக் கொடு சென்றுய்தமை தன்வயம் போய அருண்மயச் செயலேயாம்.

தம் மகளைக் காணவில்லையென்று தாய் வந்து கூற, மன்னன் கேட்டு புத்தி சுழன்று, கோபித்து கிளர்ந்து, காவல்களைக் கடந்து பேதையாகிய என் புதல்வியை எவனோ ஒருவன் களவிற் கொண்டு சென்றனன் எனக் கொதித்தான். போர்க்கோலங்கொண்டு தம் புதல்வியைத் தேடிக் காண சினத்தோடு புறப்பட்டான். வேடுவர்களும் மாயத்தாற் களவு செய்து வள்ளியைக் கொண்டுசென்ற கள்வனைத் தொடர்ந்து பற்றுவோம் என்று வில்லையும் அம்பையும் எடுத்து யுத்த சன்னத்தராய் விரைந்து சென்றார்கள். ஆரவாரம் கேட்டு வள்ளிநாயகியார் அஞ்சி மாஆறுமுகத்து வள்ளல் பூங்கழல் அடியில் வீழ்ந்து பொருமலுற்று கூறுவராயினர்.

"மீண்டும் இப்புன்புலக் குரம்பையுள் விட்டுதியோ" என்று அஞ்சிப் பொருமினர். வேடர்கள் சோலைக்குள் வந்து விட்டனர் என் சிந்தை துணுக்கம் உற்றுள்ளது. இனி என் செயலாவது யாதொன்றுமில்லை. வேண்டத் தக்கதை தேவரீரே அறிந்தருள்வீர். யான் அறிகில்லேன். விளம்பி யருள்க எனப் பிரார்த்தித்தார்.

"அன்றே என்தன் ஆவியும் உடலும் உடமை எல்லாமும்" எனப் பிரார்த்தித்தார்.

நன்மையாகிய சிவமாந்தன்மையை எய்திய நங்கையே பேரின்பப் பெருவாழ்வு வாழ்வாயாக. நும்மவரான ஐம்புல வேடுவர்கள் சூழவாராயின் கிரௌஞ்சமலையையும்; சூரன் மார்பையும் பிளந்த ஞானபோதமாகிய வேல் நம்மிடமுண்டு. வருந்தலை. இனிப் புன்புலச் சேட்டைக்கு அஞ்சி வருந்தற்க. யாம் யாவையும் சூனியம் செய்வோம் "என்பின் சும்மா இரு" என்று எம் பெருமான் உபதேசித்தருளினார். என்பின்- எம்முள் அடங்கி எம்மை முன்னிட்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மான் மகளைத் திருடும் திருடன், என்பின் சும்மா இரு என்றான். "ஆன்ம போத துணுக்கத்தை ஞானவேல் நீக்க வல்லதாம்" குறத்திரு மடந்தை இந்த உபதேச வார்த்தைகளைக் கேட்டு செவ்வேள் புறத்தினில் சும்மா இருத்தலும், வேடுவர்கள் கோபாவேசமாக அந்த சோலையை முற்றுகையிட்டார்கள். நம்பியும் வேடுவர்களும் அம்பு மழையைச் சொரிந்தார்கள். அவர்கள் விட்ட அம்புகள் எல்லாம் செவ்வேற் கருணையங் கடலின் மீது மென்மையான மலர்களின் நீர்மையுடையனவாய் மிருதுவாகப்பட்டன. அவ்வாறே படாமலே பட்டதற்கும் பைந்தொடி பதைத்து தேவரீர்மீது பாயுமாறு அம்புகளைச் செலுத்துகின்ற வேடுவர்களை சுடர் உடை நெடுவேல் ஏவி அழித்தருளல் வேண்டும் எனக்கூற, எம்பெருமான் திருவருளினால் அயலிற் கொடியாயமைந்து நின்றதாகிய சேவலானது தலைநிமிர்ந்து கூவி ஆரவாரஞ் செய்ய, நம்பியும், வேடுவர்களும் நிலையழிந்தவராய் இறந்து பூமியில் விழுந்தார்கள்.

அறிவுச் சேவல் மேலெழுந்து கூவ அறியாமைப் புலங்கள் அமைந்து ஒடுங்கியவாறு என்பதாகும்.

தந்தையும், தமையன்மாரும், சுற்றத்தாரும் வீழ்ந்து இறந்தமையை பைந்தொடி வள்ளிகண்டு பதைபதைத்து இரங்கிச் சோர, வள்ளிநாயகியாரின் தலையாய அன்பை உலகத்தாருக்குக் காட்டும் பொருட்டு பரீட்சை செய்வாராய், அச்சோலையைவிட்டு நீங்கி, சிந்தையில் அருளோடு செல்ல, வள்ளியும் பந்துக்களாற் சிறிதும் தொடக்குறாது தொடர்ந்து சென்றருளினார். நாரதமுனிவர் எதிரேவந்து, வள்ளிநாயகியாரைத் தவத்தாற் பெற்று வளர்த்த தந்தையையும், ஏனையோரையும் கோபத்தோடழித்து, வள்ளிநாயகியாரை உடன் கொண்டு போதல் கிருபா சமுத்திரமாகிய தேவரீருக்குத் தகுமோ எனக் கூற, குளிர்ந்த சோலைக்கு விசாகன் மீண்டு வந்தருளி நங்கையை நோக்கி இறந்துபட்ட உன் சுற்றத்தாரையெல்லாம் எழுப்புதி என்றருளிச் செய்ய, தேவரீரது அருள் மிக இனிது என்று கூறி வணங்கி உயிர் இழந்த கிளைஞர் எல்லாம் எழுக என்று வள்ளி அருள, குறவர் கோனும் ஏனையோரும் நல் உணர்வு தோன்ற எழுந்தனர்.

கருணைபொழி முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும், வேலும், ஏனைய படைக் கலங்களும் உடையவராய் தமது திருவுருவத்தை அந்த வஞ்சனையற்ற வேட்டுவர்களுக்கு காட்டியருள, அவர்கள் அடியற்ற மரம்போல விழுந்து பணிந்து போற்றி, எமது குலதெய்வத்தின் செயல் இஃதோ என்று ஆச்சரியம் உடையவராய் பின்வருமாறு வேண்டுகின்றார்கள்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளென்று மறிந்திலனே.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 11 | ஐப்பசி | 25 | புதன் | மெய்கண்டதேவர் |
| டிசம்பர் | 01 | கார்த்திகை | 15 | செவ்வாய் | ஆறுமுகநாவலர் |
| டிசம்பர் | 05 | கார்த்திகை | 19 | சனி | மெய்ப்பொருள் நாயனார் |
| டிசம்பர் | 15 | கார்த்திகை | 29 | செவ்வாய் | இராமநாதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியருளும் வேலவனை வணங்குவதெமது வேலை

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

"தோகை மேல் உலவும் கந்தன்
சுடர்க் கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
வணங்குவ தெமக்கு வேலை"

-சைவ எல்லப்ப நாவலர்-

முருகப்பெருமானுடைய வேலாயுதம் ஞானசக்தி. வள்ளியம்மை இச்சாசக்தி. தெய்வயானை கிரியா சக்தியாவர். வெல் என்னும் அடியில் இருந்து வேல் என்னும் சொல் தோன்றியது. வெல்லும் தன்மையுடையது வேல். இது முதனிலை நீண்ட தொழிற் பெயர். வெல்லும் தன்மையுடையது வேல். வெற்றியையே தருவதால் அதற்கு வெற்றிவேல்" என்று பெயர் வந்தது. இது வெளிப்பகையை மாத்திரமன்றி உட்பகையையும் அழிக்க வல்லது. அஃதாவது உள்ளத்தில் உள்ளே உறைந்து கிடக்கும் ஆணவம், கன்மம், மாயைகளை ஒடுக்குவதும் அழிப்பதுவுமாகும்.

பாம்பன் சுவாமிகள் வேலாயுதத்தினை "படை அரசு" என்று போற்றுவர். இதற்குப் "படை நாயகம்" என்றும் பெயருண்டு. வேலைக் குறிக்கும் பல பெயர்கள் உண்டு. அவை அயில், ஆரணம், உடம்பிடி, எஃகம், சக்தி, வாகை, விட்டேறு, குந்தம் என்பனவாகும். முருக வழிபாட்டுக்கு முந்தியது வேல் வழிபாடு ஆகும். வேலாயுதத்துக்கென்றே தனிக் கோவில்கள் அமைத்து வேலாயுதம் மட்டும் மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்து மக்களால் வழிபடப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலே வேல் மாத்திரம் மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள தனிக்கோவில்கள் அநேகமுண்டு. கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள சித்திரவேலாயுத சுவாமி கோவிலின் மூலஸ்தானத்தில் "வேல்" பிரதிட்டை செய்திருப்பதைக் காணலாம். தமிழகத்திலே சொர்ணாம்பிகையில் அமைந்துள்ள திருக்கோவிலின் கருவறையில் மிகப்பிரம்மாண்டமான "வேல்" பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

சூரபத்மனுடன் போர் புரிவதற்காக போர்க்கோலம் பூண்டு வந்த கந்தப் பெருமானுக்குத் தந்தையாய சிவபிரான் ஆசீர்வதித்து வழங்கிய பதினொரு ஆயுதங்களுடன் மிக மகிமை வாய்ந்த வேலாயுதத்தையும் அளித்தார் என்கிறது கந்தபுராணம். ஆயினும் தாயாகிய உமாதேவியானவர் புதல்வனாய அறுமுகனிடம் "வேல்" கொடுத்தமை வெகு சிறப்பாக "எம் புதல்வா வாழி; வாழி; எனும்படி வீறான வேல்தர என்றும் உளனே மநோகர" என்று பாடுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள். தாயாரால் "சக்திவேல்" தனயனுக்கு வழங்கப்பட்ட செய்தி கல்லாடம் என்ற நூலிலும் காணப்படுகிறது.

வேலாயுதப் பெருமானுடைய வேல் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களை முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய மூர்த்தங்களில் அவரவர் சக்தியருடன் இணைந்து செயலாற்றுவிப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் ஒருவரேயாவர். இதனைப் "பஞ்சகிருத்தியம்" என்றும் கூறுவர். பிரகாசத்தால் கதிரவன் கருணையால் குளிர்ந்த சந்திரன் பகைவர்களை அழிப்பதால் எமன். எளிதாக மிக நீண்டதூரம் போய் உடனே மீண்டும் வருவதால் மனம் என்று வேலின் பெருமையைப் போற்றுகிறார் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள். வீரக் கருணையையும் ஈரக்கருணையையும் உடையது வேல். அழிப்பதும் அளிப்பதும் அனைத்தும் வேலே!

சிவந்த நிறமுடையது வேல். செம்மைநிறமுடையவன் முருகன் "கையோ அயிலோ, கழலோ முழுதும் செய்யோ மயில் ஏறிய சேவகனே" என்று அருணகிரிநாத சுவாமிகள் பாடியுள்ளார். "குங்கும வர்ணாய நம" என்பது முருகனது அஷ்டோத்திர நாமம். வேல் தொடர்பான சுவையான புராணக்கதைகள் இலக்கிய வரலாறுகளில் உள்ளன. திருவிளையாடற் புராணத்தில் கடல்சுவற வேல் விட்ட படலத்தில் பாண்டியமன்னன் கடல் கடந்து சென்று தனது கைவேல் கொண்டு பல நாடுகளை வென்று தனதாக்கியமை கண்டு பொறாமை கொண்டான் இந்திரன். அதனால் கடலைப் பெருகச் செய்து மன்னனின் நாட்டை அழிக்க ஏவுகிறான். மன்னவனுடைய நீதிநெறி ஆட்சி கண்டு கருணை கொண்ட இறைவன் சித்தர் உருவம் தாங்கி வந்து கனாவில் தோன்றி வேந்தனிடம் "வெற்றி மிக்கவேற் படையை ஏவுக" என்று கூறி மறைந்தார். கனாவிலிருந்து விழித்த அரசன் பொறுத்து வாழாவிருப்பது கண்டு சித்தர் "அப்பனே நீ காலம் தாழ்த்தி நிற்பது எதற்காக? வெகுண்டு கடல் வடிவமாக வந்துள்ள பகை நீங்கும்படி வேற்படையை எறிந்து வெற்றிகொண்டு உலகிற்கு வருகின்ற அழிவை நீக்கு" என்றார் அவ்வாறே அரசு வென்றார்.

பரம்பொருளான வேலாயுதப் பெருமானது வேல் பேரறிவு, பேராற்றல், பேரருள் ஆகிய மூன்றும் நிறைந்து ஒன்றி நின்று விளங்குவதே அதன் வடிவமாகும். மனிதன் பெறுதற்கரிய பேறுகள் எல்லாவற்றிலும் அறிவுக்கு ஆழம். அகலம், கூர்மை ஆகிய மூன்று தன்மைகளுண்டு. இப்போதிதனை வைத்து வேலாயுதத்தை நினைவு படுத்துங்கள். அதன் அடிப்பகுதி ஆழமாகவும் நடு அகலமாகவும் நுனி கூர்மையாகவும் இருத்தலைக் காணலாம். எமது நாட்டுப் புறத்திலே அறிவு குறைந்தவனை கூறுகெட்டவன் என்றும் "கூர்மழுங்கி" என்றும் கூறுவதைக் காணலாம். மணிவாசகப் பெருமானும் "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று பாடுகின்றார். எனவே அறிவு ஞானம் வேல் என்பன ஒரு பொருட் சொற்கள் என்கிறார் வாரியார் சுவாமிகள். இத்தகைய வேலாயுதத்தின் அருமை பெருமைகளைப் போற்றி வேல் விருத்தம், வேல் வகுப்பு வேல் அமுதம். வேல் பத்து ஆகிய நூல்களை அருணகிரிநாத சுவாமிகள் ஆக்கியுள்ளார். "வேல் அலங்காரம்" என்னும் 100 பாடல்கள் கொண்ட நூல் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளால் பாடப்பட்டுள்ளது. சத்துரு சங்காரவேல் பதிகம், வேல் வணக்கம், வேல் அட்டகம், வேல் பாட்டு, வேல் தெய்வமாலை முதலான பல நூல்களும் வேலின் புகழ் பாடுகின்றன. கந்தன் கழலடி அறிவே உருவமானது. அறிவின் உருவம் வேலாயுதம். அஃது அறுமுகனை விட்டகலாதிருக்கும் அறிவு ஆழமானது. அகலமானது கூர்மையானது. நல்லறிவு பெற நாடுபவன் ஆழமாக அகலமாக, கூர்மையாக நாடவேண்டும். நுனிப்புல் மேயும் பிராணிகளாக இருக்கக்கூடாது.

கல்வி கேள்விகளில் சிறந்த அறிவுசால் பெரியோர்களை அணுகி அறிவைத் தேட வேண்டும். இதனையே கல்வி என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவப் பெருமான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்க கசடறக் கற்க கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்றார்.

குறள்- 391.

குற்றமற்ற நூல்களைத் தேடிப் பெற்று குற்றமறக்கற்று கற்றபடி ஒழுக வேண்டும். காட்டுவழி ஒருவர் செல்கிறார். வழிப்பறி செய்ய வருகிறான் வேடன். அவனது அம்பு "வேல்" வடிவானது. அதனால் வள்ளுவர் பார்க்கிறார். மக்களை வருத்தி வரி வசூலிக்கும் கொடுங் கோலரசனை எண்ணுகிறார்.

"வேலொடு நின்றான் இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு" என்கிறார்.

குறள்- 552.

மலையரசன் மகளாகிய பார்வதி தேவிக்கும் பரமசிவனுக்கும் கைலாயத்தில் திருக்கல்யாணம் நடைபெறவிருந்தது. முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கிம்புருடர் நாரதர் ஆதியோர் பார்வையாளராக வந்திருந்தனர். அதனால் தென்மேற்கெல்லை உயர்ந்து வடகீழ் எல்லை தாழ்ந்தது. இதனைச் சமப்படுத்த அகத்திய முனிவரைப் பணிக்க உலோபா முத்திரையுடன் பொதிய மலையை அடைந்தார். அவ்விடமொழி தெரியாமையால் குன்றுடை வேலவன் தமிழ் கற்பித்தருளினார். நல்லியற் கோடன் ஒரு சிற்றரசன். நீதியாக ஆட்சி செய்து மக்கள் போற்ற வாழ்ந்தவன். முருகப்பெருமானிடம் அளவற்ற பக்தி கொண்டவன். அதனால் செல்வமும் சிறப்பும் பெற்று வாழ்ந்தவன். இதனால் பேரரசர் அவன்மீது பகை கொண்டு போர் தொடுத்தனர். அவர்களை வெல்ல முடியாதெனக் கண்ட சிற்றரசன் முருகப் பெருமானிடம் வேண்டுதல் செய்து விட்டு உறங்கலானான். அவன் கனாவில் தோன்றிய வேலன் கோவில் குளத்தில் நிற்கும் தாமரைப் பூக்களைப் பறித்து இதழ்களை வீசிவிடும்படி பணித்து மறைந்தார். பேரரசர்கள் சுலபமாக வென்று விடலாமென்று படை நடத்தி வந்தவர் பதைத்தோடும் படியாக இதழ்கள் வேலாக மாறி கண், காது, மூக்கு, நெஞ்செலாம் துளைத்து அலற வைத்தது. இவ்வகையில் அமைந்த சிறப்புமிக்க வேலின் பெருமையை விளக்கும் நிகழ்வு அடியேன் 2003ஆம் ஆண்டு தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தபோது தற்செயலாகச் சென்னை "பொட்" நகர் கலா சேத்திரா காலனியில் அமைந்துள்ள முருகப் பெருமான் கோவிலில் வழிபாட்டுக்குச் சென்றபோது முன்னேயுள்ள தனிமண்டபத்தில் மிகப்பெரிய "வேல்" ஒன்று பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது. கோவிலின் முகப்பில் பழமுதிர்சோலை சந்நிதானம் என எழுதப்பட்ட வளைவு இருந்தது. இதன் மூலஸ்தானத்திலும் சக்திரூபமாக வேல் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது. இங்கு வளர்பிறை சஷ்டித் திதி நாட்களில் "வேல் மாறல்" என்னும் பதிகம் பாராயணம் செய்யப்படுவதை நேரில் காணும் சந்தர்ப்பம் முருகனருளால் கிடைத்தது. மிகவும் புதுமையான முறையில் அப்பாராயணம் அமைந்திருந்தபடியால் பஜனைக் குழுவின் தலைவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் கூறியவை "இது ஒரு வேலுக்கு வணக்கம் செய்யும்; வேலாயுதத்தைச் சிறப்பிக்கும் வழிபாடாகும். இது "வேல் மாறல்" பாராயணமாகும். அருணகிரிநாதர் அருளிச் செய்த வேல் வகுப்பு நூலின் பாடல் வரிகளில் 16 வரிகள் முன்னும் பின்னும் இடையிலும் நகர்த்தி 64 அடிகள் வருமாறு பாராயணம் அரைமணி நேரம் மாலைநேரம் குழுவினரால் தினமும் செய்யப்படுகிறது. ஒரு மண்டல காலம் பாராயணம் செய்து வேலாயுதத்தை வழிபடச் சகல செல்வங்களும் கைகூடும். சத்துரு பயம் நீங்கும். தீவினை அகலும். வள்ளிமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் அளப்பரிய முயற்சியினால் தமிழகமெங்கும் இருக்கும் முருகன் அடியவர்கள் "வேல் மாறல்" பதிகத்தைப் பாராயணம் செய்து புத்திக் கூர்மை பெற்றுச் சகல சம்பத்துக்களும் அடைந்து சிறப்புடன் வாழ்வது கண்கூடு. இதனால் இவ்வூர் "வேலூர்" எனவும் வேல் கோட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. இங்கும் நல்லூர் கந்தசுவாமி கோவிலைச் சூழவுள்ள பகுதி கந்தகோட்டம் எனவும் செல்வச்சந்நிதிச் சுற்றாடல் சந்நிதிக் கோட்டம் என்றும் கூறப்படுகிறது.

எமது சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் கதிர்காமத் தல யாத்திரையின்போது வேல் ஏந்திவரும் வேல்சாமி கூட்டத்தாரைக் கைகூப்பித் தொழுதற்குரியராவர். ஆச்சிரம சுவாமியின் பூஜை, பஜனை ஆராதனைகளை நேரில் கண்டு களிப்புற்றவன். பதுளை மண்சரிவு தந்த துன்பியல் நிகழ்வில் ஓடி உதவிய சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவுகரம் நீண்டது கேட்டு இன்புற்றேன்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

## தயை புரிய வருவாயையா!

வன்னியிலிருந்துன்னை வணங்கித் துதிக்கின்றேன்
வந்தருள வேண்டும் முருகா! - நின்
சந்நிதியில் வந்து தொழ முடியாது தவிக்குமென்
சஞ்சலத்தைத் தீருமையா!
போர் முறையால் கால் இழந்து, புலம்பெயர்ந்து நானிருந்தேன்
பொங்கிடுதே நெஞ்சில் துன்பம்! - இங்கு
வேர் அறுந்த மரமாக விரக்தியுறும் எனைக் காக்க
வேலா நீ வந்தால் இன்பம்!
இன்னுயிர்களை இழந்தேன்! இல்லிடத்தையும் இழந்தேன்
இங்கெனக்குத் துணை வருவார் யார்? - என்
பன்னிருகை வேலவனே! பரிதவிக்கும் எனை நீயும்
பரிவுகொண்டு கடைக்கண்ணால் பார்!
மீளக் குடியேறவென்று மீண்டுமெந்தன் ஊர் சென்றேன்
மிகச் சிறிய குடிசை அமைத்தேன்! - கடற்
கோளால் வந்த மழை, காற்றால் என் குடிசை
தரைமட்டம் ஆகக் கண்டேன்!
இயற்கையும் எம்மீது சீற்றமே கொள்வதை
இன்னும் நீ பொறுக்கலாமோ? - போர்த்
துயரங்கள் தீருமுன் துணைவா என் வாழ்வினில்
தொல்லைகள் தொடரலாமோ?
நான் பிறந்த மண்ணிலே நான் வாழ வழியின்றேல்
நான் எங்கு செல்வேனையா? - நினைத்
தான் நம்பி வாழ்கின்றேன் தமிழ்த் தெய்வம் நீயன்றோ?
தயை புரிய வருவாயையா!!

*-கி. குலசேகரன்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
ஞானச்சுடர் 2015 ஐப்பசி மலர்

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 20. மெய்ப்பொருள் ரமணன்

வந்தவாசியருகில் தேசூரில் 1871இல் பிறந்த அகிலாண்டம்மாவை தேசூரம்மா என்று பொதுவாக அழைப்பார்கள். மூன்று சகோதரர்கள் ஆறு சகோதரிகளுக்கிடையில் பிறந்தவர். ஏழு வயதில் திருமணமாகி இரண்டு வருடங்களில் விதவையாகி, பின் அன்னையின் அரவணைப்பில் வளர்ந்த இவர், அந்த ஊர்க்கோவிலின் மூர்த்திக்காக பூ கட்டுவதிலும், வரும் யாத்திரிகர்களுக்கு அன்னமிடுவதிலும் காலம் கழித்தார்.



1902இல் திருவண்ணாமலைக்கு முதன்முதலாக வந்த தேசூரம்மா, ஆலமரக் குகையில் (சத்குரு ஸ்வாமி குகை) வசித்த, பிராம்மண ஸ்வாமி என்றழைக்கப்பட்ட இளந்துறவியைப் பற்றி களங்கமற்ற சுத்த யோகி என்று கேள்விப்பட்டு காணிக் கையாகக் கொஞ்சம் கற்கண்டைக் கையுடன் எடுத்துக் கொண்டு குன்றேறிச் சென்றாள். தண்ணீர் கண்டிராத தேகம். கௌபீனந் தரித்த திருமேனி; மெலிந்து நலிந்த துறவியைச் சூழ்ந்திருந்த தண்ணொளி; எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மாவை ஊடுருவும் அதன் அருட்பார்வை; இவை தேசூரம்மாவைச் சிறைப் படுத்தி அடிமை கொண்டன! மனம் மிக உருகிய நிலையில் தேசூர் திரும்பினார். அடுத்த முறை தரிசிக்க வந்தபோது, பகவான் விருபாக்ஷ குகைக்கு மாறியிருந்தது. இம்முறை அவள் மனம் அன்பினால் நிறைந்திருந்தாலும், பகவான் சந்நிதியில் விவரிக்கவொண்ணாத பக்தியும், நடுக்கமும் அவளை ஆட்கொண்டன. தன்னுடைய "நினைவு"களில் தேசூரம்மா சொல்கிறார்.

பண்டைக்கால வழக்கத்தில் ஒரு ஞானியை அணுகும்போது மௌனம், பக்தி, துணிவு இவை மூன்றும் கைக்கொள்ளப்பட வேண்டும். பகவான் சந்நிதியில் இவையெல்லாம் மனித பிரயத்தனமின்றித் தானாகவே நிறைவேறுகின்றன.

தேசூரம்மா அடிக்கடி அண்ணாமலைக்கு வரலானார். பிஷைக்கு வேண்டிய பொருட் களைச் சேகரித்துக் கொண்டு அருணாசலம் வந்து தங்குவார். பகவானுக்கும், சேஷாத்ரி ஸ்வாமிகளுக்கும், பின்னர் விடோபா ஸ்வாமிக்கும்- தினசரி பிஷையளிக்கும் பேறு பெற்றார். இவர்தான் தேசூரைச் சேர்ந்த மஸ்தான் ஸ்வாமியை பகவானுக்கு அறிமுகப்படுத்தினார். எளிய, ஆனால் முதிர்ந்த ஆன்மாவான மஸ்தான் சுவாமி, பக்தர்களால் நூற்கப்பட்ட ('ஆண்டவன்' விஷயமாக முன் எழுதப்பட்டதைப் பார்க்கவும்) நூலால், பகவானுக்காக தம் தறியில் துணி நெய்து தருவார். 1920-25இல் திருடர்கள் ஆச்ரமத்துக்குள் புகுந்தபோது, ஓலைக்குடிலில் பகவானுடன் இருந்தவர்களில் இவரும் ஒருவர். இதற்கு முன்பே விருபாஷ குகையிலேயே பகவானின் அருளைப் பெற்ற பாக்கியசாலி இவர். மஸ்தான் சுவாமி தன்னிடம் தெரிவித்ததை, குஞ்சுஸ்வாமி அவர் சொற்களிலேயே சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் பகவானிடம் வந்தபொழுது அது விருபாக்ஷ குகைக்கு வெளியில், அருளும் தயவும் திடஞானமும் ஒருசேர ஒளிவீசும் பார்வையுடன் கற்சிலைபோல் அமர்ந்திருந்தது. ஒரேயொரு திருக்கண் நோக்கினால் என்னையும் தன் நிலையில் நிறுத்திவிட்டது. எட்டுமணி நேரம், சற்றும் சோர்வென்பதின்றி, தன்னில் லயித்து, சாந்தி நிலவ அப்படியே நின்று கொண்டிருந்தேன். அந்த நாட்களில் பகவான் தன் ஒரு அருள் பார்வையாலேயே எங்களை ஊடுருவி, உள்ளக் கதவுகளைத் திறந்து எங்களை அடியோடு மாற்றிவிடும். ஒரு கருணைக்கண் வீச்சால் தானாகவே அது எங்களை ஆக்கியபின் கேள்விக்கு இடமேது அங்கே?

மஸ்தான் சுவாமியின் உதவியுடன் தேசூரம்மா தேசூரில் ரமணானந்த மடாலயம் ஸ்தாபித்தார். அதன் ஒரே நோக்கம் தினம் தினம் அதிகரித்துக் கொண்டே வரும் வெளியூர் ரமண பக்தர்களுக்கு உணவளிப்பதே. கட்டப்படவிருக்கும் மடத்தின் வரைபடத்தை பகவானுக்குக் காண்பித்ததும், "சரி, சரி மடம் பிரமாதமாக இருக்கும் போலிருக்கிறதே" என்றது.

மடத்தின் கும்பாபிஷேகம் ஆனபிறகு, தேசூரம்மா ஆச்ரமம் வந்ததும், பகவான் அவரிடம், கும்பாபிஷேகம் ஆயிற்றா? என்று கேட்டது. அச்சமயம் பகவான் கையில் கான்சர் பிளவை தோன்றி விட்டிருந்தது. இத்தகவலை யாரோ தேசூரம்மாவிடம் தெரிவித்திருந்தார்கள். அவர் மிகவும் தயங்கியவாறு, "பகவான் கையில் அது என்ன?" என்று கேட்டார். பகவான், உன்னிடம் யார் இதெல்லாம் சொன்னது? இவர்களா? என்றபடி கையைத் தடவிக்கொண்டே ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று, மேலும் பேசுவதற்கிடமின்றிச் செய்துவிட்டது.

தேசூரம்மா பகவானின் கடைசி காலத்தில் வந்து பார்த்துவிட்டு, ஒரேயடியாக உடைந்து போய்விட்டார். அறையை விட்டு அவர் வெளியேறியபின், பகவான் அவரைத் தேற்றுவதற்காக, ஒரு தொண்டர்மூலம், இந்தப் பூத உடலுக்காக வருந்துவானேன்? என்று சேதி சொல்லியனுப்பியது. இச்செய்தியாலும், பகவானின் சாந்நித்யம் தொடரும் என்ற உறுதியாலும் தேசூரம்மா தைரியமுற்றார். 1961ஆம் வருடம் 91 வயதில் தேசூரம்மா பகவானடி சேர்ந்தார். இரு திட ரமண பக்தர்களான தேசூரம்மா, மஸ்தான் சுவாமியின் சமாதிகள் அனேகரைத் தேசூருக்கு இழுக்கின்றன.

* * * * * *

பகவானின் காருண்யத்தை விளக்கும் செயல்களை, அதுவும் அந்த இறுதி நாட்களில் நிகழ்ந்தவைகளை எடுத்துச் சொல்வதில் பலராம ரெட்டியாருக்கு நிகர் அவரே. பின்வரும் நிகழ்ச்சிகள் அவரிடமிருந்து சேகரித்தவை.

அடியாரிடம் பகவான் காண்பித்த கருணை அளப்பரியது. அதன் உலக வாழ்வின் கடைசிக் கட்டத்தில் இது அதிக ஸ்பஷ்டமாக வெளிப்பட்டது. தாங்கொணா வலியின் கொடுமையையும், ஊசலாடும் பலவீனத்தையும் மீறி, யார் தடையையும் பொருட்படுத்தாது, வரப்போகும் பிரிவைத் தாங்கத் திராணியின்றி துடிதுடிக்கும் பக்த கோடிகளின் ஆறுதலுக்காக, கடைசிவரை உறுதியாக, அடியாருக்கு தரிசனம் அளிக்கும் விஷயத்தில் அசையாது நின்றது, அந்த வரம்பேயில்லாது பொங்கும் கருணையினால்தான்.

டாக்டர் கரம்சந்தானி, ஜில்லா மெடிக்கல் ஆபிசர். வந்து பார்த்துவிட்டு பகவானின் ஆபத்தான நிலையை அறிந்து, வேலூர் போய் தனது மனைவியை அழைத்து வந்தார். டாக்டர் சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பகவானுக்கு ஆரஞ்சு ரசம் அளிக்க வேண்டுமென்று எனக்கு மிகுந்த ஆவலிருந்தது. பழம் இங்கு அகப்படாததால் வேலூரிலிருந்து வாங்கி வந்தேன். என் மனைவி அத்தியந்த சிரத்தையுடனும், பய பக்தியுடனும் அவற்றில் சாறு பிழிந்து பழரசம் தயாரித்து எடுத்துக் கொண்டு ஆச்ரமம் போனோம். குளியலறைக்குப் போய் வருவது மிக சிரமமாக இருந்ததால், பகவான் சில நாட்களாக திரவங்களைக் கூட உட்கொள்வதை நிறுத்தியிருந்தது. எனினும் ஆவலினால் உந்தப்பட்டு, துணிச்சலுடன் பழரசத்தைச் சமர்ப்பித்தேன். பகவான் இரண்டு தரம் மறுத்துவிட்டது. என் மனைவியின் தீவிர ஆசை நிறைவேறாமல் போனதால் அவளுக்கு ஏற்படப்போகும் ஏக்கத்தையும் மனவேதனையையும் நினைத்து வருந்தி, நான் மௌனமாக மனத்துள் பகவானை வேண்டி, என் ஆன்ம பலமெல்லாம் ஒன்று திரட்டி மன்றாடினேன். என் மானசீக முறையீட்டைக் கேட்டதுபோல் பகவான், உடனே ஆரஞ்சு ரசம் கொடு என்று கேட்டு வாங்கிக் குடித்தருளி, எங்களுக்கு மனம் உடையும் ஏமாற்றத்தைத் தவிர்த்தது. ஒரு பக்தனின் தீவிர மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்காகவே பகவான் அதைக் கேட்டு வாங்கிக் குடித்தது. இந்தக் கருணையை என்னவென்று சொல்வது?"

மற்றொரு எளிய, ஆனால் இனிய நிகழ்ச்சி பகவானின் கடைசி நாட்களில் நடைபெற்றது. என் தங்கை தன் கணவன், குழந்தையுடன் பகவான் தரிசனத்துக்காக வந்திருந்தாள். அந்த அந்திம நாட்களில் பகவானின் சிறிய அறைக்குள் நுழைய அனுமதி கடுமையாக மறுக்கப்பட்டிருந்தது. நான் எப்படியோ சர்வாதிகாரியிடம் மன்றாடி தனி அனுமதி பெற்றிருந்தேன். நானும் குழந்தையுடன் என் தங்கையும் பகவானின் அறைக்குள் (இன்று நிர்வாண அறை) நுழைந்தோம். அவள் கணவன் கூட அனுமதிக்கப்படவில்லை. பகவானை நமஸ்கரிப்பதற்காக குழந்தையைத் தரையில் விட்டாள் தங்கை. அதுவோ அழ ஆரம்பித்து விட்டது. தாங்கமுடியாத, கொல்லும் வலியில் இருந்த பகவான், சிரமப்பட்டு முகத்தைத் திருப்பி, குழந்தையைப் பார்த்து, அதை சமாதானப்படுத்துவதற்காக "த்சு, த்சு" என்று, சாதாரணமாக தாய்மார்கள் குழந்தையின் அழுகையை நிறுத்த உபயோகிக்கும் ஓசையை எழுப்பியது. உடலின் கடும் வலியின் நடுவிலும் பகவானின் கருணையையும், அன்பையும் கண்டு என் கண்கள் குளமாயின.

(தொடரும்...

**காவ லாக நின்றுமே**
**காப்பான் எம்மை நாளுமே**

தேவர் குலமே காத்தவன்
தெய்வா னையையும் மணந்தவன்
ஆவ லோடு பழம்பெற
அகிலம் சுற்றி வந்தவன்
நாவல் பழத்தைப் பெற்றுமே
ஞானம் ஔவைக் குரைத்தவன்
காவ லாக நின்றுமே
காப்பான் எம்மை நாளுமே.

-வ. யோகானந்தசிவம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவிருளைப் போக்கும் திருக்கார்த்திகை தீபம்

– திருமதி சந்திரலீலா நாகராசா அவர்கள் –

கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகனுக்கு அனுஷ்டிக்கும் விரதம் திருக்கார்த்திகையாகும். இந்நாளில் ஆலயங்களிலும், வீடுகளிலும் விளக்கீடு மூலம் பலவிதமான தீபங்களை ஏற்றி வழிபடுகிறார்கள். இறைவனுக்குரிய கிரியை வழிபாட்டில் விளக்கேற்றுதலும் அடங்கும். எல்லோரும் அறிந்த புராணக் கதையில் பிரம்மா, விஷ்ணு தானே பெரியவன் என்ற அகங்காரத்தைப் போக்கி சிவபெருமான் சோதிவடிவாக அடி, முடி காணாதவாறு பரப்பிரம்மமாக காட்சியளித்த நாளே திருக்கார்த்திகையாகும். இதைக் குறிக்கும் முகமாகவே தீபம் ஏற்றி வந்தனை செய்யப்படுகிறது. இதனால் பக்தர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். இறைவன் ஐம்பூதங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான்.

கார்த்திகை மாதம் மங்களகரமானது. எம்மிடமுள்ள அஞ்ஞான இருள் அகன்று ஞானமாகிய ஒளி மிளிர்வதற்காக தீபமேற்றுகின்றோம். இருளை நீக்கி ஒளியை நல்குவதை திருமூலர் இப்பாடலில் காட்டுகின்றார்.

“விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே”

திருவருள் ஞானமாகிய விளக்கினை ஏற்றி வெளியாகிய பரம்பொருளை உணர்வீர். ஒளியின் முன்பு உயிரைப்பற்றிய மும்மலங்களும் நீங்கும். அருள் ஒளியைப் பெற்றவர்கள் ஞானச்சுடர் விளக்காகத் திகழ்வார்கள் என்பது கருத்து.

சூரனைச் சங்காரஞ் செய்ய சிவபெருமானின் ஆறு முகங்களான ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசானம் மற்றும் அதோ முகத்திலுதித்த ஆறு குழந்தைகளைச் சரவணப் பொய்கையில் வளர்த்த கார்த்திகைப் பெண்களின் தொண்டைப் பாராட்டி முருகன் கோயில்களில் விளக்கீடு குமாராலய தீபமாக ஏற்றப்படுகிறது. முருகனுக்கு கார்த்திகேயன் எனும் நாமமும் உண்டாயிற்று. சர்வாலய தீபத்தன்று வீடுகளிலும் அகல் விளக்கு, சிட்டி விளக்கு, குத்துவிளக்கு, பந்தங்கள் மூலம் தீபம் ஏற்றி வழிபடுவார்கள். விஷ்ணு ஆலய தீபத்தன்று விஷ்ணு ஆலயங்களிலும் விசேட பூசையும் தீபம் ஏற்றியும் வணங்குவர். ஆலயங்களில் பனை ஓலைகளால் மூடி மறைத்து சொக்கப்பனை கொழுத்துவது வழமையான செயல். கருவறையிலிருந்து பெரிய தினைமாவால் செய்யப்பட்ட விளக்கை உள்ளே எரிப்பர். சுவாமி வெளியே வீதியுலா வருவார்.

அணையப் போகும் விளக்கின் திரியை எலியொன்று தூண்டி பிரகாசமடையச் செய்ததால் மறுபிறவியில் மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து திருமாலுக்கு (வாமனன்) மூன்று அடி மண் கொடுத்தது. நிலவுலகையும், வானுலகையும் அளந்த பெருமான் மூன்றாவது அடியை பலியின் சிரசில் வைத்து பாதாள உலகை ஆளவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைப் பௌர்ணமியன்று தாருகாசுரனின் மூன்று புதல்வர்களான கமலாட்சகன், தாரகாட்சன், வித்யுன்மாலியை பொன், வெள்ளி, இரும்பு கோட்டையுள் வைத்து தன் புன்சிரிப்பால் சாம்பலாக்கியவர் சிவபெருமான்.

திரிசங்கு மன்னன் தான் இழந்த நாட்டை கார்த்திகைத் தீப விரதமிருந்து பெற்றான். அதேமாதிரி பகீரதனும் நாட்டைப் பெற்றான்.

திருநாவுக்கரசு நாயனார் திருவையாற்றில் இருந்தபோது பாடிய திருத்தாண்டகத்தில் இறைவனைப் பல விதத்திலும் ஏற்றி ஒளிவடிவானவன் என்று துதிப்பதைக் கீழே காணலாம்.

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாசமலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி"

திருமாளிகைத் தேவர் அருளிய திருவிசைப்பாவில் "ஒளி வளர் விளக்கே உலப்பிலாவொன்றே" என்று மனதாரப் பாடினார். மாணிக்கவாசகர் பாடிய அருட்பத்து "சோதியே சுடரே சூழொளி விளக்கே..." எனச் சிவனை சுடராயும், சோதியாயும் விளம்பினார். அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணையாகிய இராமலிங்க சுவாமி என்னும் வள்ளலார் சிவன் ஒளி வடிவமானவர் எனக் கருதி ஒளியையே தியானித்து சோதியிலே ஐக்கியமானார்.

நினைத்தாலே முத்தி தரும் பஞ்சபூதத் தலங்களில் தேயுவாக (அக்னி) வழிபடப்படும் திருவண்ணாமலைத் திருத்தலத்தில் ஏற்றப்படும் மகா கார்த்திகைத் தீபத்தை தரிசிப்பதற்கும், கிரிவலம் வருவதற்கும் பூர்வ புண்ணிய பலன் வேண்டும். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் தீபத்தைத் தரிசித்து பாவங்களைப் போக்கி பரிசுத்தமடைவர். ஒவ்வோர் ஆண்டும் பத்துநாள் திருவிழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டு பரணி தீபமும், பின்பு திருக்கார்த்திகைத் தீபமும் மலையுச்சியில் ஏற்றப்படும். பெரிய செப்புக் கொப்பரையில் கிலோக் கணக்கில் நெய்யூற்றி நூலைத் திரியாக்கி ஏற்றுவர். அத்தீபம் தெரிந்த பின்பே வீடுகளில் தீபம் ஏற்றுவர். அண்ணாமலையார் சமேத உண்ணாமுலையம்மனைத் தொழுபவர்களின் வினைகள் நீங்கிவிடுமென்று தோணியப்பரான சம்பந்தர் பாடினார்.

"உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணித் திகழ
மண்ணார்ந்தன அருவித்திரண் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ண மறுமே"

திருவண்ணாமலைத் தீப தரிசனத்தைக் காண நமக்கு இரண்டு கண்களும் போதாது. பகவான் ரமண மகரிஷியும் திருவண்ணாமலைக் குகையில் ஞானத் தவமியற்றி ஈசனை வழிபட்டுச் சமாதியடைந்தார். திருவண்ணாமலையுச்சியில் தீபவழிபாடு நடப்பதைப் பின்வரும் பாடலில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கங்கையணி தீபம் கற்பூர தீபமலை
மங்கையொரு பங்கில் வளர் தீபம்
பங்கையன் மால் விண்டாடு நேடும் வரை
மேவிய அண்ணாமலையில்
பண்பாடும் கார்த்திகை தீபம்"

திருவண்ணாமலை, அருணாசலம், அருணகிரி, சித்தர் மலை, சிவமலை ஆகிய பல பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

திருமயிலாப்பூரிலுள்ள கபாலீச்சுரரையும், கற்பகவல்லியையும் வணங்கிய சம்பந்தர் பூம்பாவையின் எலும்புள்ள குடத்தினை வாங்கி பூம்பாவை என விளித்து மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல், கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல் உண்மையெனில் உலகர் முன் வருகவென உரைப்பார். தொடர்ந்து

"மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சர மமர்ந்தார்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல் கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"

இப்பாடலைப் பாடியதும் உருவம் பெற்றாள். தொடர்ந்து எட்டுப் பாடல் பாட பன்னிரண்டு வயது வளர்ந்தாள்.

"விளக்கீடு காணதே போதியோ பூம்பாவாய்" பாடி முடிய பூம்பாவை குடத்தினின்று அழகாகத் தோன்றினாள்.

மங்களகரமான இக் கார்த்திகை மாதத்தில் நாமும் எமது பாவ வினைகள் இல்லாது போக, புற இருளைப் போக்குவது மட்டுமல்லாது எம்முள்ளிருக்கும் அஞ்ஞானம் என்னும் அக இருளைப் போக்க திருக்கார்த்திகை தீபத்தை ஏற்றி வழிபட்டு அவனருளைப் பெறலாமே.

"விளக்கொளியாகிய மின்கொடியாளை
விளக்கொளியாக விளக்கிடு நீயே
விளக்கிடு மெய்நின்ற ஞானப் பொருளை
விளக்கிடுவார்கள் விக்கினர் தானே"

"அண்ணாமலையானுக்கு அரோஹரா"

## கந்தசஷ்டிகால விசேட நிகழ்வுகள்

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடாவருடம் இடம்பெறும் கந்தசஷ்டிகால நிகழ்வு எதிர்வரும் 12.11.2015 வியாழக்கிழமை தொடக்கம் 16.11.2015 திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளதால் மாலை 7.00 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் ஆசிரியர் அவர்களது தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| இ. கார்த்திகேசன் | கனடா | 10000. 00 |
| க. இராசேந்திரம் | வரணி | 1000. 00 |
| திரு சந்திரன் குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| திரு தங்கதாஸ் குடும்பம் | ஜேர்மனி | 1000. 00 |
| அ. தர்ஷினி குடும்பம் | கனடா | 500. 00 |
| R. பரமேஸ்வரலிங்கம் (சிற்றி பேக்கறி மூலம்) | சுவிஸ்லன்ட் | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| தே. பாலரூபன் குடும்பம், கு. கார்த்திகா குடும்பம் | ஜேர்மன் | 1000. 00 |
| தேவராசா சச்சின் | ஜேர்மன் | 500. 00 |
| தேவராசா ஜேஷ்வின் | ஜேர்மன் | 1000. 00 |
| மு. ரமேஷ் | கொழும்பு | 2000. 00 |
| திரு வரதன் குடும்பம் | சாவகச்சேரி | 2000. 00 |
| க. ஸ்ரீதரன் | திக்கம் | 1000. 00 |
| செல்வி பா. ரதிவதனி | பருத்தித்துறை | 10000. 00 |
| சின்னப்பு ரவீந்திரன் | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| ம. செந்தூரன் | சாவகச்சேரி | 10kg அரிசி |
| திருமதி சோ. கந்தபாக்கியம் | தும்பளை | 4000. 00 |
| செ. செல்வதாசன் | லண்டன் | 10000. 00 |
| உமா. சுரேந்திரன் | கொழும்பு | 5000. 00 |
| க. சிவபாலன் | இணுவில் | 1000. 00 |
| S. சிவலிங்கம் (இலங்கை வங்கி) | | 5000. 00 |
| திருமதி கருணேஸ்வரி சேனாதிராசா | லண்டன் | 1000. 00 |
| ச. மேகலா | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| சு. சக்திவடிவேல் (அவுஸ்திரேலியா) | வல்வை | 10000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுண்ணாகம் | 1000. 00 |
| முரளிதரன் செந்தூரா மயிலணி | சுண்ணாகம் | 1000. 00 |
| பிரசாத் ஹம்சத்வதனி | கோண்டாவில் | 2000. 00 |
| குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | பத்தமேனி | 4000. 00 |
| S. தன்ஜா | கொக்குவில் | 2000. 00 |
| தி. பகீரதன் | லண்டன் | 10000. 00 |
| அ. தனுஜன் | தாவடிச்சந்தி (மலேசியா) | 1000. 00 |
| சி. புஷ்பராஜா குடும்பம் | தாவடி வடக்கு | 2000. 00 |
| இ. நடராஜா | கொக்குவில் | 3000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தே. ராஜ்மோகன் | சுண்ணாகம் | 5000. 00 |
| ந. சரஸ்வதி | டென்மார்க் | 1000. 00 |
| செ. சோதிலிங்கம் | மல்லாகம் | 1000. 00 |
| பாலகுமாரன் காயத்திரி | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| வைரவப்பிள்ளை இராசேந்திரம் | இணுவில் | 1000. 00 |
| லோகதாசன் சற்சொருபன் | ஆனைக்கோட்டை | 2மூடை அரிசி |
| சசிகரன் வதனி | சுவீடன் | 5000. 00 |
| சி. சிவகணேஸ் குடும்பம் | நோர்வே | 5000. 00 |
| ஜெயபாளினி துஷ்யந்தன் | நீர்வேலி | 5000. 00 |
| சின்னப்பு புவநாதன் | சாவகச்சேரி | 2000. 00 |
| சாந்தினி செல்வச்சந்திரன் | லண்டன் | 5000. 00 |
| S. பாலேந்திரன் குடும்பம் | கொக்குவில் (கனடா) | 5000. 00 |
| திரு பாலச்சந்திரன் குடும்பம் | அமெரிக்கா | 1000. 00 |
| சசிகலா அருட்செல்வம் | உரும்பராய் | 5000. 00 |
| சு. வினோஜன், சு. துஷ்யந்தன் | லண்டன் | 5000. 00 |
| த. இதயராஜ் குடும்பம் | பருத்தித்துறை | 2000. 00 |
| தையல்முத்து கனகசபை | லண்டன் | 5000. 00 |
| N. ஜெயக்குமார் குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| K. தேவமனோகரன் | கனடா | 5000. 00 |
| திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா | லண்டன் | 10000. 00 |
| ம. புஷ்பதேவன் | அல்வாய் | 5000. 00 |
| த. கனகலிங்கம் | கொக்குவில் | 5000. 00 |
| க. யோகராசா மூலம் க. சரஸ்வதி நினைவாக | புற்றளை | 2000. 00 |
| க. நவரத்தினம் ஆசிரியர் மகாத்மாவீதி | நெல்லியடி | 2000. 00 |
| சிவசக்தி | பண்டத்தரிப்பு | 2000. 00 |
| கா. நவரத்தினம் | உடுப்பிட்டி | 1000. 00 |
| சி. விமலாதேவி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு சிவா (செந்தில்நாதன்) | கனடா | 10900. 00 |
| சி. துரைராசா நினைவாக | யாழ்ப்பாணம் | 1200. 00 |
| ஆறுமுகம் தெய்வேந்திரன் | அச்சுவேலி | 3000. 00 |
| சுசீலா நகைமாடம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 3புட்டி பருப்பு |
| திரு மதிதரன் | கரவெட்டி | 2000. 00 |
| கனகசுந்தரம் செல்லப்பா | லண்டன் | 10000. 00 |
| அன்பழகன் சுப்பிரமணியம் நினைவு | | |
| ஆ. சதாசிவம்மூர்த்தி மூலம் | கனடா | 10000. 00 |
| திரு கந்தசாமி தபாலதிபர் | கரணவாய் (கனடா) | 20000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ் அமுதம் தந்த அருணகிரிநாதர்

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

திருவண்ணாமலையார் திருச்சந்நிதானத்தில் வல்லாளராசனால் கட்டப்பட்ட திருக் கோபுரத்தில் இருந்து குதித்துத் தனது உயிரைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்பது அவரது முடிவு. கீழே அருணாச்சலேஸ்வரர் கோயில். மனதில் இந்தக் காட்சி இருக்கும்போதே மரணம் ஏற்படவேண்டும் என்பது அவருடைய ஆவல். அவருடைய பெயர் அருணகிரி.

## குருவாக வந்த குமரன்

சரீர இச்சையால் தூண்டப்பட்டு, காம வேட்கையில் வாழ்நாளைக் கழித்ததின் விளைவாகக் கொடு நோயால் உடலும் உள்ளமும் பாதிக்கப்பட்டு வருந்துகின்றார். மனைவி, ஊர்மக்கள் நகைக்கின்றார்கள். இந்நோய்க்குக் காரணமான விலைமகளிரும் ஒதுங்குகின் றார்கள். உள்ளம் சலித்துவிட்டது, உயிர் வாழத் தேவையில்லை என்னும் எண்ணத்துடன் கோபுரத்தில் ஏறி தலைகீழாக விழுந்தவரை குரு வடிவில் வந்த ஒரு பெரியவர் தாங்கிக் கொண்டார். யார் அந்தப் பெரியவர்? அருணகிரியாரின் வாழ்க்கையை அழகுறச் செய்வதற்கு அந்த முருகனே முதியவர் வடிவம் தாங்கி வந்திருந்தார்.

ஐயா! எனது பாவமூட்டையைக் கரைப்பதற்கு மரணம்தான் ஒரேவழி வேறு வழி இல்லையென அருணகிரி கூறினார். "**நீ கந்தப் பெருமானை வணங்கித் தமிழார் பாடவேண்டும். அதுவரை சொல் இல்லாத எல்லையில் சும்மா இரு**" எனக் கூறி அருணகிரிநாதர் என்னும் பெயரையும் சூட்டி மறைந்தார், பெரியவர் வடிவில் வந்த முருகப் பெருமான்.

அவருடைய உபதேசம் கிடைத்தவுடன், நோய் உபாதை நீங்கி, உலகை மறந்து கோவிலின் சந்நிதியிலே பன்னிரண்டு ஆண்டுகள் தியானத்தில் அமர்ந்தார் அருணகிரியார்.

## அருணகிரிநாதரின் வம்சவழி

அருணகிரிநாதர் வாழ்ந்த ஊர் திருவண்ணாமலை, அவருடைய காலம் பிரபுடதேவராயன் என்ற விஜயநகர அரசன் காலம். 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். திருவண்ணா மலைக்குப் பல சிறப்புக்கள் உண்டு. அதில் ஒன்று அருணகிரிநாதரை இறைவன் ஆட்கொண்டது.

அருணகிரிநாதர் கச்சியப்ப கோத்திரத்தைச் சார்ந்த ராஜநாதகவிக்கும் அபிராமி நாயகிக்கும் ஆனிமாத மூல நட்சத்திரத்தில் பிறந்தார். முள்ளண்டிரம் கிராமத்து மக்கள் சிலர் "**டிண்டிமக்கவி**"யில் (பறைக்கொண்டோடு பாடுபவர்கள்) சிறப்புப்பெற்ற வித்துவான்களாக இருந்தனர். இந்த "**டிண்டிமக்**" கவிகளில் தலை சிறந்தவராக அருணகிரி விளங்கினார்.

அருணகிரியார் இளம்வயதில் தேவாரம், திருமந்திரம், திருமுருகாற்றுப்படை, திருக்குறள், காரிகை ஆகிய நூல்களில் தேர்ச்சி பெற்றிருந்தார். உலா, ஏசல், கலம்பகம், கோவை, சிந்து, தூது, பரணி, மடல், மாலை போன்ற நூல்களையும் அறிந்திருந்தார். காம சாஸ்திரமும் கற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது காலம் அவர் உலகாயுதக் கொள்கையை நம்பினார். விபூதி பூசாமல் இருந் திருக்கின்றார். மாமிசம் உண்டு மதுபானங்களையும் சுவைத்திருக்கின்றார்.

அங்கை நீட்டி அழைத்து, பாரிய கொங்கை காட்டி மறைத்து சீரிய அன்புபோல் பொய்யாய் நடிக்கும் மங்கையரைக் கூடி இருக்கின்றார். விலைமாதர் தொடர்பால் கைப்பொருட் களை இழந்து வறுமையால் வாடி இருக்கின்றார். பணத்திற்குப் பதிலாக விலைமாதரைப் புகழ்ந்து பாடி இருக்கின்றார். விலைமாதர் தொடர்பால் விபரீதம் நிகழ்ந்ததையும், தற்கொலைக்கு முயன்றவரை முருகன் தடுத்தாட்கொண்டதையும் முற்பகுதியில் அறிந்தோம். இனி தவம் முடிந்து எழுந்த பிற்பாடு நடந்தவற்றைப் பார்ப்போம்.

புதிய நிலைக்கு மாறிவிட்ட அருணகிரிநாதருக்கு நோய் இல்லை, உள்ளத்தில் ஊனம் இல்லை, நாம் நினைத்துப் பார்க்கமுடியாத முருகனின் திருவடி தரிசனம் அவருக்குக் கிடைக்கிறது. அவருடைய நாவில் "**ஓம்**" என்னும் மந்திரத்தை முருகன் வேலால் எழுதி "**முத்தைத்தரு**" என்று அடியெடுத்துக் கொடுத்து பாடு என அவரைப் பணித்தார்.

திருப்புகழ்

"முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர"

அவரால் பாடப்பட்ட 16000 திருப்புகழ் பாடல்களில் தற்போது கிடைக்கத்தக்கதாய் இருப்பது சுமார் 1400 பாட்டுக்கள் மட்டுமே. பக்தியையும் ஞானத்தையும் பரிவோடு புகட்டும் திருப்புகழைப் பாடக் கேட்டால் நெஞ்சம் நெகிழ்ந்துருகும், படித்தால் வேண்டுவது கிடைக்கும், பிறவிப்பிணி அழியும், முருகன் குருவாய் வருவான் என்பது நம்பிக்கை.

அருணகிரி நாதருக்கு ஆதி என்ற தமக்கை இருந்தாள். தம்பியைத் திருத்தமுடியாமல் அவர் தவித்தார். ஒரு சமயம் விரக்தியின் உச்சகட்டத்திற்கு வந்த சகோதரி கூறிய கர்ண கொடூரமான வார்த்தையைக் கேட்டு பொறுத்துக்கொள்ள முடியாமல்த்தான் பெண்களை வெறுத்து அருணகிரியார் உயிரை மாய்த்துக்கொள்ள கோபுரத்தில் ஏறினார் எனக் கூறுவாரும் உண்டு.

அருணகிரியார் பற்றிய வரலாறுகளை இதுவரை பார்த்தோம். தவத்தை முடித்த அருணகிரியாரின் அனுபவங்களை இனிப் பார்ப்போம். தவம் கனிந்துவிட்ட அருணகிரிநாதருக்கு விபூதி அணிவித்து சிவபெருமான் அருள் செய்தார் என அறியமுடிகிறது இந்தச் செய்தி.

"கமழ் மாவிதழ் சடையார் அடியேன் துயர் தீர்ந்திட
வெண்தழல் மாபொடி அருள்வோர் தமிழோதிய"

என்னும் திருப்புகழால் தெரியவருகின்றது. பார்வதிதேவி உனக்கு இனிப் பிறவி இல்லை என்று அறிவித்தார். வள்ளியம்மையார் அருணகிரியாரின் சிரசைத்தொட்டு அனுக்கிரகம் செய்தார்.

"தேனென்று பாகென்றுவமிக் கொணா மொழித் தெய்வவள்ளி
கோனன்றெனக்குபதேசித் தொன்றுண்டு" என்கிறது கந்தரலங்காரம்.

சிறிது நேரத்தில் அவருடைய உள்ளக் கோவிலில் சிவச்சுடர் ஏற்றப்பட்டு எல்லா மாசித்திகளையும் பெற்றார்.

திருப்புகழ்

"தலைநாளிற் பதமேத்தி யன்புற
உபதேசப் பொருளூட்டி மந்திர
தவஞானக் கடலாட்டி யொன்றினை அருளாலுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுராகத்தொடு கூட்டி யண்டர்க
எறியா முத்தமிழூட்டி முண்டக
தளிர்வேதத்துறை காட்டி" (இது வழுவூரில் பாடிய திருப்புகழ்)

உள்ளம் தெளிவு பெற்ற அருணகிரிநாதர் கடவுள் கருணையை வியந்தார், விடுதலையால் மகிழ்ந்தார். பெண் முகம் பார்த்த தனக்குச் சண்முகம் பார்க்க கிடைத்ததையிட்டுப் பரவசமானார். முற்றிய ஞானத்துடன் அருணகிரியார் தமிழில் பாடத் தொடங்கினார்.

அருணகிரியாரை வயலூருக்கு வரும்படி ஆகாயத்தில் இருந்து அசரீரியாக ஒரு குரல் அழைத்தது. வயலூருக்குச் சென்ற அருணகிரியார் முருகன் வேலினால் உண்டாக்கிய சக்தி தீர்த்தத்தில் நீராடி முருகனை வணங்கினார். வயலூரில் உள்ள பொய்யாக் கணபதிதான் அருணகிரியாரின் சந்தப்பாடலுக்கு திருப்புகழ் எனப் பெயரிட்டார். அவ்விடம் தங்கி அருணகிரியார் அறுபடை வீடுகளைப் பற்றிப் பாடினார்.

முருகன் கனவில் வந்து விராலிமலைக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். காடு நிறைந்த விலங்குகளின் ஓலம் கேட்டுக் கொண்டிருந்த அந்நேரத்தில் வழி தெரியாது விழிக்கின்றார். அதே நேரம் வேடனாக வந்த முருகன் வழிகாட்ட விராலிமலைக்கு வந்த அருணகிரியாருக்கு முருகன் காட்சி கொடுத்து அட்டமா சித்திகளையும் வரமாகக் கொடுக்கின்றார்.

## பிரணவ மந்திரம்

சுவாமி மலையில் பிரணவ மந்திரத்தை முருகன் உபதேசித்தார். முருகனிடம் இருந்து இந்த உபதேசத்தை பெற்றவர் மூவர். சிவன், அகத்தியர், அருணகிரிநாதர் ஆகியோராகும்.

"குறுமுனியார்க்கும் திருப்புகழ் பண்ணவர்க்கும் ஆலாலம் உண்டவர்க்கும்
உபதேசத்தி என் ஆண்டவனே" என்பது முருகர் அந்தாதி.

செங்கோடு சென்று அங்கு வீற்றிருக்கும் முருகனைப் பின்வருமாறு பாடியிருக்கின்றார்.

விழிக்குத் துணை திரு மென்மலர்ப் பாதங்கள்
மெய்மை குன்றா மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்
முன்பு செய்த பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்
பயந்ததனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே

என்னும் கந்தரலங்காரப் பாடல் திருச்செங்கோட்டில் வாழும் முருகனையே குறிக்கும்-அருணகிரியாருக்கு திருத்தணிகையில் முருகனின் நடனக் காட்சி கிடைக்கின்றது.

"தணிகை மலைதனில் நிர்த்தத்தில் நிற்கவல பெருமானே" என்ற திருப்புகழ் வரிகளால் தெரிகின்றது. இதுபோன்று திருவண்ணாமலையில் இருந்து பல தலங்களைத் தரிசித்தார்.

அதைத் தொடர்ந்து பழநி என்று கூறப்படும் ஆவினன் குடியில் இருக்கும் சரவணப் பொய்கையில் நீராடி ஜெபமாலை முருகனிடம் பெற்றுக்கொண்டார்.

நாதம், விந்து, கலை என்ற மூன்றிற்கும் ஆதியாய் உள்ள முருகனே, தேவாதி தேவனே கீதகிண்ணி, பாதம் உடையவனே என்றும் புகழ்பெற்ற திருப்புகழைப் பாடினார்.

"நாத விந்துகலா தீ நமோ நம
வேத மந்திர சொருபா நமோ, நம
ஞான பண்டித சாமி நமோ நம"

என்ற புகழ் பெற்ற திருப்புகழ் உருவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமான திருப்புகழ்ப் பாடல்கள் உருவான தலம் என்ற பெருமை (97) பழநிக்கு உண்டு. திருச்செந்தூரில் பல நாட்கள் தங்கியிருந்தார். பழநிக்கு அடுத்தபடியாக 83 பாடல்கள் அங்கு பாடியுள்ளார்.

திருச்செந்தூரில் இருந்து நான்கு நேரி வள்ளியூர் சென்று அங்கிருந்து ஈழநாட்டிற்கு வந்தார். ஈழநாட்டில், கண்டி, திருகோணமலை, கதிர்காமம் ஆகிய தலங்களுக்குச் சென்றார்.

"மணிதரளம் வீசியணி யருவி சூடி
மருவு கதிர் காமப் பெருமாளே" எனப் பாடுகின்றார்.

இரத்தினங்களும் முத்துக்களும் வீசுகின்ற மாணிக்ககங்கை என்னும் ஆறு ஓடுகின்ற கதிர்காமத்தில் இருக்கும் பெருமாளே என்பது இதன் பொருள்.

சீதையைத் தேடிவந்த அனுமானுக்கு முருகன் அருளியதாக இங்கே பாடப்பட்ட திருப் புகழில் **"வடவையாலு சூழ் கதிர்காமம்"** என்றும் **"வகிரதிர் கதிர்காமம்"** என்றும் பாடுகின்றார். கதிர்காமத்தில் வன வேடன் செய்த பூசையைப்பற்றி,

**"வனமுறை வேடனருளிய பூசை மகிழ் கதிர் காமமுடையோனே"** என்கின்றார். **"யாழ்ப்பாணநாயன் பட்டினம்"** என ஒரு பாடலில் நல்லூர் முருகனையும் அருணகிரியார் பாடியுள்ளார். திருக்கோணேஸ்வரம் பற்றியும் பாடியுள்ளார். மேலும் 13 பாடல்கள் ஈழத் தலங்களைப் பற்றிப் பாடியதாகும்.

தமிழகம் வந்த அருணகிரியார், சுவாமி மலைக்குச் சென்று, **"கந்தப்பொழில் திகழ் குருமலை மருவிய பெருமானே" "சந்தசபை தனில் எனதுளம் உருகவும் வருவாயோ"** என்னும் திருப்புகழைப் பாடினார்.

அருணகிரியாரின் சமகாலத்தில் வில்லிபுத்தூரர் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். இவர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் புலமை பெற்றவர், மகாபாரதத்தைத் தமிழில் பாடி வெகுமதி பெற்றவர். மிகவும் அகந்தை பிடித்தவர்.

வில்லிபுத்தூரரைச் சரிசெய்ய வேண்டும் என்னும் ஆவல் அருணகிரியாருக்கு ஏற்பட்டது அதே நேரம் வில்லிபுத்தூரரும் அருணகிரியாரைச் சந்திக்க வந்தார். அருணகிரியாரை நோக்கி "ஐயா சந்தம் பாடுவீரா" எனக் கேட்டார். ஆம் எனக் கூறிவிட்டு, அருணகிரியார் நகைத்துக்கொண்டு திருப்புகழைப் பாடத்தொடங்கினார். வில்லிபுத்தூரர் இவரின் கவித்திறமையைக் கண்டு பயந்து போனார். ஆனால் வெளிக்காட்டவில்லை. அரசனை நடுவராக வைத்து வாதிட அழைத்தார் போட்டியின் நிபந்தனை இதுதான் என்று வில்லிபுத்தூரர் விளக்கம் கூறினார்.

நான் ஆசுகவியாக யமகமாக நூறு பாடல்களைப் பாடுவேன், "தாங்கள் அதைக் கேட்டு அந்தப் பாடல்களை திருப்பிச் சொல்லி பொருளையும் கூறவேண்டும். சொல்லத் தவறி னால் காதை அறுத்து விடுவேன்". அருணகிரியார் அமைதியாக, "இந்த நிபந்தனை எனக்கு மட்டும்தானா, உங்களுக்கும் உண்டா" எனக் கேட்டார். தயக்கத்தோடு எனக்கும் உண்டு என்றார் வில்லிபுத்தூரர். வில்லிபுத்தூரர் கட்டளைக் கலித்துறையில் திருமால் குறித்த நூறு பாடல்களைப் பாடினார். முத்தமிழ் முருகனின் அருள் பெற்ற அருணகிரியார் அத்தனை பாடல்களையும் சொல்லி அதற்கான பொருளையும் கூறினார்.

நான் பாடலாமா என்றார் அருணகிரி. ஆம் எனக் கூறினார் வில்லிபுத்தூரர். அருண கிரியார் கந்தர் அந்தாதி பாடினார். இதில் 53 பாடல்கள் வரை விரைவாக வில்லிபுத்தூரரும் பொருள் சொல்லி விட்டார். 54ஆம் பாடலை அருணகிரி பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித் தித்த தேதுத்த தித்தித்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதி துதி நீ தொத்ததே

வில்லிபுத்தூரர்க்கு நாவறண்டு விட்டது, அரசன், "பொருள் சொல்லுவீரா" எனக் கேட்டான், மறுப்பது போல தலையை அசைத்தார் வில்லிபுத்தூரர். அரசன் அருணகிரியாரைப் பார்த்து, "நீங்கள் சொல்லலாமே" என்றார். உடனே அருணகிரியார் பொருள் கூறினார்.

"தித்தித் தொந்தியென்றது நடனம் செய்யும் சிவனுடைய திருச்செவியில் பிரணவப் பொருளை மயக்கமற உபதேசித்த பாலகனே! தொந்தி விநாயகருக்கு இளையோனே! உடலும் உயிரும் தொடர்புகொண்டு பிறவி ஏற்படுவதற்கு நான் முன்பு செய்த வினைப்பயன் தான் காரணமோ என்பதுதான் அந்தப் பாடலின் பொருள் என்றார் அருணகிரி.

அருணகிரிநாதர் வில்லிபுத்தூரரைத் "தோற்றுவிட்டீரா" எனக் கேட்டார். "ஆமாம்" என்றார் வில்லிபுத்தூரர். காதை அறுத்து விடலாமா என்றார் அருணகிரியார். அறுத்துவிடலாம் என்றார் வில்லிபுத்தூரர்.

தங்களை நல்வழிப்படுத்துவதே என் நோக்கம், துன்பப்படுத்துவது நோக்கம் அல்ல எனக் கூறி இன்று தொடக்கம் காது அறுக்கும் தொழிலை விட்டு விடுங்கள், கந்தர் அந்தாதிக்கு உரை எழுதும்படி வேண்டினார். கந்தர் அந்தாதிக்கு உரை எழுதி நிறைவு செய்த பெருமை வில்லிபுத்தூரரைச் சாரும்.

## சம்பந்தாண்டான்

அரசன் பிரபுடதேவராயன் ஆதரவு பெற்ற சமண சமயத்தைச் சேர்ந்த காளி உபதேசம் பெற்ற சம்பத்தாண்டான் என்பவன். அழிவுத் தொழில் புரிவதில் வல்லவனாக இருந்தான். இதனால் அரசனுக்கு ஓரளவு அச்சம் உண்டு, பாமரமக்கள் அவனைக் கண்டு பயந்து ஓடுவார்கள்.

அருணகிரியார் திருவண்ணாமலையில் அன்பு உரை ஆற்றிக்கொண்டு இருந்தபோது அங்கே பல்லக்கில் சம்பத்தாண்டான் வந்தான். மாலும் அயனும் காணமுடியாத இல்லத்தில் மமதையோடு வருவது யார்? என வினாவினார் அருணகிரியார். அங்கிருந்தவர்கள், ஐயா அவன் சம்பத்தாண்டான். சமண சமயத்தைச் சார்ந்தவன், காளி உபவாசகன், அக்கிரம வடிவமாக அவதாரம் செய்துள்ளான் எனக் கூறினார்கள்.

"மதுரகவி ராஜ னானென்வெண்குடை
விருது கொடி தாளமேள தண்டிகை
வரிசையொடு லாவு மாலகந்தை தவிர்ந்திடாதோ"

எனப் பாடினார். உடனே அவனுடைய பல்லக்கின் கொம்பு முறிந்து கீழே விழுந்த சம்பத்தாண்டான் அவமானப்பட்டான். பக்தர்கள் இக்காட்சியைக் கண்டு சிரித்தனர். அதனால் அவனுடைய புத்தி மாறியது அருணகிரியார் மீது கோபம் ஏற்பட்டது. அவரை அழிக்கவேண்டுமென நினைத்தான்.

சம்பத்தாண்டான் பிரபுட தேவராயனை ஏவி அருணகிரியாரை முருகனை வரவழைக்கக் கூறி தான் காளிதேவியைக் கொண்டு தடுக்கச் செய்தான். அந்தநேரம் மயில் விருத்தம்பாடி மயிலை ஆடச்செய்து அதில் முருகனை வரவழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதல சேடனாராட அகிலமேரு மீதாட
அபின காளிதானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையிலேறு வாராட
அருகு பூத வேதாளம் அவையாட
மதுர வாணி தானாட மலரின் வேதனாராட
மருவு வானுளோராட மதியாட
வனச மாமியாராட நெடிய மாமனாராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்

அருணகிரிநாதரிடம் அரசன் வரம் கேட்கின்றான். முருகன் தரிசனம் கொடுத்தார். முருகனின் பேரொளியினால் அரசனது கண்ணொளி மங்கிற்று. இதனால் அரசன் கவலைப்பட்டான்.

சம்பத்தாண்டான் அரசனை நோக்கி அருணகிரியாரின்மூலம் தேவலோகத்தில் உள்ள பாரிஜாத மலரைக் கொண்டு வரத் தூண்டினான். தேவலோகத்தில் உள்ள பாரிஜாத மலரைக் கொண்டு வந்தால் எனக்குப் பார்வை கிடைக்கும். அதற்கு நீங்கள் அருள்புரிய வேண்டும் என்கிறான் அரசன். இது சம்பத்தாண்டான் கொடுத்த சதி யோசனையாகும்.

அரசனுக்கு "ஆம்" என வாக்குறுதி கொடுத்துத் தனது உடலை கோபுரத்தில் மறைத்து வைத்துவிட்டு, கிளி ரூபத்தில் பறந்து போனார் அருணகிரியார்.

சதிசெய்யக் காத்திருந்த சம்பத்தாண்டான் மறைத்து வைத்திருந்த அருணகிரிநாதரின் உடலை மக்களுக்குக் காட்டி தீமூட்டி எரித்துவிட்டான். பாரிஜாதப் பூவோடு வந்த அருணகிரிநாதர் தன் உடலைத் தேடி காணாது இதுவும் இறைவன் திருவருள் என ஏற்றுக் கொண்டார்.

அவர் கொண்டு வந்த மலரின் மணம் நாடெங்கும் பரவியது. மலரின் மணத்தால் அரசனுக்கு, அந்த நகரில் உள்ள பார்வை அற்றோர் எல்லோருக்கும் பார்வை கிடைத்தது.

கிளி ரூபத்தில் இருந்தபடியே அருணகிரியார் கந்தரனுபூதி என்னும் மந்திர நூலைப் பாடினார். சம்பத்தாண்டானின் சதியால் அருணகிரியாரின் உடலைத் தகித்ததைத் தெரிந்து கொண்ட அரசன் கோபம் கொண்டான். அரசனை அருணகிரியார் சமாதானம் செய்து சம்பத்தாண்டானைக் காப்பாற்றினார்.

கிளியாக இருந்த அருணகிரியார் தேவியின் கரத்தில் அமர்ந்தார். இறைவனின் திருவிளையாடல் தமக்கு பூரண சம்மதம் எனத் தெரிவிக்க

"ஏழையின் இரட்டை வினையாகதொடருடற் சிறை
இராமல் விடுவித்தருள் நியாயக்காரன்"

என்று முன்னரே அவர் பாடியுள்ளார்.

தமிழ் தவயோகியான அருணகிரிநாதர் கிளி உருவில் இருந்தபடியே இன்றும் அன்பர்களுக்கு அருள் செய்கிறார். முருகனை வழிபடும் நெறி உடையவருக்கு இவ்வுலகத்து இன்பமும் அவ்வுலகத்து இருக்கையும் கிடைக்க வகை செய்கிறார். தமிழ் உள்ளளவும், தவம் உள்ளளவும், இந்தத் தரணி உள்ளளவும் அருணகிரியாரின் அருட்கொடை தொடரும்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]



முனைவர் ஆ. ஆனந்தராசன்

## நான்காம் அதிகாரம்

### அருளது நிலை

உயிரினது அறிவை மறைத்து அறியாமையை விளைவிக்கின்ற அக இருளாகிய ஆணவ மலத்தின் இயல்பை முந்திய அதிகாரத்தில் பார்த்தோம்.

இந்த இருளாகிய மலத்தைப் போக்க வல்லது எது? அது இறைவனது பேரறிவாகிய அருள் ஒளியேயாகும். அதனைச் சூரிய ஒளியோடு ஒப்பிடலாம். "பேரொளியாய் எங்கும் அருக்கனென நிற்கும் அருள்" என்று உமாபதி சிவம் கூறுவார். (செய்யுள் 32)

சூரிய ஒளி செய்யும் செயல்கள் இரண்டு. ஒன்று, எங்கும் சூழ்ந்துள்ள இருளை நீக்கி உலகப் பொருள்களைக் காட்டுவது. மற்றொன்று, தனக்கு முதலாகிய சூரியனைக் காட்டுவது.

சூரிய ஒளியின் உதவியாலேயே உலகப் பொருள்களை அறிந்து அனுபவிக்கின்றனர் மாந்தர். ஆயின் அவர்கள் சூரியவொளியை நினைப்பதில்லை. அதன்மீது கருத்துச் செலுத்துவதில்லை. அவர்கள் உலகப் பொருள்களிலேயே அழுந்தி நிற்பதுதான் அதற்குக் காரணம்.

இனி, உலகப் பொருள்களை நோக்காமல் தமது பார்வையைச் சூரிய ஒளியின்மீது செலுத்தி அதனைப் பற்றிக்கொண்டு அதன்வழியே மேலே நோக்கினால் அவர்களுக்கு அச்சூரிய ஒளி மேலேயுள்ள சூரியனைக் காட்டும்.

இறைவனது ஞானமாகிய அருளும் இவ்வாறே இரண்டு வகையில் செயற்படுகிறது. அது பக்குவமில்லாத உயிர்களுக்கு உலகைக் காட்டி உலகையே நோக்கும்படி செய்யும். இனி, உலக ஆசையைத் துறந்து தன்னை நாடுகின்ற பக்குவ ஆன்மாக்களுக்கு அவ்வருள் தன்னைக் காட்டிப் பின் தனக்கு முதலாய் உள்ள சிவத்தையும் காட்டும்.

உயிரில் உள்ள ஆணவம் அகவிருள் என்றால், உயிர்க்கு உயிராய் உள்ள திருவருளை அகவொளி எனலாம். "உள்ளொளி" என்பார் உமாபதிசிவம் (செய்யுள் 24). பேரறிவே வடிவான திருவருளை "உணர்வு" என்ற சொல்லாலும் குறிப்பிடுவர். (செய்யுள் 35)

அருளைச் சத்தி என்று முன்னே குறிப்பிட்டார் ஆசிரியர். அது பதியாகிய சிவத்தை விட்டு என்றும் பிரியாதது. (செய்யுள் 2) அஃது, எல்லாவுயிர்களோடும் தொடர்புற்று நிற்கிறது;

*காலம் நதியைப் போன்றது. உற்பத்தியாகும் இடத்துக்குத் திரும்பாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் உயிர்களை மும்மலங்களோடு தொடர்புபடுத்தி உலக வாழ்க்கையில் செலுத்துகிறது. இவ்வாறு உயிர்களுக்கு கட்டுநிலையை ஏற்படுத்திய அருளே பின் பக்குவமடைந்த உயிர்களைப் பாசமாம் பற்று அறுத்துப் பதியாகிய சிவத்தினிடம் சேர்க்கிறது.

இவ்வாறு பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களையும் தொடர்புபடுத்தி நிற்பது அருளேயாகும்.

இதுபற்றியே, இதுவரையில் முப்பொருள்களின் இயல்புகளைத் தனித் தனியே கூறிவந்த ஆசிரியர் அவை அனைத்தையும் தொடர்புபடுத்தி நிற்பதாகிய அருளினது தன்மையை இந்த நான்காவது அதிகாரத்தில் கூறலுறுகிறார் எனக் கருதலாம்.

உலகிலேயே மிகவும் சிறந்த பொருள் எது? இதற்கு எல்லோரும் அவரவர் மனநிலைக்கேற்ப விடையளிப்பர். பணத்தினாலே எல்லாம் பெறமுடியும்; எதையும் சாதிக்க முடியும்; ஆகவே செல்வந்தான் சிறந்தது என்போர் பலர். உண்பதற்காகவே பிறந்தோம் என்று கருதுகிற சிலர், அறுசுவை உணவே அவனியில் சிறந்தது என்பர். மனைவி மக்களையே சிறந்த பொருளாக மதித்து வாழ்வோர் உண்டு. இவையெல்லாம் உலகியல் நோக்கில் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. ஆனால், இறையனுபவம் வாய்ந்த பெரியோர் இவற்றை ஒரு பொருளாகக் கொள்ளார். இப்பொருள்கள்மீது மையல் கொண்டு வாழும் மக்களை நோக்கி, "வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும் பித்தவுலகு" என்பார் மணிவாசகர்.

நம் ஆசிரியராகிய உமாபதிசிவம் "அருளே பெறுதற்குரிய தலையாய பொருள்" என்றும், அதனைக் காட்டிலும் மேலான பொருள் இவ்வுலகில் வேறொன்றும் இல்லை என்றும் தெளிவிக்கிறார்.

உயிர்கள் பிறவிக்கு வரும்போது தாம் விரும்பிய உடம்பைத் தாமே எடுத்துக்கொண்டு வருகின்றனவா? அந்த ஆற்றல் உயிர்களுக்கு இருக்குமானால் சீரான, செம்மையான, குறைபாடில்லாத அழகான உடம்பையல்லவா அவை எடுத்துக்கொண்டு வரும். ஆனால், அப்படிப்பட்ட உடம்பு பலருக்கு அமையவில்லையே. சர்க்கரை நோய் முதலிய நோய்களை உடைய உடம்பையல்லவா பெற்றுள்ளார்கள். இதயம் முதலிய உள் உறுப்புகளில் இயற்கையிலேயே குறைபாடு சிலருக்கு அமைந்து விடுகிறது. சிலருக்குக் கண் இருந்தும் காண முடியாத நிலை. வாய் இருந்தும் பேச முடியாத நிலை. இதையெல்லாம் பார்க்கும் பொழுது அவரவர்க்கு அமைந்த உடம்பைத் தாமே எடுத்து வரவில்லை என்பது உறுதி யாகிறது. உயிர்களின் வினைக்கேற்ப அவற்றிற்கு உடம்பைத் தருவது திருவருளே ஆகும்.

உயிர்களுக்கு வாழ் இடமாக உள்ளதும் திருவருளே. ஆயினும் அவை திருவருளை அறியமாட்டாது துன்புறுகின்றன. ஆற்றைக் கடக்கின்ற ஒருவனுக்குத் தாகம் ஏற்பட்டால் அந்த ஆற்றுநீரை அள்ளிப் பருகித் தாகத்தைத் தணித்துக் கொள்ளலாம். அவ்வாறு செய்யாமல் வெள்ளத்துள் நாவற்றி நிற்கின்ற அவனது நிலையில் நாம் இருக்கிறோம். திருவருளிடத்தில் நாம் இருந்தும் அதனைக் கருதாமல் இருக்கிறோம். நிறைந்த இன்பத்துள் நின்றும் அதனை நுகர மாட்டாது துயருறுகிறோம்.

ஆணவ மலம் நமது உணர்வை மறைத்து உயர்ந்ததில் வெறுப்பும், இழிந்ததில் விருப்பும் தோன்றும்படியாகச் செய்கிறது. அதன் காரணமாக உயர்ந்த திருவருள் இன்பத்தை நாடாமல் அற்ப இன்பத்தைத் தரக்கூடிய உலகப் பொருள்களையே நாடி அலைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தைத் தேடிக் கொள்கிறோம். இந்த நிலைமை, பாற்கடலில் உள்ள மீன்கள் அந்தப் பாலை உண்டு வாழாமல் அங்கே திரியும் சிறு பூச்சிகளைப் பிடித்து உண்ண அலைவது போன்றதாகும்; பாற்குடத்தின் மேலே அமர்ந்துள்ள பூனை அந்தப் பாலை உண்ணக் கருதாமல் பக்கத்தில் சுவரில் ஓடுகிற கரப்பான் என்னும் சிறு பூச்சியை பிடிக்க முயல்வது போன்றதாகும்.

எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் நிலம் போலத் திருவருளே நமக்கு ஆதாரமாய் நின்று தாங்குகிறது. வழிப்போக்கனுக்குப் பின்வரும் துணைவன் போல நம் உணர்விற்கு உணர்வாய் உடன் நின்று உதவுகிறது.

அன்று தொட்டு இன்றுவரை திருவருளோடு கூடியிருந்தும் அதனோடு சிறிதும் பழகாமல், அதனைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்கிறோம். திருவருளைச் சிந்தித்து உணர்ந்தாலன்றி வீடு பெறும் தகுதி நமக்கு ஏது? என்று கூறுகிறார் உமாபதிசிவம்.

இனி, இக்கருத்துக்களை விரிவாகக் காணலாம்.

### 31. அருளே தலையாய பொருள்

அருளிற் பெரியது அகிலத்து இல் வேண்டும்
பொருளில் தலை யிலது போல்.

**பொருள்:**

உலகியலில் ஒருவன் ஒரு சமயத்தில் ஒரு பொருளைத் தனக்கு இன்றியமையாததாகக் கருதி விடுவானாயின் அவனுக்கு அந்தச் சமயத்தில் அந்தப் பொருள்தான் மிக உயர்ந்த பொருளாகத் தோன்றும். அதனைக் காட்டிலும் மேலான பொருள் வேறொன்றும் இருக்க முடியாது.

அதுபோல ஆன்மீக நெறியிற் செல்லும் ஒருவன் திருவருளையே தனக்கு இன்றியமையாத பொருளாகக் கருதி அதனையே வேண்டி நிற்பான். அவனைப் பொறுத்த வரையில் திருவருளைக் காட்டிலும் மேலான பொருள் இவ்வுலகில் வேறொன்றுமில்லை.

**சொற்பொருள்:**

வேண்டும் பொருளின்- ஒருவனுக்கு ஒரு சமயத்தில் மிக இன்றியமையாததாக வேண்டப்படும் அந்த ஒரு பொருளைவிட, தலை இலது போல்- தலைசிறந்ததாக வேறு எந்தப் பொருளும் அவனுக்குத் தோன்றாது. அதுபோல, அருளின் பெரியது- ஞானநெறியில் செல்பவனுக்குத் திருவருளை விடச் சிறந்த பொருள், அகிலத்து இல்- இவ்வுலகில் வேறு எதுவுமே இல்லை.

**விளக்கம்:**

உலகியல் உண்மையொன்றை எடுத்துக்காட்டி அருளியலை விளக்குகிறார் ஆசிரியர்.

ஒருவன் நீர் வேட்கையோடு வருகிறான்; பருகுவதற்குத் தண்ணீர் கிடைக்குமா என்று அலைந்து பார்க்கிறான். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அவனது நாக்கு வறண்டு போய்விட்டது. உதடுகள் காய்ந்து விட்டன. தண்ணீருக்காக அவன் தவிக்கிறான். அந்த நேரத்தில் தண்ணீருக்குப் பதிலாக வகை வகையான உணவுகளை அடுக்கடுக்காக அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே வைத்தாலும் அவற்றை அவன் நாடுவானா? அல்லது, விலையுயர்ந்த பொன்னையும் நவமணிகளையும் அவன் முன்னே குவித்தாலும் அவற்றை மதிப்பானா? இவையெல்லாம் அவனுடைய தாகத்தைத் தீர்க்குமா? அவனுக்கு வேண்டியது தாகத்தைத் தணிக்கின்ற நீர் ஒன்றுதான். அந்த நேரத்தில் நீர்தான் அவனுக்குத் தலையான பொருள்.

இன்னொரு நிகழ்ச்சியைக் கூறுவோம். வீட்டில் குழந்தை தரையில் விளையாட்டுப் பொருள்களைப் பரப்பி வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருக்கிறது. தாய் கடைவீதிக்குப் போய் வரலாம் என்று புறப்படுகிறாள். குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுச் செல்கிறாள். விளையாடிக் கொண்டிருந்த குழந்தைக்குத் தாயின் நினைப்பு வந்துவிட்டது. அவ்வளவுதான். விளையாட்டுப் பொருள்களை வீசியெறிந்தது. அதுவரையில் சிறந்தவையாக விளங்கிய அப்பொருள்கள் இப்பொழுது அக் குழந்தைக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. இந்த நேரத்தில் தாய் தான் அதற்கு வேண்டும். அம்மாவை நினைத்து அழத் தொடங்கி விட்டது. வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் அதன் அழுகையை நிறுத்த முயன்றார்கள். என்னென்ன பொருள்களையோ எடுத்துவந்து காட்டி அதன் கவனத்தை ஈர்க்கப் பார்த்தார்கள். ஆனால், அதன் அழுகை நின்றபாடில்லை. தாயைக் கண்டாலொழிய அதன் அழுகை ஓயாது. அக் குழந்தைக்கு அக்கணத்தில் வேண்டப்படுகிற ஒரே பொருள் தாய்தான். வேறு எந்தப் பொருளையும் அது நாடுவதில்லை. அக்குழந்தையைப் பொறுத்த மட்டில் அவள்தான் தலையாய பொருள்.

தாகமுற்றவன் தண்ணீரை நாடுதல் போலவும், அழும் குழந்தை தன் தாயை நாடுதல் போலவும் ஆன்மீக நெறியிற் செல்லும் சாதகன் திருவருள் ஒன்றையே வேண்டி நிற்பான்.

திருவருள் நாட்டம் வருதல் என்பது அவ்வளவு எளிதன்று. திருவருளே நமக்குப் புகல் என்ற உறுதியான எண்ணம் நமக்கு இல்லை. அப்படி நூல்கள் எடுத்துச் சொன்னாலும் நாம் நம்புவதாக இல்லை. எண்ணற்ற பிறவிகளை எடுத்து எடுத்து உலக வாழ்வு ஒன்றையே அறிந்த நமக்கு உலகப் பற்றே மீதூர்ந்து நிற்கிறது. அதனால், கண்கண்ட உலக சுகத்தையே பெரிது என்று நம்புகிறோம். காணாத திருவருள் இன்பத்தில் நமக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

பிறப்பினால் உண்டாகும் துன்பத்தையும், வாழ்க்கையின் முடிவில் இறப்பினால் உண்டாகும் துன்பத்தையும் நன்கு உணர்ந்து அஞ்சுபவர்க்கே உலகியலில் உவர்ப்பு ஏற்படும். பொறிகளால் நுகரும் இன்பங்களில் வெறுப்பு உண்டாகும்; நிலையான புகலிடம் எது என்று தேடும் முயற்சி உண்டாகும்.

ஒருவன் தலையில் தீப் பற்றிக்கொண்டால் அவன் ஒருக்கணமேனும் வாளா இருப்பானா? "எங்கே தண்ணீர்" என்று தேடி அங்குமிங்கும் ஓடி அலைவான். தண்ணீருக்காக அவன் தவிப்பது போலத் தம் நிலையை உள்ளபடி உணர்ந்தவரே திருவருளுக்காக ஏங்குவர். இப்படி ஆன்மீகப் பாதையில் செல்பவரை நோக்கியே "அருளிற் பெரியது அகிலத்து இல்" என்றார், ஆசிரியர்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழுதல்

- திரு நா. நல்லதம்பி அவர்கள் -

திருவாசகத் தேனைப் பருகத் தந்த மாணிக்கவாசகர், "அவனருளாலே அவன்தாள் வணங்கி..." எனக் குறிப்பிடுகின்றார். இந்த அடியைச் சிறிது மாற்றினால், "அவன்தாள் வணங்கி அவனருளாலே வாழுதல்" வேண்டும் எனப் பொருள் கொள்ளலாம். அதாவது அவன் அருளைப் பெறவேண்டுமென்றால் அவனை வணங்கவேண்டும் என்பதாம்.

ஆகவே, அவன் அருளைப் பெறுவதற்கு வழி என்ன என்பதனை இதற்கு முன் அடியில் கூறியிருக்கிறார். "சிவன் அவன் என் சிந்தையில் நின்ற அதனால்" என்று அந்த அடி கூறுகின்றது. சிவன் அவனை எமது மனதில் இருத்தி (நினைத்து) வழிபட்டால்த்தான் அவன் அருளைப் பெறலாம் என்பது பெறப்படும்.

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன்" என்று வணங்கி னாற்றான், "நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லும் நா நமச்சி வாயவே" என்னும் பழக்கம் உண்டாகும்; அப்போதுதான் அவன் அருளைப் பெறலாம் என்று சுந்தரர் பாடுவது நமது சிந்தனைக்குரியது.

"தவமும் தவம் உடையார்க்கு ஆகும்" என வள்ளுவர் கூறியிருப்பது அவனருளாலே அவன்தாள் வணங்குதல் போல் ஆகும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவார்; நீந்தார்
இறைவனடி சேரா தார்.

என்பதற்கேற்ப நாம் இறைவனடியைச் சேரவேண்டும்; அது எமது வேலை. நமது கல்வி அறிவைக் கொண்டு கடவுளை வணங்கி அருள்பெற முயல வேண்டும்.

கற்றதனா லாய பய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

என்று அடுத்த வினாவை எழுப்புகிறார் திருவள்ளுவர். இதனையே நமது ஆறுமுகநாவலர் அவர்களும், நாம் கல்வி கற்பதன் நோக்கம் கடவுளை வணங்கி அவனருள் பெற்று முத்தியின்பம் பெறும்பொருட்டே என்று வற்புறுத்திக் கூறியுள்ளமை காணலாம்.

இனி, கல்வி பல பிறவிகளுக்குத் தொடர்ந்து நம்மோடு வருவது.

ஒருமையிற் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து என்பது வள்ளுவர் வாக்கு.

ஆகவே, தவம் தவம் உடையார்க்கு ஆகும் என்பதும், அவனருளாலே அவன்தாள் வணங்குவதென்பதும், கல்வி எழுமையும் ஏமாப்பு உடைத்து என்பதும் எம்மைப் பல பிறவிகளிலும் தொடர்ந்து வருவதை நமக்கு உணர்த்துவதை அறிவோமாக.

எனவே முன்னோர் செய்த தவப்பயன் என்பதும், கற்றறிந்த பெரியோர் பரம்பரை என்பதும் எவ்வாறு அமைகிறது என்பதை நாம் விளங்கிக்கொள்ளலாம். செயற்கரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களைச் செய்யும் பெரியோர்கள் எல்லாம் அவர்கள் பிறவிகள்தோறும் செய்த நல்வினையின் பலனாக வந்தவர்களே எனலாம்.

இவ்வாறு நாம் தொடர்ந்து பெற்றுவந்த இறை அருளை மேலும் வளர்த்து வையத்தில் வாழ்வாங்கு வாழ முயலவேண்டும்.

அப்பொழுது, நாம் அடைந்துள்ள நல்ல தகுதியை அல்லது பதவியை அறவழி வழுவாது காப்பாற்றிக் கொள்வது மிகவும் அவசியமாகும். நல்லவர்களும் தீயவர்களும் கலந்து வாழும் சமூகத்திலே, அரிதின் முயன்று பெற்ற நமது தகுதியைக் கீழ்நிலைக்கு இட்டுச் செல்லும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. தாட்சாயணியை இறைவனுக்கு மணஞ் செய்து கொடுக்கும் அளவுக்கு தவப்பேறு பெற்ற தக்கன், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன அமையப்பெற்றுத் "தகாதவன்" ஆன கதையை நாம் அறிவோம். ஆகவே அறநெறியில் தொடர்ந்து வாழ்வதற்கு இறையருளை என்றும் வேண்டிப்பெற்றுக் கொள்ள வேண்டும். "மனத்துக்கண் மாசு இலன் ஆதல்; அனைத்து அறன்" என்ற வள்ளுவன் நெறியைப் பற்றிக்கொள்ளல் உத்தமம்.

எனவே, சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால், அவனருளாலே அவன்தாள் வணங்கி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தால், ஒருவன் தெய்வத்துள் வைக்கப்படும் என்பதை உணர்ந்து வாழ்வோமாக.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

(குறள்)

## இறைவனே இங்கு கண் திறந்தால்

நாளை நமக்கொரு காலம் பிறந்தால்
நமக்கு அதுவே தீபாவளி,
நல்ல மழையில் நாற்று வளர்ந்தால்
நாட்டிற்கு அதுவே தீபாவளி,
ஏழை வயிற்றில் சோறு நிறைந்தால்
இறைவனுக்கு அதுவே தீபாவளி
**இறைவனே இங்கு கண்திறந்தால்**
உலகத்திற்கு அதுவே தீபாவளி.

*-கே.எஸ். சிவஞானராஜா-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

– சுவாமி கிருஸ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

**12. நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க எங்கேயும் ஓடவேண்டியதில்லை.**

வாழ்க்கைப் பிரச்சினைகள் சமயப் பிரச்சினைகள் மட்டுமல்ல. கீதையை ஒரு சமய நூல் என அழைப்பதன்மூலம் நாம் மகிழ்ச்சி அடையலாம் என்ற கருத்தோடு மட்டும் இருந்துவிடக்கூடாது. சமயம் என்றதும் வழமையாக எங்களது மனங்களில் நாம் புரிந்து வைத்துக் கொண்டிருப்பது யாதெனில் அங்கு ஒரு ஆன்மீக நூலையே கருதுகின்றோம். அந்நூலைப் பயபக்தியான சூழ்நிலையில் எமது தலைக்குள் சுமந்து கொண்டும், தொழுது கொண்டும் இருக்கவேண்டும் என்று கருதுகின்றோம். அது எந்தவகையான உலகியல் விடயங்களினாலும் மாசுபடுத்தப்படாது, மக்களது நாளாந்த விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உள்ள சூழ்நிலையில் இருந்து அதனை ஒதுக்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதுகின்றோம். அதற்கும் கடைகளுக்கும், சந்தைகளுக்கும் சாதாரண கிரியைகளுக்கும் தொடர்பில்லை என்று கருதுகின்றோம்.

எனினும், கீதையைச் சற்று வித்தியாசமான முறையில் ஆராய்ந்து கற்றுக்கொள்ள வேண்டும். நாம் சமயம் பற்றி எமக்கெனச் சொந்தமான சில கருத்துக்களை வைத்திருக் கின்றோம். உலகில் பல்வேறு சமயங்கள் இருக்கின்றன. அவற்றைக் கடைப்பிடிக்கின்ற போதும் துன்பப்பட்டவர்களாகவே வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். எங்களது எல்லாச் சமயங்களோடும் நாம் துன்பப்பட்டுக் கொண்டே வாழ்ந்து வருகின்றோம். வெளிப்படையாகவோ இரகசியமாகவோ நாம் ஒவ்வொரு நாளும் அழுதுகொண்டே காலம் கழிக்கின்றோம். எமது பாசமுள்ள குழந்தையைப்போல நாம் எம்முடன் கட்டியணைத்துக்கொண்டு வரும் சமயம் எங்களுக்கு எதுவித ஆறுதலையும் தந்துவிடவில்லை. எமக்கு ஆதரவு வேண்டியபோது எல்லாம் அந்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் சமயத்தை நாடிப்போவதில்லை. அப்போதெல்லாம் நமது பாதுகாப்புக்கும் ஆறுதலுக்கும் வேறு மூலங்களையே நாடி ஓடுகின்றோம்.

நாம் வெவ்வேறு சிக்கல்களை உடையவர்களாக இருக்கின்றோம். அச்சிக்கல்களை நாம் இன்று சுமந்துகொண்டு இருக்கின்ற சமயங்களினால் தீர்க்கமுடியும் என்பதற்கு இல்லை. இதற்கு மேலும் இதுபற்றி விளக்கம் ஏதும் தேவையில்லை எனலாம். எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒவ்வொரு நாளும் பல்வேறு திசைகளில் ஓடிக்கொண்டு இருக்கின்றோம். எம்மிடம் இவ்வாறு பிரச்சினைகள் இருப்பின் அவற்றைத் தீர்க்க நாம் ஒரு கோயிலுக்குப் போவதில்லை. இதிலிருந்து அவ்வாறு ஒரு சமயத்துக்குள் மட்டும் எமது வாழ்க்கை அடங்கியிருப்பதில்லை என்பதை உணரலாம். நாம் வணங்குகின்ற கடவுளோடும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பின்பற்றுகின்ற சமயத்தோடும், நாம் வாசித்து அதிலிருந்து பெற்றுக்கொள்கின்ற செய்தியுள்ள ஆன்மிக நூலோடும் நாம் திருப்திப்பட்டுக்கொள்ளவில்லை. ஏதோ சில காரணங்களினால் நாம் எப்போதும் மகிழ்ச்சி அற்றவர்களாகவே இன்று இருக்கின்றோம். மனிதன் எப்பொழுதும் மகிழ்ச்சி அற்றவனாகவே இருந்து வந்திருக்கின்றான். இன்றும் அவன் மகிழ்ச்சி அற்றவனாகவே இருக்கின்றான். எவ்வளவு காலத்துக்குத்தான் நாட்களை இவ்வாறு ஓட்டப்போகின்றான் என்பதும் அவனுக்குத் தெரியாது. மனிதரின் இந்த மகிழ்ச்சி இன்மைக்கு ஒரு தீர்வு இருக்கின்றதா? உண்மையில் நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியுமா? அதனை ஆராய்வது பெறுமதிமிக்க ஒரு செயலல்லவா? பகவத்கீதை பொதுவாக இப்பிரச்சினைகளை எப்படிக் கையாள வேண்டுமென்ற பணியை தனது கடமையாக எடுத்துக்கொண்டு இருக்கின்றது. அது எமது இயல்பின் ஒருபக்கப் பிரச்சினைக்கு மட்டும் தீர்வு காணும் பணியை எடுத்துக்கொள்ளவில்லை.

எமது பக்தியும், எமது சமய நடவடிக்கைகளும் எமது முழு வாழ்க்கையுள் அடக்கி இருக்கவில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாக அறிவோம். எமது வீட்டில் பரிசுத்தமான பூசை அறை ஒன்று இருக்கும். அதுவே எங்களின் சமயம். ஆனால் நாம் வீதியில் நடந்து போகும்போதும், கடையில் பொருள்களை வாங்கும்போதும், பஸ் வண்டியில் பிரயாணம் செய்யும்போதும், புகையிரதத்தில் செல்லும்போதும் அந்த எமது சமயத்தை விட்டு வேறோர் வழியையே கடைப்பிடிக்கின்றோம். விவேகமின்றித் தவிர்க்க முடியாதபடி ஈடுபடுகின்ற இந்தப் பல்வேறு அம்சங்களிலும் வாழ்க்கையில் எமது எதிர்கொள்ளல்களைச் சமயத்தினால் சமாளித்துக் கொள்வோமாயின் நாம் எம்மை உண்மையான சமயிகள் என்றும், எப்போதும் கடவுள் எமக்கு உதவுவார் என்றும் கூறலாம். பின்பு எமது நாளாந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள எவரிடமும் நாம் ஓடவேண்டிய தேவையில்லை.

### 13. நாம் இந்தப் பூமிக்கு மட்டும் உரியவர்கள் அல்லர்

நிலையில்லாத யாவும் நிலையானதன் ஒரு வெளிப்பாடே ஆகும். அந்த நிலையானது நிலையில்லாத சூழ்நிலைகளையும் கூட விளக்கக்கூடிய ஆற்றலுள்ளதாக இருக்க வேண்டும். எமது நாளாந்த உலகியல் வாழ்க்கையிலும் கூட எமக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கக் கூடிய ஓர் நிலையான செய்தியைப் பகவத்கீதை கொண்டுள்ளதாகக் கருதப்படுகிறது. எங்களுக்கு ஒரு தாயைப்போல எல்லாவற்றையும் தன்னிடத்தே வைத்துக்கொண்டு அது எமக்குத் தரக்கூடியதாக இருக்கின்றது. எமது தாயுடன் எமக்குள்ள உறவு சமயம் மட்டுமன்று. அது எல்லாவற்றுக்குமாகவே நாம் நமது தாயுடன் கொள்ளும் உறவாகும். எமது உயிர் வாழ்க்கையில் ஒரு குவளை தேனீருக்கும், ஒரு கரண்டி சீனிக்கும், மற்றும் பலவற்றுக்கும் நாம் எமது தாயுடன் உறவு கொள்கின்றோம். எமது உயிர் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் உள்ள நெருக்கடிகளில் இருந்து எம்மை விடுவித்துக்கொள்ள கீதை இதுபோன்ற மிகச்சிறிய விடயங்கள்முதல் எல்லா விடயங்களையும் விசேடமாகக் கவனித்துக் கொள்கிறது. எமது வெளி ஆளுமை மட்டுமன்றி எம்மிடமுள்ள முழு ஆளுமையின் முக்கியசாரத்தை இந்த உலகிலுள்ள எல்லாவற்றோடும், முழுப் படைப்போடும் தொடர்புபடுத்தி வைக்கின்றது. நாம் இந்த ஊருக்கு மட்டும் உரியவர்களோ இந்த நாட்டுக்கு மட்டும் உரியவர்களோ இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிக்கு மட்டும் உரியவர்களோ அல்லர். வாழ்க்கையின் பல்வேறு தளங்களுக்கும் செல்லக்கூடிய ஒரு கடவுச்சீட்டை நாம் எம்முடன் வைத்துக்கொண்டு இருக்கின்றோம். நாம் கடவுளின் படைப்பில் உள்ள அவரது குடிமக்கள் ஆக உள்ளோம். இந்தப் பூமி மட்டும்தான் எமது வாழ்விடம் அன்று. ஒரு குறிப்பிட்ட நாட்டின் பிரசைகள், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற முறையில் எமது உலகியல் கடப்பாடுகள், தற்காலிக தேவைகள் என்பவற்றுக்கு அப்பாலும் ஒரு கடமை உள்ளவர்களாக நாம் இருக்கின்றோம்.

**14. பிரபஞ்ச விதிகளும் ஏனைய விதிகளும்.**

நாம் பிறந்த சமூகம், நாடு என்பவற்றில் எல்லைகளைக் கடந்த ஒரு கடப்பாடு எமக்கு உண்டு. இயற்கை விதியின் தேவைகளை நாம் நிறைவேற்றும் போதும், சூழ்நிலையில் இயங்கும் விதியைக் கடைப்பிடிக்கும்போதும் அந்தவிதி எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும். அது அதனால் ஒருபோதும் எம்மைத் தண்டிக்காது. அதற்கு இணங்க ஒழுகினால் அது எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும். அதனைமீறி அதற்கிணங்க ஒழுகாவிடின் அது எம்மைத் தண்டிக்கும். எனவே இந்த உலகத்தில் உள்ள அந்த விதி இயங்குவதை மதியாமல் விடுவோமாயின் அதன் விளைவாக வாழ்க்கையில் நாம் துன்பப்படுவோம்.

நாம் பிறந்துள்ள ஒரு குடும்பத்தின், ஒரு சமூகத்தின், ஒரு குறித்த நாட்டின் ஒருவகை விதியை நாம் மதித்து நடக்கிறோம் என மட்டும் எண்ணக்கூடாது. ஏனெனில் அதுதான் எல்லாமென்று நாம் எண்ணிவிடக்கூடும். எம்மைக் கவனித்துக்கொள்ள அது போதும் என்றும் நாம் எண்ணக்கூடும். எமது குடும்பத்திலுள்ள விதியை மட்டும் மதித்து அதனைக் கடைப்பிடித்துக்கொண்டு முழுத்தேசத்துக்கும் உரிய விதியை மதிக்காது விடின் எமது குடும்பவிதி மட்டும் எமக்கு உதவப்போவதில்லை. நாம் குடும்ப விதியை நன்றாக அனுசரிக்கிறோம் என்பதைப் பாராது நாம் புறக்கணித்த தேசிய விதி நம்மைப் பின்தொடரும். இந்த உதாரணத்தை நாம் மேலும் நீடித்துக் கொள்ளலாம்.

சர்வதேச விதியும் அதுபோல நமக்கு முக்கியமானதே ஆகும். நாம் அது தேவையில்லையெனத் தள்ளிவைப்போமாயின், எமது சிறிய நாட்டுக்கு மட்டும் பற்று உடையவர்களாக இருப்போம் ஆயின் அது எமக்கு ஆறுதலைத் தரப்போவதில்லை. அது எமது முழு நாட்டையும் ஓர் ஆபத்தான நிலைக்குள்ளேயே தள்ளிவிடும். எங்கும் எதிலும் அதே நிலையே உள்ளது. இந்நாட்டின் சிறிய விதிகளை நாம் கடைப்பிடிக்கலாம். அதனால் சர்வதேச விதிக்கு மட்டுமன்றி அதற்கும் மேலுள்ள ஓர் உயர்ந்த பிரபஞ்ச விதியை நாம் மீறக்கூடும். அது தொழிற்படுவதைப் புறக்கணிப்போமாயின் எமக்கு எதிராக அது நடவடிக்கை எடுக்கும். எங்கும் இயங்கிக் கொண்டு இருக்கின்ற அந்தப் பிரபஞ்சத்தின் அமைப்பைப் பகவத்கீதை எங்கள் முன்னே காட்சிக்கு வைக்கின்றது. அவ்விதிக்கு இணங்க நாம் ஒழுகுவோமாயின் ஓர் அரசாங்கத்தின் யாப்பு எம்மை எப்படிப் பாதுகாக்கும் என்று எதிர் பார்ப்போமோ அப்படியே அதுவும் எமக்கு உயர்ந்த பாதுகாப்பைத் தரும். எமது மற்றைய எல்லா விதிகளும் அந்த உயர்வு விதிகளுக்கு கீழேயே இயங்குகின்றன. பகவத்கீதை யினுடைய அவ்வாறான செய்தி பேரழகு வாய்ந்த ஒன்றாகும்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதத்தில் பிரார்த்தனை தரும் வெற்றி

– திரு வீ. செல்வரெத்தினம் அவர்கள் –

நம்பிக்கையோடு செய்யப்படும் பிரார்த்தனை துயரப்படுவோரின் துயரைப் போக்கும். இது நோயாளிகளின் உயிர்களை மீட்கும் என்கிறது வேதம். யோகத்திற்கும் தியானத்திற்கும் அடுத்த நிலையில் எல்லோராலும் கைக்கொள்ளக் கூடியது பிரார்த்தனையாகும்.

பிரார்த்தனை என்பது ஒரு மகத்தான சக்தி. மனதை ஒருமுகப்படுத்தி இறைவனிடம் இணைந்திருக்கும் முறையே பிரார்த்தனையாகிறது.

மனித வாழ்க்கையின் பல்வேறு துன்பங்களைப் போக்குவதற்கு இந்து மதம் பிரார்த்தனையை சர்வ சஞ்சீவியாகக் கொண்டிருக்கிறது. பிரார்த்தனை முறையாகச் செய்தால் பெரும் வெற்றி கிட்டும்.

மன நிம்மதியைப் பெறுவதற்காகப் பலரும் ஏதேதோ செயல்களை எல்லாம் செய்து நிம்மதியடையப் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நிம்மதி கிடைப்பதில்லை. பிரார்த்தனை ஒன்றுதான் மனிதனுக்கு உண்மையான நிம்மதியைக் கொடுத்து மனதைத் தூய்மையாக்கு கின்றது.

மேல் நாடுகளிலும்கூட எந்த நல்ல காரியம் செய்யத் தொடங்கும்போதும் பிரார்த்தனையுடனேயே ஆரம்பிக்கிறார்கள். "இறைவனே இந்த நாட்டையும் மக்களையும் பீடித்துள்ள கஷ்டங்களை நீக்கி சரியான பாதையில் வழிகாட்டு" என்பதே அந்தப் பிரார்த்தனையாகும். மேலும் இறைவனுக்குப் பூஜையுடனான வழிபாடு செய்வது மட்டும் பிரார்த்தனையாகாது.

எமக்குத் தேவை ஏற்படும் போதோ, கஷ்டம் வரும் போதோ, பயத்தினால் துன்பம் வரும்போதோ, ஆசை ஏற்பட்டு நிறைவேறாதபோதோ பிரார்த்தனை செய்து அவற்றைப் பெறலாம்.

மனிதன் தன்னிடத்திலே உண்மையான வலிமையை- வல்லமையை தேக்கி வைத்துக்கொள்ள உதவும் சாதனமாகவும் பிரார்த்தனை திகழ்கிறது. மேலும் ஒரு குறிக்கோளைச் சிக்கல் இல்லாமலும் இடையூறு இல்லாமலும் அடைவதற்கு இப்பிரார்த்தனை உதவுகிறது.

மனத்தைச் சிதறவிடாமல் ஒருமுகப்படுத்தி எண்ணங்களுக்கு வலிமை ஏற்றுச் செய்யப் படும் எந்த ஒரு முயற்சியும் - பிரார்த்தனையும்- சந்தேகமற்ற வெற்றியை நமக்கு அளிக்கும் என்பது மனோதத்துவ விளக்கமாகும்.

மன நிலைப்படுத்துகின்ற பொழுது வேறு தகாத எண்ணங்கள் புகாவண்ணம் ஒன்றையே மனதில் நிறுத்தி மன ஒருமைப்பாட்டிற்கு முயல்வதே பிரார்த்தனையாகும்.

நீ இறைவனிடம் உன் சக்திக்குத் தகுந்த வேலைக்காகப் பிரார்த்தனை செய்யாதே. வேலைக்குத் தகுந்த சக்திக்காகப் பிரார்த்தனை செய் என்று கூறுகிறார் மேல் நாட்டு அறிஞர் பிஷப் பிலிப்புக்ஸ். மேலும் ஸ்ரீமதி ஆஸ்கூட நல்லவைகளை அடைய நீங்கள் பாடுபட்டு உழையுங்கள். நல்ல காரணங்களுக்காக நீங்கள் செய்யும் உழைப்பு கடவுளுக்குச் செய்யும் பிரார்த்தனையாக அமைகிறது என்கிறார்.

ஆம்! பிரார்த்தனை என்பது கடவுளுடைய சம்பாசனையாகும். அது மனிதனின் பாரத்தைக் குறைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகங்கள் கலையும் வரை பொறுத்திருந்தால்தான் சூரிய ஒளியைப் பார்க்க இயலும். அதேபோல் அஞ்ஞானம் அகலும் வரையில் பொறுமையாகப் பிரார்த்தனை செய்தால்த்தான் இறையருள் கிட்டும்.

தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும் துயரங்களும் அடங்கி, உள்ளத்தில் அமைதி உண்டாவதற்குப் பிரார்த்தனையைவிடச் சிறந்த வழி வேறு இல்லை என்று உலகம் போற்றும் மகாத்மா காந்தி சொல்லியிருக்கிறார்.

எனவே உங்களுடைய துன்ப காலத்திலும், தோல்விக் காலத்திலும் நீங்கள் பிரார்த்திக்கிறீர்கள். உங்களுடைய மகிழ்ச்சி நிறைந்து வழியும்போதும் வளம் மிக்க காலத்திலும்கூட நீங்கள் பிரார்த்திப்பீர்களானால் அது உங்களுக்கு மிகச் சிறந்த பயனை விளைவிக்கும்.

பிரார்த்தனையில் பத்து அம்சங்கள் இருக்கின்றன. அதனை ஆங்கில தத்துவ மேதையும், ஆன்மிகக் கருத்துக்களை அழகாக அளித்தவருமான டாக்டர் நார்மனவின் சென்ட்பீல் இப்படி சொல்லி இருக்கிறார்.

1) நாள்தோறும் சில நிமிடங்களைப் பிரார்த்தனைக்காக ஒதுக்கி வையுங்கள். வேறு சிந்தனையின்றி கடவுளைப்பற்றி மட்டும் நினைத்துப் பிரார்த்தனை செய்யுங்கள்.

2) பின்னர் தங்கள் பிரச்சினைகளை இறைவனிடம் முறையிடுங்கள்.

3) எச்செயலைச் செய்யும்போதும் இறைவன் உங்கள் முன் இருப்பதாக எண்ணிக் குட்டிப் பிரார்த்தனை செய்யுங்கள்.

4) அடிக்கடி இறைவனிடம் எமது தேவைகளுக்காக வேண்டுதல் செய்யாமல், இதுவரை எமக்குக் கிடைத்ததையிட்டு திருப்தி அடையுங்கள்.

5) உங்கள் பிரார்த்தனைகள் உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் முழு நிம்மதியைத் தரும் என்று நம்புங்கள்.

6) பிரார்த்தனையின்போது தீய எண்ணங்கள் ஏற்படாமல் தூய உள்ளத்தோடு பிரார்த்தனை செய்யுங்கள்.

7) கடவுளிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள். ஆனால் அவர் கொடுப்பதை முழுமனத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். இதுவே பிரார்த்தனையின் பயனாக அவர் கொடுத்தும், கொடுக்கிறதும், கொடுக்காமலும் போவது இறைவனது விருப்பம்.

8) ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு இயன்றதைச் செய்யுங்கள். பலன் தருவதும், தராததும் அவரது விருப்பம் எனக் கொள்க.

9) உங்கள் விரோதிகளும், உங்களைச் சரியாகப் புரியாதவர்களும் நலம்பல பெற அவர்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள். ஆன்மிக சக்தியின் முதல் விரோதி வெறுப்புணர்ச்சி என்பதை உணருங்கள்.

10) யார் எவருடைய நன்மை வேண்டிப் பிரார்த்தனை செய்வது என்று எண்ணிக் கொள்ளுங்கள். எவ்வளவு அதிகமானோருக்கு குறிப்பாகச் சம்பந்தப்படாதவர்களுக்கும் பிரார்த்தனை செய்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உங்களுக்குப் பலன் கிடைக்கும்.

நாம் பிறருக்காகப் பிரார்த்தனை செய்யும்போது ஆண்டவன் நமக்கு மிகவும் அருகில் வருகிறான் என்பதை உணருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

அங்கு இரவுப் பொழுதைக் கழித்தபின் காலை 7.00 மணியளவில் பண்டாரவளை கோணமுட்டாவ ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையினரின் 3ஆவது ஆண்டு நிறைவுவிழாவிலும் கண்ணப்ப நாயனாரின் குருபூசை நிகழ்விலும் கலந்து கொள்வதற்காக ஆயத்தமானோம். இக்குருபூசை நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க ஆச்சிரம சுவாமிகளை அழைத்திருந்தனர். அதில் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றைக் கூறும் "அன்புக்கோர் கண்ணப்பர்" என்ற இசைச் சொற்பொழிவை ஆற்றுவதற்காக எம்மை அழைத்ததுடன் இதற்குரிய பக்கவாத்திய சகிதமாக நாங்கள் அங்கு சென்றிருந்தோம். நாமெல்லோருஞ் சென்றதும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத் தலைவர் திரு இராமச் சந்திரன் அவர்களது இல்லத்தில் எமக்குரிய காலைச் சாப்பாடு ஒழுங்கு பண்ணப்பட்டிருந்தது. எனவே அத்தம்பதிகளின் அன்பான உபசரிப்பில் காலை ஆகாரத்தை முடித்து கோணமுட்டாவ மகா வித்தியாலய மண்டபத்திற்குச் சென்றோம். அதன் அதிபர் அவர்களும் இத்தலைவரின் இல்லத்திற்கு வந்து எம்மை அழைத்திருந்தார்.

அங்கே அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். இவ்வறநெறிப் பாடசாலையானது பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பது அவதானிக்க முடிந்தது. மிகமிக வறுமைச் சூழலில் மாணவர்கள் மதமாற்ற கெடுபிடிகள், அறிவீனம் என்பவற்றிற்கு முகங்கொடுத்த வண்ணம் எதிர்நீச்சல் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தியை ஞானச்சுடர் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இங்குள்ள பிள்ளைகள் மிக அழகான சீருடைகளுடன் அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள சிறப்பான கட்டிடத்தில் ஒவ்வொரு ஞாயிறு தோறும் உரிய ஆசிரியர்களின் சிறப்பான கற்பித்தலுடன் வழிகாட்டப்படுகிறார்கள் என்பது மிகுந்த தெம்பைத் தருகிறது.

அதுமட்டுமல்ல இந்த அம்பிகை ஆலயத்தைத் தரிசித்தபொழுது சகல பரிவார மூர்த்திகளையும் ஐயப்பன் உட்பட ஆலயத்தினுள் அமைத்து உரிய உரிய தினங்களில் மிக உற்சாகமாக அழகாகக் கொண்டாடி வருகின்றார்கள் என்பதையும் அறிய முடிந்தது. அத்துடன் இதன் உள்வீதியில் அமைந்துள்ள சுவர்களில் நேரு, காந்தி, விவேகானந்தர், பாரதி, இந்திராகாந்தி ஆகியோரின் படங்களுடன் முருகன், சிவன் பார்வதி ஆகிய திருவுருவப் படங்களும் வரையப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

இவ்விழாவிற்கு இனிய விருந்தினர்களாக எமது ஆச்சிரம சுவாமிகளுடன், அங்குள்ள சில அரசியற் பிரமுகர்களையும், ஆலய தர்மகர்த்தாக்களையும், பாடசாலை அதிபர் உட்பட கலாச்சார உத்தியோகத்தர்களையும் அழைத்திருந்தனர். சம்பிரதாய பூர்வமாக மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமாகியது. பெருமளவு பெற்றோர்களும், ஆசிரியர்களும், பிரமுகர்களும் விழாவிற் கலந்துகொண்டு அப்பெருமண்டபத்தை நிறைத்திருந்தனர். பிள்ளை கள் விரலுக்கேற்ற வீக்கம் என்பதற்கமைவாக பல்வேறு வகையான ஆடல்பாடல், கவிதை, நாடகம் என கலைநிகழ்வுகளை வழங்கித் தங்கள் ஆற்றலை வெளிக்கொணர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்குரிய பின்னணி இசையாக, பாடல்களாக, CDக்களூடாகவே (இறுவட்டுக்கள்) வழங்கியது குறிப்பிடத்தக்கது. ஒரு மாணவனின் கவிதை சபையோர் உள்ளங்களைத் தொடும் வகையில் குறிப்பாக எமது மனங்களையும் தொடும் வண்ணமாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வுகளின் மத்தியில் எம்மை அன்புக்கோர் கண்ணப்பர் நிகழ்விற்கு அழைத்தனர். காலம் அகாலமாகிக் கொண்டிருந்தது. சிறார்களின் நிகழ்வுகள் இன்னும் இருந்தன. எனவே பக்கவாத்திய சகிதம் மிகவும் சுருக்கமாக 20 நிமிடங்களில் முடிக்கவேண்டியிருந்ததால் அதனை அவர்களின் நிலைக்கேற்ப நடாத்தி முடித்தோம். இதனைத் தொடர்ந்து பிள்ளைகளும் கண்ணப்பரின் வரலாற்றை மிக அற்புதமான நாடகமாக வழங்கியிருந்தது சிறப்பாக அமைந்தது. உண்மையில் எம்மவர்கள் இங்கு இத்தகைய பெருமெடுப்பில் நால்வரின் குருபூசைகளைக் கூடக் கொண்டாடுவதை நாமறிந்திலோம். இவர்கள் கண்ணப்பருக்கு இத்தகு பெருவிழா எடுத்து எம்மை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துக் கௌரவப்படுத்தியது வரலாற்றுச் சிறப்பாகப் பதியப்படுகிறது. அத்துடன் எமது கிராமப்புற பாடசாலைகளைப்போல வளப் பற்றாக்குறைகளுடன் இருந்தபொழுதிலும் அனைத்து மாணவர்களையும் பங்குபற்ற வைத்து அவர்களது திறமைகளுக்கு களங்கொடுத்து ஊக்குவித்த சிறப்பும் இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களின் திறமைக்குச் சான்றாகின்றது.

ஆச்சிரம சுவாமிகள் மிகத் திறமையான பிள்ளைகளுக்கு ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்கியபின் பிற்பகல் 4.00 மணியளவில்தான் எமது மதிய உணவு அமைந்தது.

இவ்விழாவை இனிது முடித்துப் பின் கோணமுட்டாவ தமிழ் வித்தியாலய அதிபரது அழைப்பின்பேரில் அப்பாடசாலையை அவதானித்தோம். எமது பாடசாலைகளைப்போல சமதரை இல்லை. ஒரு வகுப்பறைத் தொகுதி ஒரு புறமும் மறு வகுப்பறைத் தொகுதி சற்றுப் பள்ளத்திலும், ஏனையவை உயரத்திலும் காணப்பட்டன. அத்துடன் விளையாட்டு மைதானங்கூட மலையை வெட்டிச் சமதரையாக்கி அமைக்கப்பட்டிருந்ததை உங்கள் மானசீகமான பார்வைக்குத் தருகிறோம். இங்குள்ள O/L படிக்கும் மாணவர்களுக்கு போதிய பிரத்தியேக கல்வி வகுப்புகள் கிடையாது. அவற்றைப் பெற முயற்சித்தாலும் பணவசதி ஆசிரிய ஆளணி. குறிப்பாக மிகப் பிரபல பாடசாலைகளில் கூட விஞ்ஞானப் பிரிவு உயர் தர வகுப்புக்கள் கிடையா. அச்சத்துடன் கலைப்பிரிவில்தான் மாணவர்கள் பயில்கிறார்கள். விஞ்ஞான கணித ஆசிரிய ஆளணி மிகக்குறைவு என்பதால் குறிப்பாக O/L மாணவர் களுக்குரிய விஞ்ஞான கணித வினாவிடைத் தாள்களையும், ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் வினாத்தாள் தொகுதிகளையும் வழங்கி உதவுமாறும் அன்பு வேண்டுகோள் விடுத்தார். அதற்கு அமைவாக சுவாமிகள் இவர்களுக்கு மட்டுமல்ல இங்குள்ள 10-15 பாடசாலை களுக்குரிய (O/L) வினாத்தாள்களையும், ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் வினாத் தாள்களையும் இயலுமானவரை நாம் மாதாந்தம் வரும்பொழுது வழங்கியுதவுவோம் என்ற ஆணித்தரமான வாக்குறுதியை அளித்தார்கள். அதன் பிரகாரம் இன்றுவரை சந்நிதியான் ஆச்சிரமத்தால் மலையகப் பிள்ளைகளின் கல்விச் சேவைக்கான இவ்வினாத்தாள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதை எம் வாசகர்களுடன் பகிர்கிறேன். இந்நிகழ்வுகளை முடித்து பதுளை மகளிர் இல்லம் சென்று அங்கு எமது இரவுச் சாப்பாட்டை முடித்து மீண்டும் யாழ் நகர் நோக்கிய பயணம் தொடர்ந்தது. இவ்வாக்குறுதிகளுக்கமைவாக 06.03.2015 வெள்ளி பி.ப. 8.45 மணியளவில்...

(காட்சி தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாரூர் பற்றிய சுருக்கம்

– திரு T. ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் –

## திருவாரூர் மகிமை

பிறக்க முத்தி தரும் திருத்தலம் திருவாரூர்.
ஆழித்தேரின் அழகுக்குப் பெயர்பெற்ற திருவாரூர்.
சப்த விடங்கத் தலங்களில் பிரதான தலம் திருவாரூர்.
முசுகுந்தச் சோழன் புகழாட்சி நடத்திய திருவாரூர்.
பரவை நாச்சியார் அவதரித்த தலம் திருவாரூர்.
அருணகிரிநாதரும் ராமலிங்க வள்ளலாரும் பாடிப்பரவிய திருவாரூர்.
எமதர்மனே சண்டேஸ்வரராக அமர்ந்திருக்கும் திருவாரூர்.
நவக்கிரகங்கள் ஒரே நேர்கோட்டில் நிற்கும் திருவாரூர்.
சிவகணங்களே ஊர் மக்களாக வந்து பிறக்கும் திருவாரூர்.
தியாகேசர் வீதிவிடங்கராக அஜபா நடனமாடி அருள் செய்யும் திருவாரூர்.
செல்லத் தியாகேசர் மனுநீதிச் சோழனுக்கு அருள் புரிந்த திருவாரூர்.
திருமகளாம் கமலைச் செல்வி தவம் செய்ததால் "கமலாலயம்" ஆன திருவாரூர்.
அம்பிகை பராசக்தி கமலாம்பாளாக யோகத் திருக்கோலம் கொண்டிருக்கும் திருவாரூர்.
சுந்தரர் "திருத்தொண்டத் தொகை" பாடி அடியவர் பெருமையை உலகிற்கு உணர்த்திய திருவாரூர்.
கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் மூவரினதும் அவதாரத் தலமான திருவாரூர்.
காடவர் கோன் கழற்சிங்கன், நமிநந்தியடிகள், விறல்மிண்டர் முதலாய நாயன்மார்கள் திருத்தொண்டு புரிந்த பெருமைக்குரிய திருவாரூர்.

**பொது:**

திருவாரூர் மூலாதார ஸ்தலம் எனப் போற்றப்படுவது, எல்லாச் சிவாலயங்களின் சந்நிதிச் சிறப்பு சாயரட்சை எனப்படும் திருவந்திக் காப்பு நேரத்தில் இத்தலத்திலேயே வந்து ஒடுங்குவதாக ஐதீகம் உள்ளது. தேவயோகபுரம், வன்மீகநாதபுரம், தேவாசிரிய புரம் மூலாதாரபுரம் எனப் பதினொரு நாமங்களைக் கொண்டது இத்தலம்.

திருமுறைப் பாடல்கள், சேரமான் பாடிய திருவாரூர் மும்மணிக்கோவை திருவாரூர் நான்மணிமாலை, திருவாரூர் உலா போன்றவையும், முத்துஸ்வாமி தீட்சகர் - சியாமளா சாஸ்திரிகள் ஆகியோரின் கீர்த்தனைகளும் இன்னும் பலரும் பாடிய தனிப்பாடல்களும் இத்தலத்தின் சிறப்பைக் கூறுகின்றன.

**கிழக்கு ராஜகோபுரம்:**

அகன்ற பெருவீதியில் நெடிதுயர்ந்து கம்பீரமாகக் காட்சி தரும் கிழக்கு ராஜ கோபுரம் 118அடி உயரங்கொண்ட ஏழு நிலைக் கோபுரம். உச்சியில் பளபளக்கும் 11 கலசங்கள். அடிப்பகுதியும் முதல் தளமும் கருங்கல் கட்டுமானம்.

*படகு நீரில் இருக்கலாம் ஆனால், நீர் படகிலிருத்தலாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்தேர்:**

சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகராகத் திகழ்ந்தது திருவாரூர். இங்கிருந்து ஆட்சி செய்த புகழுக்குரிய மன்னன் மனுநீதிச் சோழன் வரலாறு அனைவரும் அறிந்ததே. அரசன் மகன் தேரோட்டிச் செல்ல பசுக்கன்று ஒன்று தேர்ச்சில்லில் மாட்டி இறந்து போக தாய்ப்பசு அரண்மனை வாசலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியை அடித்து நீதிகேட்க அரசன் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுத் தேரோட்டிய வரலாறு பிரபலமானது. மனுநீதிச் சோழனின் பெருமை பேசும் வகையில் 20 அடிக்கும் கூடிய முழுமையாக கல்லாலான தேர், தேர்க்காலில் கிடக்கும் கன்று, மணியடிக்கும் பசு, நீதி வழங்கும் அரசன், ஆணை பெறும் மந்திரி என ஒரு சிற்பத் தொகுதியே கற்தேரைச் சுற்றிக் காணப்படுகிறது. தேர்ச்சில்லில் அகப்பட்டு இறந்த கன்றுக் குட்டியின் பார்வை இருக்கிறதே... அப்பப்பா... நம் கண்களிலும் கண்ணீரை வரவழைக்கிறது.

**கமலாலயக் குளம்:**

திருவாரூர் கோயிலின் மேற்குப் புற வீதியில் சாலைக்கு அருகாகக் காணப்படுகிறது கமலாலயக் குளம். கோயிலின் அகலம் எவ்வளவோ அவ்வளவு அகலம் கொண்ட சற்சதுர வடிவான ஒழுங்கான படிக்கட்டுக்கள் கொண்ட சுத்தமான திருக்குளம் கமலாலயக் குளம். இறங்கிக் குளிப்பதற்கென்றே சிற்சில இடங்களில் மேலதிக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. குளத்தைச் சுற்றி 64 சிறிய சிறிய ஒரே மாதிரியான மண்டபங்களும் குளத்தின் நடுவே அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலும் காணப்படுகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகப் பெருவிழா வேளையில் திருவாரூரைச் சுற்றியுள்ள இடங்களிலிருந்து புறப்பட்டு வரும் சுவாமிகள் அனைத்தும் சிறிய மண்டபங்களில் அமர்ந்திருக்க குளத்தின் நடுநாயகமாக தியாகராஜர் வீற்றிருப்பார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

பிறவிகளிலேயே உயர்ந்தது மனிதப் பிறவி. அப்படி, மனிதர்களாய்ப் பிறந்தவர்கள் துயரப்படும்போது அதிலிருந்து விடுபடும் வழிகளைச் சொல்வதோடு, வாழவேண்டிய வழிமுறைகளையும் சொல்வது மகாபாரதம். இதில் இல்லாத தர்மமோ, தத்துவமோ வேறெங்கும் கிடையாது என்பார்கள் பெரியோர்கள்.

மகாபாரதத்தில் உள்ள "பகவத்கீதை" மக்களிடையே பிரபலமான ஒன்று. ஆனால் இந்த மகாபாரதத்திலேயே உள்ள "விதுர நீதி" என்பது மக்களிடையே பிரபலமாகவில்லை.

"ஏராளமான உயர்ந்த கருத்துக்களையும், தத்துவங்களையும், வாழ்க்கைக்கு அவசிய மான வழிமுறைகளையும் கொண்ட இந்நூல் மக்களிடையே பரவவேண்டும். மகாபாரதத்தை பலமுறை படித்தபோதும் "விதுரர்" என்ற கதாபாத்திரம் என்னிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத் தியது. தர்மத்திற்கும் அதர்மத்திற்குமிடையே சிக்குண்டு செய்வது என்ன? என்று குழம்பித் தெளிந்த பாத்திரமாக விதுரர் என்னால் உணரப்பட்டார். அதர்ம சிந்தனையாளருடன் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுகையில் தர்மவான்கள் எப்படியான வாழ்க்கை முறையைப் பின்பற்றலாம் எனும் வினாவுக்கு விடை விதுரர் எனும் கதாபாத்திரமாகத்தான் இருக்க முடியும்.

இன்றைய கால சூழலில் விதுரர், திருதராஷ்டிரனுக்குச் சொல்வதாகவுள்ள "விதுர நீதி" எனும் பகுதியின் கருத்துக்கள் அவசியமாகப்படுகிறது. கண்ணில்லாத திருதராஷ்டிரனுக்கு சொல்வதாக அமைந்த பகுதி கண் இருந்தும் குருடராகவுள்ள இன்றைய பெரும்பான்மை யினருக்கு அவசியமானதாகும்.

எனது இந்தக் கட்டுரையில் உள்ள நல்லவைகளுக்கு, மூல நூலாசிரியரான மகான் வியாசரும், வில்லிபுத்தூர் ஆழ்வாரும், காஞ்சி மகான் அமரர் சங்கராச்சாரியாரும், வாரியார் சுவாமிகளும், துக்ளக் சோ. இராமசாமியும்தான் உரியவர்கள் என்பதனை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தவறுகள் வருமாயின் அதற்கு நான்மட்டும்தான் பொறுப்பு.

"விதுர நீதியை" எழுதப் புகுமுன் விதுரர் யார் என்பதை சுருக்கமாகத் தர விரும்பு கிறேன். விதுரர்- விதுராழ்வார் என்று பக்தர்களால் கொண்டாடப்படுபவர். மகானான வியாச முனிவரால், "தர்ம சாத்திரத்திலும், ராஜநீதி சாத்திரத்திலும் தேர்ச்சி பெற்றவர். கோபமும், ஆசையும் இல்லாதவர். எதனையும் தீர்க்கமாக ஆராய்பவர். அமைதியாக இருப்பவர்" என் றெல்லாம் பாராட்டப் பெற்றவர்.

மகாபாரதத்தில் வியாச முனிவரின் அருளால், விசித்திர வீரியன் மனைவிகளில் அம்பிகைக்கு திருதராஸ்டிரனும், அம்பாலிகைக்கு பாண்டுவும் பிறந்தபோது, அம்பிகையின் தூண்டுதலினால் அவளுடைய வேலைக்காரியிடம் தருமதேவன் - எமதர்மன் விதுரராக வந்து பிறந்தார்.

,ஆணிமாண்டல்யரின் சாபம்தான் தர்ம தேவனை விதுரராக வந்து பிறக்க வைத்தது. மாண்டல்யர் என்ற முனிவர் எல்லாத் தர்மங்களையும் அறிந்தவர். சத்தியத்திலும், தவத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாக இருப்பவர். அவர் ஒருநாள் தன் ஆச்சிரமத்தின் வாயிலில், மரத்தடியில், கைகளை உயரே தூக்கிக்கொண்டு மௌன நிலையில் தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது திருடர்கள் சிலர் திருடிய பொருட்களோடு ஆச்சிரமத்தில் நுழைந்து ஒளிந்து கொண்டார்கள். திருடர்களைத் துரத்திக்கொண்டு வந்த காவலர்கள் திருடர்களைப் பிடித்தார் கள். விவரமறியாத அந்தக் காவலர்கள் மௌன நிலையிலிருந்த மாண்டல்யரையும் சந்தேகப் பட்டுத் திருடர்களுடன் கூடவே இழுத்துக்கொண்டுசென்று அரசனிடம் ஒப்படைத்தார்கள்.

மன்னன் மாண்டல்யர் உட்பட அனைவரையும் கழுவிலேற்றக் கட்டளையிட்டான். காவலாளிகளும் அப்படியே செய்துவிட்டார்கள். கழுவில் ஏற்றப்பட்ட மாண்டல்யர் வெகுகாலம் வரையிலும் உண்ணாமலிருந்தும் மரணமடையவில்லை. உயிரை நிறுத்திக்கொண்டு, ரிஷிகளை வரவழைத்தார். கழுமுனையிலும் அவர் செய்துகொண்டிருந்த தவத்தைக் கண்ட ரிஷிகள் இரவு நேரத்தில் அவரருகில் வந்து, "முனிவரே! இந்தக் கழுவில் இப்படியான கொடுமை மிகு துயரத்தை அனுபவிக்கும் படியான பாவம் என்ன செய்தீர்கள்? அதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம்" என்று கேட்டனர்.

மாண்டல்ய முனிவர், "நான் ஒரு பாவமும் செய்யவில்லை" என்றார். வந்த ரிஷிகள் போய் விட்டார்கள்.

வெகு காலத்திற்குப் பிறகு ஒருநாள், காவலாளிகள் கழுவில் உயிருடனிருந்த முனிவரைக் கண்டு பிரமித்து மன்னனிடம் தெரிவித்தார்கள். இதைக் கேட்டவுடன், மன்னன் மந்திரிகளுடன் முனிவரிடம் வந்து, "முனி சிரேஷ்டரே! அறியாமையால் நான் செய்த இந்தத் தவறை மன்னிக்கும்படி வேண்டுகின்றேன்" என்று வேண்டினான்.

உடனே அவரைக் கழுவிலிருந்து இறக்கினான். கழுவின் கூர்மையான பகுதி அவர் உடம்போடு வந்துவிட்டது. அதை வெளியில் எடுக்க முடியாததால், அதில் ஒரு பகுதியை வெட்டினர். மீதிக் கூர்மையான பகுதி முனிவரின் உடம்பிலேயே தங்கி விட்டது. முனிவரும் அதனுடனேயே கிளம்பிவிட்டார். கழுத்துக்கும் விலாப்புறங்களுக்கும் நடுவிலிருந்த அந்த ஆணியுடனேயே இருந்த முனிவர், அதில் பூக்கூடையை மாட்டிக் கொள்ளலாம் என்று நினைத்தார். அதன் காரணமாக தவசிரேஷ்டரான மாண்டல்யர் "ஆணிமாண்டல்யர்" என்று பெயர் பெற்றார்.

ஒரு சமயம் அவர் எமதர்மனிடம் போய், "எனக்கு இந்தத் துயரம் ஏன் விளைந்தது" என்று கேட்டார். எமதர்மனும், "முனிவரே! நீங்கள் பறவைகளின் வால் பகுதியில் கூர்மையான இரும்பைக் குத்தினீர்கள். அதற்கான பலன்தானிது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். தானமானது குறைவாகக் கொடுக்கப்பட்டாலும், பல மடங்காகப் பெருகுவதைப்போலப் பாவமும் பல மடங்காகப் பெருகித் துக்கத்தைக் கொடுக்கும்" என்று பதில் சொன்னார். உடனே முனிவர், "நீ சொன்ன அந்தப் பாவம், எப்போது செய்யப்பட்டது? சரியாகச் சொல்" என்றார். "நீங்கள் குழந்தைப் பருவத்தில் செய்தது" என்றான் தர்மதேவன்.

அதைக்கேட்ட ஆணிமாண்டல்யர், "பிறந்தது முதல், பன்னிரண்டு வருடங்கள் வரை, ஒருவன் எதைச் செய்தாலும் அதனால் பாவம் வராது. ஏனென்றால், அவனுக்கு அந்தக் காலத்தில் நல்லது கெட்டது தெரியாது. சிறிய குற்றத்திற்கு பெரிய தண்டனையை நீ எனக்குக் கொடுத்து விட்டாய். எந்தப் பிராணிகளையும் இம்சை செய்வதைவிடச் சாதுக்களான முனிவர்களை வதம் செய்வது மிகப் பெரியது தர்மனே! இதன் காரணமாக நீ அடுத்த

பிறப்பு எடுப்பாய். இது முதல், உலகத்தில் வினைப்பயன் உண்டாவதற்கு ஒரு வரம்பை ஏற்படுத்துகிறேன். அதாவது பதினான்காவது வயதுவரையில் பாவம் சேராது. அதற்குமேல் பாவம் செய்பவர்களுக்கு மட்டுமே குற்றமுண்டாகும்" என்று சொன்னார்.

மகாத்மாவான ஆணிமண்டல்யரின் சாபத்தை அடைந்த அந்த தர்மதேவன்தான் விதுரராகப் பிறந்தார்.

திருதராஷ்டிரன், பாண்டு, விதுரர் என்னும் இந்த மூவரையும், அவர்கள் பிறந்தது முதல், தன் குழந்தைகளாக வளர்த்து வந்தார் பீஷ்மர். மூவரும் இதிகாசங்கள், புராணங்கள், வேதங்கள் முதலான எல்லாவற்றிலும் தலைசிறந்த ஞானமுள்ளவர்களாக ஆனார்கள். விதுரர் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். இதனால் கண் பார்வையற்ற திருதராஷ்டிரனுக்கு எல்லாவற்றையும் உபதேசம் செய்யும் மந்திரியாக, பீஷ்மரால் நியமிக்கப் பட்டார்.

மகாபாரதத்தில் பாண்டவர்களின் பெருமதிப்புக்குரியவராக விதுரர் திகழ்ந்தார். பாண்டவர்களை அரக்கு மாளிகையில் இருந்து காப்பாற்றியதும் விதுரரே. சூதாட்டத்தை விரும்பாதவர். சூதாட்டக்களத்தில் பாஞ்சாலிக்கு ஏற்பட்ட நிலையால் மனம் வருந்தினார். பாண்டவர் காடு சென்றபோது குந்திதேவியாரைத் தனது இல்லத்தில் வைத்து காத்து வந்தார். இப்படியாக கௌரவர் கூடாரத்தில் இருந்த தர்மம் தெரிந்தவர் விதுரர் ஆவார்.

மகாபாரத யுத்தம் நிட்சயமாகிவிட்ட நிலையில் போரின் விளைவை எண்ணித் திருதராஷ்டிரன் துக்கத்தில் அழுந்தித் துடித்தான். அந்த நிலையில் விதுரர் திருதராஷ்டிரனுக்கு விரிவாக உபதேசம் செய்து அவனைத் தேற்றினார். இந்த உபதேசம் மகாபாரதத்தின் இன்னுமொரு பகவத்கீதையாகும். விதுரர் உபதேசத்தின் சாராம்சத்தை கண்ணன் பாதம் பணிந்து "விதுரநீதி"யாக தொடர்கிறேன்.

(தொடரும்...

## ஆன்மிகச் சிந்தனை

சமத்துவம் இல்லார்க்குப் பகுத்தறிவு இல்லை; அவனுக்குப் பக்தியுமில்லை. பக்தி இல்லாதவனுக்கும் சாந்தி இல்லாதவனுக்கும் சுகம் எங்கிருந்து கிடைக்கும்.

விஷயங்களை நோக்கிச் செல்லும் புலன்களின் பின்னால் எவனது மனம் தாவுகிறதோ, அந்த மனம் நீரில் மிதக்கும் படகைக் காற்று தள்ளுவது போல் அவனது புத்தியை அங்குமிங்கும் இழுத்துச் செல்கிறது.

எவனுடைய புலன்கள் நான்கு திக்குகளிலுமுள்ள விஷயங்களிலிருந்து நீங்கி, தன்வசப்படுகின்றனவோ அவனது அறிவே நிலையானது.

மற்ற உயிர்கள் உறங்கும்பொழுது புலன்களை அடக்கியுள்ளவன் விழித்திருக்கிறான். மற்றவர்கள் விழிக்கும்பொழுதே அறிஞனான முனிவன் துயில்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 13

# சித்தர்களின் ஞானம்

-திரு சிவ மகாலிங்கம் அவர்கள்-

## பதினெண் சித்தர்களில் இடைக்காட்டுச் சித்தர்

தமிழ்நாட்டிலே உள்ள இடைக்காடு என்ற ஊரிலே இவர் பிறந்தவர் அல்லது வாழ்ந்தவர் ஆகையால் இடைக்காட்டுச் சித்தர் என்ற பெயரினைப் பெற்றார். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. முல்லைநில மக்கள் இடையர்கள் ஆதலால் இவர் இடையர் குடியிலே பிறந்தவராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

"தாந்திமிதிமி தந்தக் கோனாரே
தீந்திமிதிமி திந்தக் கோனாரே
ஆனந்தக் கோனாரே - அருள்
ஆனந்தக் கோனாரே"

என்று குதித்தாடும் இந்தப் பாடலைப் பாமர மக்களும் உவகையுடன் பாடுவார்கள். கோனார் என்று வழங்கப்படும் இடையர்களையும் அவர்கள் மேய்க்கும் ஆடு மாடுகளையும் முன்னிறுத்திப் பாடியதால் இடைக்காட்டுச் சித்தர் என மக்கள் இவரை அழைத்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இவர் கொங்கணச் சித்தரின் சீடர். சித்தர்கள் காலம் என்று கூறப்படும் கி.பி பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றியவர். ஞான மார்க்கத்திலே மிகுந்த பற்றுடையவர். மக்களிடையே ஞான மார்க்கத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மிக்கவர்.

சங்கப் புலவர்களிலே இடைக்காடனார் என்று ஒருவர் காணப்படுகின்றார். இடையர்கள் வாழ்ந்த முல்லை நிலத்திலே பிறந்தவராகையால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டது. இவருடைய பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்க நூல்களிலே காணப்படுகின்றன.

"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று தெய்வப்புலவர் வள்ளுவரின் திருக்குறளைப் போற்றும் திருவள்ளுவமாலைச் செய்யுள் இவரால் பாடப்பெற்றதாகும்.

சங்ககாலப் புலவரான இடைக்காடரும், இடைக்காட்டுச் சித்தரும் ஒருவரெனச் சிலர் கூறுகின்றார்கள். ஆனால் இதனை ஏற்கமுடியாது என்பது அறிஞர்கள் பலரின் கருத்தாகும். இவருடைய பாடல்களின் கருத்திலும், நடையிலும் நிறைய வேற்றுமைகள் உண்டு. இடைக்காட்டுச் சித்தர் தம் உள்ளத்தால் கண்டறிந்த உண்மைகளை சாதாரண பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படி எளிய நடையிலே பாடினார். அனைத்து மக்களும் பாடி மகிழும்படியான சந்தங்களிலே பாடினார்.

மலைச்சாரலில் இவர் வழக்கம்போல ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது நவசித்தருள் ஒருவர் வந்து பால் கேட்க, அவருக்கு இவர் பால் முதலியன கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரித்தார் என்றும் பதிலுக்கு அச்சித்தர் ஞான உபதேசம் செய்துவிட்டு போனார் என்றும் அதன் விளைவாக இவர் சகல சித்திகளும் அடைந்து சித்தரானார் என்றும் கூறப்படுகிறது. நாட்டில் ஒருமுறை கடுமையான பஞ்சம் ஏற்பட்டு, ஆடு மாடுகள் கூடத் தீவனமின்றித் துயர் அடைந்தபோது, இவர் தம் சித்துக்களினால் தமது ஆடு மாடுகளைக் காப்பாற்றியதுடன் மழை பொழியச் செய்து உயிரினங்களைக் காப்பாற்றினார் என்றும் கூறப்படுகிறது.

தவயோகியாகிய திருமூலநாயனார் தென்னாடு வருவதற்கு முன்பே தமிழ் வளம்மிக்க மொழியாக இருந்தது. ஆனால் தமிழில் ஆகம ஞானம் போதிக்கும் நூல்கள் இல்லை. வடமொழியில் இருந்த ஆகமங்களின் சாரமாகத் தமிழில் திருமந்திரத்தைத் தந்த பெருமை திருமூலருக்கே உண்டு. திருமந்திரம் தமிழ் ஆகமம் எனப் போற்றப்படுகிறது.

ஆன்மாக்கள் செய்த வினைகளுக்கேற்ப பல்வேறு உடல்களைப் பெற்றுப் பிறவிகளை எடுக்கின்றன. எடுத்த பிறவிகளைச் சரியாகப் பயன்படுத்தி தவத்தினைச் செய்து இருந்தால் உயிர் நோயாகிய பிறவிநோய் நீங்கியிருக்கும். பலர் தாம் எடுத்த பிறவியைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைக்கின்றனர். தான் எடுத்த பிறவியில் தவத்தைச் செய்தமையால் ஆகமக் கருத்துக்களைத் தமிழில் தருவதற்காக சிவன் இப்பிறவியைத் தனக்குத் தந்துள்ளார் என்பதைப் பின்வரும் பாடலின் ஊடாகத் திருமூலர் விளக்குகின்றார்.

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

தொல்லைதரும் பிறவிநோய் நீங்க வேண்டுமானால் சோம்பலற்று உற்சாகத்துடனும் மன உறுதியுடனும் தவத்தினைச் செய்தல் வேண்டும். அரிய பிறவியாகிய மானுடப் பிறவியைப் பெற்றும் தவம் செய்யாவிட்டால் இறைவனுடைய திருவருளைப் பெற்று முத்தி அடையும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

தொல்லைப் பிறவியின் தொந்தமுற்று அறவே
சோம்பலற்றுத் தவஞ் செய்யாக்கால்
எல்லையில் கடவுள் எய்தும் பதம் உமக்கு
இல்லையென்று எண்ணுவீர் கோனாரே.

மனத்தை அடக்கி ஆள்பனே அறிவுள்ளவன்; உரம் படைத்தவன்; இவனே சிறந்த ஞானியாக மிளிர்வான்; உலகியல் துன்பங்களிலிருந்து விடுபட்டு வாழ்வான்; சுதந்திர புருஷனாக இருப்பான்; இன்ப நிலையை அடைவான். கட்டுக்கடங்காத முரட்டு மாடாகிய மனத்தை நமது கட்டுக்குள் அடக்குவோமானால் ஆன்ம விடுதலையாகிய முத்திப்பேறு நமக்குக் கிடைத்துவிடும் என்கிறார். மனத்தை அடக்கி ஆள்வது மட்டும் போதாது. நமது மனத்திலே ஒரு கொடிய விஷப்பாம்பு உண்டு. அது நமக்குக் கெடுதியைத் தரும். பிறருக்கும் தீமையைத் தரும். சினம், கோபம், வெகுளி, ஆத்திரம் என்று கூறப்படும் நச்சுப் பாம்பை நம் உள்ளத்திலே வாழவிடக் கூடாது. மனம் அடங்கினால் முத்தியும், சினம் அடங்கினால் சித்தியும் கிடைக்கும் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

, உலகியல் இன்பங்களிலே கொண்டிருக்கும் பற்றே பிறவிக்குக் காரணமாகிறது. பற்றுக்கள் அற்றவனாகிய இறைவனைப் பற்றினால்த்தான் உலகியல் பற்றுக்களை விடமுடியும் என்பதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்றே செந்நாப் போதருடைய திருக்குறளும் கூறுகிறது. இதே கருத்தினை இடைக்காட்டுச் சித்தரும்

"பற்றே பிறப்புண்டாக்கும் தாண்டவக்கோனே - அதைப்
பற்றாது அறுத்துவிடு தாண்டவக்கோனே"

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

கலியுகத்தில் இறைவனை அடைவதற்குரிய சிறந்த வழி பக்திமார்க்கம் என்றே நாரத மகரிஷி தனது பக்தி சூத்திரத்தில் குறிப்பிடுகின்றார். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்றே திருவாசகமும் குறிப்பிடுகின்றது. பூரண சரணாகதியாகப் பிரபக்தி மார்க்கத்தில் நின்று இறைவனை வழிபடும் அடியவனுக்கு இறைவனின் திருவருள் உடனே கிடைக்கும். அவித்த வித்து முளைக்காது. இதேபோலப் பக்தி இல்லாதவர்கள் இறைவனின் திருவருளைப் பெற முடியாது என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

"அவித்தவித்து முளையாதே தாண்டவக்கோனே - பக்தி
அற்றவர் கதியடையார் தாண்டவக்கோனே"

எமது வினைகள் எல்லாம் நீங்குவதற்குரிய வழி யாது? எனக் கந்தரநுபூதியிலே அருணகிரியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அநுபூதியின் ஏழாவது பாடல் மனதுக்கு உபதேசம் செய்யும் பாடலாகக் காணப்படுகிறது. இரப்பவர்களுக்கு கொடுப்பதோடு முருகப் பெருமானுடைய திருவடியையும் இடைவிடாமல் தியானிப்பவர்களுக்கு பிறவிப்பிணி உட்பட அனைத்து வினைகளும் நீங்கிவிடும் என்பதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

"கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள் படவே
விடுவாய் விடுவாய் வினை யாவுமே"

இறைவனுடைய திருப்பாதத்தை உள்ளன்புடன் பணிந்து வணங்கினால் நமது கொடிய வினைகள் எல்லாம் நம்மைவிட்டு நீங்கிவிடும் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

"ஐயன் திருப்பாதம் பசுவே
அன்புற்று நீ வணங்கினால்
வெய்ய வினைகளெல்லாம் பகவே
விட்டோடுங் கண்டாயே"

ஞானம் அல்லது அறிவு இரண்டு வகைப்படும். உலகியல் அறிவைப் பஞ்சபூதங்களின் செயற்பாடுகளைப் பற்றி அறியும் அறிவினை அபரஞானம் என்றும், இறையருளைப் பெறுவதற்கு உரிய ஆன்மீக அறிவினை பரஞானம் என்று அழைப்பர். உலகில் வாழும் மனிதன் தனது வாழ்வைச் செம்மைப்படுத்தி வாழ்வதற்கு விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்டிருக்கும் அறிவியல் ஞானம் மிகவும் அவசியமாகும். ஆனால் மனிதன் மிருக உணர்வுகள் கொண்டவனாக இல்லாமல் புனிதனாக வாழ்வதற்கு ஆன்மீக ஞானமாகிய பரஞானமே துணை செய்யும். ஞானிகள் பொருள் மயக்கக் கல்வியை விரும்பாமல் ஞானக் கல்வியையே விரும்புவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக் கல்வியையே விரும்ப வேண்டும் என்று தனது மனதிற்கு உபதேசம் செய்வதை இடைக்காட்டுச் சித்தரின் பாடலில் காணலாம்.

"பொய்யான கல்வி கற்றுப் பொருள் மயக்கங்கொள்ளாமல்
மெய்ஞ்ஞான ஞானக்கல்வி விரும்புவாய் கன்மனமே"

பக்குவமான ஞானிகளும், சித்தர்களும் தம்மை அடிக்கடி அகவிசாரணை செய்வார்கள். கல் நெஞ்சம் படைத்தவர்கள் உள்ளத்திலே என்றும் உருக்கம் ஏற்படாது வெப்ப சத்தியைக் கூடக் கொடுத்தால் கல்லுக்கூட உருகும். ஆனால் தன்னுடைய கல் நெஞ்சம் இறைவனை நினைத்து உருகவில்லையே என்று தவிப்பார் தாயுமானவர்.

"கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும்
என் கல்நெஞ்சம் உருகவில்லையே"

தனது மனத்தை கல்மனதாக உருவகித்து இடைக்காட்டுச் சித்தரும் பல பாடல்களைத் தந்துள்ளார். பேய்க் குரங்கு போல உலகியல் இன்பங்களில் விருப்பம் கொண்டு நாய் நரிகள்போல் அலைவதால் ஏதும் நன்மை உண்டோ? என்று இடைக்காட்டுச் சித்தர் தனது மனத்தினை அகவிசாரணை செய்கிறார்.

"பேய்க்குரங்கு போலப் பேருலகில் இச்சை வைத்து
நாய்நரிகள் போல் அலைந்தால் நன்மையுண்டோ கன்மனமே"

கல்வி கற்றவர்களிடமும் அறிவு உண்டு; கல்லாதவர்களிடமும் அறிவு உண்டு. கற்றவர்களில் பலர் தாம் கற்ற விஷயங்களைத் தவிர வேறு ஒன்றைப் பற்றியும் அறியாதவர் களாக இருக்கிறார்கள். கல்வி அறிவினைப் பெறாதவர்களில் பலர் நுண்ணறிவுடன் பல தொழில்களைச் செய்கின்றார்கள். ஆதலால் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள்தான் அறிவாளிகள். படிக்காதவர்கள் அறிவு இல்லாதவர்கள் என்று முடிவு செய்வது தவறாகும்.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதரிடமும் சிந்திக்கும், ஆராய்ந்து பார்க்கும், எண்ணிப் பார்க்கும் அறிவு உண்டு. இயற்கை அறிவை வளர்த்துக் கொண்டவர்கள் அறிவாளிகளாகின் றார்கள். "செய்வன திருந்தச் செய்" என்ற முதுமொழிக்கேற்ப தாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் திறம்படச் செய்வார்கள். ஆன்மீகத் துறையில் ஈடுபடுவோருக்கும் சிந்தனாசக்தி, ஆராய்ச்சி அறிவு என்பன அவசியமானதாகும். இன்றேல் அவர்கள் மூடநம்பிக்கைச் சேற்றிலே வீழ்ந்து தடுமாறுவார்கள். உண்மை நெறியை உணரமுடியாமல் திண்டாடுவார்கள். வாழ்க்கை யில் முன்னேற விரும்பும் ஒவ்வொருவரிடமும் குறிக்கோள் இருக்கவேண்டும். "குறிக்கோளிலாது கெட்டேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். குறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகளும் சீரானதாக இருக்கவேண்டும். செல்கின்ற பாதை சீரானதாக இருந்தால்த்தான் செயலின் விளைவும் சிறப்பாக அமையும். நமது புத்தி சரியாக இயங்காத தினால்த்தான் நமக்கு கெடுதிகள் ஏற்படுகிறது. இதனை இடைக்காட்டுச் சித்தரும்,

"நல்வழியிற் சென்று நம்பதவி எய்தாமல்
கொல்வழியிற் சென்று குறுகுவதேன் புல்லறிவே"

எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

பஞ்சுப் பொதியை அக்கினியில் இட்டால் எரிந்து நீறாவதுபோல ஆன்ம பக்குவம் பெற்றவர்களுடைய நல்லறிவினால் அவர்களுடைய பாவ வினைகள் அனைத்தும் நீங்கிவிடும் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

*சுகம் மட்டுமே பெற நினைப்பவன் சாகும்வரை ஏழையாகத்தான் இருப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கினியாற் பஞ்சுப்பொதி அழிந்திட்ட வாறேபோல்
பக்குவநல் அறிவாலே பாவம் போம் மடவனமே"

மெய்ஞ்ஞானத்தின் எல்லையை அடைந்தவர்கள் மௌனமாக இருப்பார்கள். "மோனம் என்பது ஞான வரம்பு" என்றே தமிழ்மூதாட்டி ஔவையாரும் குறிப்பிடுகின்றார். ஆசைச் சங்கிலி அறுந்துவிட்டால் பேசா நிலையாகிய அனுபூதி நிலையை அடைந்து விடலாம் என்பதை,

"ஆசா நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"

என அருணகிரியார் கந்தரநுபூதியிலே குறிப்பிடுகின்றார்.

"மோன நிலையினில் முத்தி உண்டாம் என்றே
கானமாய் ஊதுகுழல் - கோனே
கானமாய் ஊதுகுழல்.

என்று மௌன நிலையினால்த்தான் முத்தியைப் பெறலாம் என்று இடைக்காட்டுச் சித்தரும் குறிப்பிடுகின்றார்.

மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் ஆசையே ஆகும். ஆசை கூடினால் துன்பம் கூடும். ஆசையை விட்டால் ஆனந்தம் கிட்டும். இதனை,

"ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே"

என்று திருமந்திரமும் குறிப்பிடுகிறது. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்றும் உலகியல் வாழ்வில் ஏற்படும் ஆசைகளாகும். இந்த மூன்று ஆசைகளையும் விட்டுக் கடவுள்மீது பற்றுக்கொள்வதை தேவாசை என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

"மூவாசை விட்டோம் என்று தும்பீபற - பர
முத்திநிலை சித்தியென்றே தும்பீபற
தேவாசை வைத்தோம் என்று தும்பீபற - இந்தச்
செகத்தை ஒழித்தோம் என்று தும்பீபற"

தாய் தனது பிள்ளையைக் காத்து வருவதுபோல எல்லா உயிர்களையும் அன்போடு காத்து வருபவன் இறைவன். தாயாகவும், தந்தையாகவும் இருந்து முருகன் தன்னைக் காத்தருளுகின்றான் என்பதை,

"எந்தாயும் எனக்கருள் தந்தையு நீ" என அருணகிரிநாதர் கந்தரநுபூதியிலே குறிப்பிடுகின்றார். தாயைப் பிரகாஜினியாக, அன்னையாக நின்று எம்மைக் காப்பாற்றிவரும் இறைவனை அகத்திலே கண்டு வணங்கினால் முத்தி கிடைத்துவிடும் என்கிறார் இடைக்காட்டுச் சித்தர்.

"அன்னையைப் போல் எவ்வுயிரும் அன்புடனே காத்துவரும்
முன்னவனைக் கண்டு முத்தியடை புல்லறிவே"

சோதிப் பிழம்பாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற பரம்பொருளின் துணை நமக்கு இருந்தால் நம்முடைய துன்பங்கள் அனைத்தும் நீங்கிவிடும். தொடர் கதையாக நம்மைச் சுற்றியிருக்கின்ற துன்ப வலைகள் அனைத்தும் அறுந்துவிடும். நான் என்ற அகங்காரத்தையும், எனது என்ற மமகாரத்தையும் நம்மிடம் தோற்றுவிக்கின்ற ஆணவத்தின் வலிமையும் குறைந்து விடும் என இடைக்காட்டுச் சித்தர் பின்வரும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்லல் வலை இல்லையென்றே தும்பீபற - நிறை
ஆணவங்கள் அற்றோம் என்றே தும்பீபற
தொல்லை வினை நீங்கிற்று என்றே தும்பீபற - பரஞ்
சோதியைக் கண்டோம் என்று தும்பீபற"

இடைக்காட்டுச் சித்தர் மக்களின் அறிவைத் தட்டி எழுப்புகின்றார். பிரகாசிக்கச் செய்கின்றார். அறிவால் அஞ்ஞானத்தை ஒழிக்க முடியும். அருள் நெறியில் நிற்பதே சிறந்த அறிவு. அதுவே ஞான விளக்கு என்கிறார்.

(தொடரும்...

## ஆன்மிகச் சிந்தனைகள்

* மனிதன் மனிதனாக வாழ, மனிதன் தெய்வமாக வாழ உதவுவதே ஆன்மிகம். ஆன்மிகச் சிந்தனைகள் அனைத்தும் மனித மேம்பாட்டுக்காகவே அமைந்தவை. இம்மை, மறுமை வாழ்க்கையை மேம்படுத்துபவை. மனிதன் அறிவோடும், புகழோடும், ஒழுக்கத்தோடும், பக்தியோடும் வாழ வழிகாட்டுவது ஆன்மிகம். முறையான தெய்வ சிந்தனையால் உயர்ந்த சிந்தனைகளும் பண்பாடும் நம்மிடையே மலரும். மனிதன் அலைபாயும் மனதை இறைவனிடம் ஒருமுகப்படுத்துவதனால் தன் கடமையைத் தவறாமல் செய்யும் பக்குவம் பெறுவான். எவருடைய மனம் எப்போதும் இறைவனை நாடியபடியே இருக் கிறதோ அவரே பக்தர். எல்லாவிதத்திலும் தெய்வத்தைத் தினம் தினம் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து மகிழ்வீர்களாக! ஆகவே எல்லாவிதத்திலும் தெய்வத்தைத் தினந்தினம் பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து மகிழ்வீர்களாக!

* அன்புவழியில் நிற்பது என்பது ஆன்மிக வழியின் ஓர் அங்கமே ஆகும். அன்பு, அருள், ஆன்மிகம், மனிதநேயம் ஆகியவை மனித சமுதாயத்தை- உலகைக் காக்கும், கவசங்களாகத் திகழ்கின்றன. ஆன்மிக வழியை- அறவழியை மனிதன் பின்பற்ற, பின்பற்ற அவன் மனதில் அமைதி ஓங்குகிறது. மனிதன் தவறான வழியில் செல்லும்போது மன அமைதியை இழந்து விடுகிறான். எந்த அளவுக்கு ஒருவன் தவறான சிந்தனைகளைக் கொண்டிருக்கிறானோ, அந்த அளவுக்கு அவன் மனஅமைதி இல்லாதவனாக இருப்பான். இதற்கு மாறாக, எந்த அளவுக்கு ஒருவன் உயர்ந்த சிந்தனை களைக் கொண்டிருக்கிறானோ, அந்த அளவுக்கு அவன் மனஅமைதி உள்ளவனாக இருப்பான். மனம் பலவீனமாக இருந்தால் அதற்கு அருள் நூல்களைப் படித்தல், ஜபம், தியானம், பிரார்த்தனை ஆகியவற்றில் ஈடுபட வேண்டும் அப்போதுதான் மனம் ஆரோக்கிய முள்ளதாக- வலுவுள்ளதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழகத் திருக்கோயில் வரிசை:**

# திருப்பைஞ்ஞீலி

– வல்வையூர் அப்பாண்ணா –

திருச்சியிலிருந்து மணிச்சநல்லூர் வழியாக திருப்பைஞ்ஞீலி திருத்தலத்தை அடையலாம். இவ்வழியே செல்லும் எல்லாப் பேருந்துகளும் திருப்பைஞ்ஞீலி கோவில்வரை சென்று திரும்பும். பசியால் வாடிய அப்பர் பெருமானுக்கு இறைவன் கட்டுச்சோறு கொடுத்துப் பெருமைபெற்ற திருக்கோவில் இது. ஞீலிவனம், கதலிவனம், வியாக்ரபுரி, மேலைச் சிதம்பரம் என்பன போன்ற வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

"ஞீலி" என்பது ஒரு வகை வாழை. கோவில் பிரகாரத்தின் வடபுறத்தில் "ஞீலி வாழைகள்" நெருக்கமாக உள்ளன. இதனைக் "கல்வாழை" என்றும் அழைக்கிறார்கள். இதன் காய் - கனி அனைத்தையும் இறைவனுக்கு நிவேதித்த பின்னர் தண்ணீரில் விட்டு விடுகிறார்கள். மனிதர்கள் யாரும் இதனைப் பயன்படுத்துவதில்லை.

இறைவன் : ஞீலிவனேஸ்வரர், ஞீலிவனநாதர்
இறைவி : விசாலாட்சி
தலமரம் : வாழை
தீர்த்தம் : அப்பர் தீர்த்தம்

அப்பர் திருப்பைஞ்ஞீலியைத் தரிசிக்க விரும்பி கோவிலை அண்மித்தவேளை மிகவும் களைப்படைந்து வருத்தமுற்று, தண்ணீர் தாகத்துடன் பசியும் வந்து வாட்ட, சற்றும் கலக்கமின்றி முன்னேறிச் செல்கிறார். சிவபெருமான் தம் தொண்டரின் வருத்தத்தை நீக்குபவராய், ஒரு சோலை - ஒரு குளம் என்பவற்றை உண்டாக்கி, திருநீறணிந்த அந்தணராகி கட்டுச் சோற்றினையும் எடுத்துக்கொண்டு நாவரசர் வரும் வழி எதிரில் தங்கியிருந்தார். நாவரசர் அவ்விடம் வந்து சேர, "வழி நடந்து வந்த வருத்தத்தால் மிகவும் இளைப்படைந்தீர். என்னிடத்தில் கட்டுச்சோறுண்டு குளத்து நீரைப் பருகி இளைப்பைப் போக்கிக் கொள்வீர்" எனக் கூறி வேதியரான இறைவன் கட்டுச் சோற்றைக் கொடுத்ததும், அதனை உண்டு நீரையும் அருந்தி அப்பர் தமது தளர்வினை நீக்கிக்கொண்டார் என்பதுவும் வரலாறு. அதனால் சோறு கொடுத்த எம்பெருமான் "**சோற்றுடையீசுவரர்**" எனவும் அழைக்கப்படுகிறார்.

1570 - 1576 வரையிலான பெரியபுராணப் பாடல்களில் திருப்பைஞ்ஞீலியில் அப்பருக்கு இறைவன் கட்டுச்சோறு கொடுத்த வரலாறு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பெரியபுராணத்தின் ஒரு பாடலை மட்டும் இங்கு தந்துள்ளேன்.

அங்கண் இருந்த மறையவர்பால்
ஆண்ட அரசும் எழுந்தருள
வெங்கண் விடைவே தியர்நோக்கி
மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்

**இன்சொற்களின் விலை அற்பம்; அதன் மதிப்போ அதிகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கென்பாலே பொதிசோறுண்டு
இதனை உண்டு தண்ணீரிப்
பொங்கு குளத்தில் குடித்திளைப்புப்
போக்கிக் போவீர் எனப்புகன்றார்.

கிழக்கு நோக்கிய கோவிலின் பெரிய முகப்பு வாசல் நம்மை வரவேற்கிறது. முகப்பு வாசலின் மேலே நடுவே சிவனும் வலதுபுறம் பிள்ளையாரும் இடதுபுறம் முருகனும் சுதைச் சிற்பங்களாக அமர்ந்துள்ளனர். முகப்பு வாசல் தாண்டி ஒரு பரந்த பகுதியினூடாக உள்ளே நுழைந்தால், நமது வலது கைப்புறமாக தெற்குநோக்கிய வசந்த மண்டபம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நமது இடது கைப்புறமாக சற்று தூரத்தில் தூர்ந்துபோன நிலையில் குளம் ஒன்று காணப்படுகிறது. இதனை "அப்பர் தீர்த்தம்" என்கிறார்கள். இந்த இடத்திலிருந்த சோலை வனத்திலேயே அப்பருக்கு இறைவன் கட்டுச்சோறு கொடுத்ததாகக் கூறிக்கொள்கிறார்கள்.

அடுத்து, முதல் தளம் மட்டுமே கட்டி முடிக்கப்பட்ட முற்றுப்பெறாத ஒரு கோபுர வாசலுக்கு நாம் வருகிறோம். வழமைக்கு மாறாக - எங்கும் இல்லாதபடி- மிக அகன்ற அடிப்பகுதியைக் கொண்டதாக இக்கோபுர அமைப்பு பார்ப்பதற்கு மிக ஆச்சரியமாக உள்ளது. ஆனால், அடிக்கோபுரமும் ஒற்றைத் தளமும் அதிக காலத்திற்கு முற்பட்டது என்பது மட்டும் புரிகிறது. ஒரு மூலையில் அதன் அத்திபாரத்தைத் தோண்டி, கோபுரத்தின் உறுதிப்பாட்டை பரிசீலித்துள்ளார்கள் என்பதுவும் தெரிகிறது. "**அருள்மிகு ஸ்ரீலிவனேஸ்வரர் திருக்கோவில்**" என எழுதப்பட்ட பெயர்ப்பலகை நடுக் கோபுர மேல் விதானத்தில் காணப்படுகிறது.

நாலுகால் மண்டபம் உள்ள நடுப்பகுதியின் வலது கைப்புறமாக கோவில் அலுவலகமும், இடது கைப்புறமாக பாதாள நந்தி, லிங்கம், பிள்ளையார் தவிர சூதமுனிவரின் தனிச் சந்நிதியும் காணப்படுகிறது.

உள்ளே முழுமையான மூன்றுநிலைக் கோபுரத்தின் உட்பகுதியில் நிறையக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. எட்டுப் படிகள் கீழிறங்கினால் சிறிய தம்பமும் பலிபீடமும் உள்ளன. இது ஒரு பரிகார ஸ்தலமாகையால் நிலத்தில் குழிகளில் நெய் விளக்கேற்றி வணங்குகிறார்கள். மூலவர் ஸ்ரீலிவனநாதர் உருவத்தில் சிறியவராக லிங்கவடிவில் அருள் பாலிக்கிறார். நமது வலது கைப்புறமாக தெற்குப் பார்த்தபடியான அம்பிகை விசாலாட்சி சந்நிதியினைப் பார்த்து வணங்குகிறோம்.

மூலவருக்கு முன்பாக அர்த்த மண்டபத்தில் வசிட்ட முனிவருக்கு நடராஜப் பெருமான் நடனமாடிக் காட்சியருளிய இடம் உள்ளது. இதனாலேயே இத்தலம் "மேலைச் சிதம்பரம்" எனப் பெயர் பெற்றது.

கோஷ்டத்தில் தெட்சணாமூர்த்தி, அர்த்த நாரீஸ்வரர், மோகினியுடன் பிட்சாடணர், சண்டிகேசர் உள்ளனர். உட்பிரகாரத்தில் தென்பக்கமாக உள்ள பள்ளியறை தவிர வேறு மூர்த்தங்கள் எதுவுமில்லை. வெளிப்பிரகாரத்தில் சிறிய சந்நிதிகளில் பிள்ளையார், மகாலெட்சுமி, நாராயணர் உள்ளனர். வடபுறத்தில் ஸ்தல விருட்சமான ஸ்ரீலிவாழை (கல்வாழை) உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே இரண்டு அம்பாள் சந்நிதிகள் உள்ளன. பிரகாரத்தில் உள்ள விசாலாட்சி அம்பாள் சந்நிதி தவிர, வெளிப்பிரகாரத்தில் கிழக்கு நோக்கியபடி இன்னொரு அம்பாள் சந்நிதி காணப்படுகிறது. தனியாகத் தம்பம், பீடம், நந்தி ஆகியனவும் உண்டு. தம்பம் அருகே வைரவரும், சூரியனும் அமர்ந்துள்ளனர்.

வெளிப்பிரகாரத்தின் தெற்குவீதியில் பல படிகள் கீழிறங்கிச் சென்று எமன் சந்நிதியை வணங்குகின்றோம். இது ஒரு குடைவரைக் கோயிலாகக் காணப்படுகிறது. எமன் சந்நிதி இங்குள்ளதால் இக்கோவிலில் நவக்கிரகங்கள் இல்லை.

"மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்தராய்த் திரிவார் வினை தீர்ப்பரால்
பத்தர்தாம் தொழுதேத்து **பைஞ்சீலியெம்**
அத்தனைத் தொழவல்லவர் நல்லரே"

-அப்பர்-

## ஞான ஒளித்தாயே நான்கு மறையாளாய் அம்மா

மதங்க சூழ் மாமணித் தெய்வீக ஒளித்தாயே
மாமேரு கடலொலி மதங்க சூழ்த்திரை மொய்ம்பூசணமே
மந்திர வேத நாதச் சூத்திர தெய்வப் பத்தினியே
மரகதக் கொழுஞ் செழுங்குன்றுடை மலரகத்தேனே
காவினில் ஓடிடும் கலசப் பொற்சிலையே
கண்ணிணைக் காக்கும் பொற்பூரண மேதாரணியே
கணநாத செல்வியா என்றும் கரம்பூத்த வல்லியே
காக்கும் கடவுளனையவளே துர்க்கா சுரந்தரியே.

மொய்த்த பொற்பித்தன் பதம்பிடித்த மெருகூட்டியே
மேன்மைகொள் சைவநெறிப்புல்லோர் தாழனையே - பூத்த
மெய்ஞானச் சிவநெறிகள் பெருமைகொள் தேவியே- ஞான
மெய்ச்சுடர் போதகமே சமநீதி வழுவாத் தானகமே
உண்டுயிர் வளர்த்த உலகத்து நாயகமே
எண்திசைக் கடல்மேவும் ஏழுசுரராகமே
பண்ணரிய கல்விச்சேவை பகிர்ந்தளித்த வித்தகியே
பாரினில் யார் இனிப்பழமறை யோதுவார் அன்னையே.

சீரொடு நல்கிச் சிவபதம் பெற்றீர் அம்மா
சிறப்பொடு கிரிகையாத்தும் சிவஞானப் பொறுப்புக்கண்டாய்
பொறுப்புடன் இசைந்தபேறும் பெற்ற கலைகள் ஞானம்
வரப்பொடு நில்லாவந்த வேணியன் கூட்டுகண்டாய்
வானகமோ வையகமோ வந்துதித்த ஞானத்தங்கம் மாலே
வளர்மதிச்சுடரொளித்தேவியோ பொன்னொளிச் செல்வியே
தெல்லியூர் துர்க்காபதம் பாடும் திருமறைக்காதியே சீமாட்டியே
தென்றமிட்டோம் ஆழிசூழுலகம் வாழ்தமிழ்த் தாயானவரே வாழி!

-க. தெய்வேந்திரம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைமாத வாராந்த நிகழ்வுகள்

06.11.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கேதாரகௌரி விரத மகிமை"

வழங்குபவர் :- மதுரகவி காரை M.P. அருளானந்தன் அவர்கள்

---

13.11.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் (1) :- "கலைநிகழ்வு"

வழங்குபவர்கள் :- காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்கள்

விடயம் (2) :- மலர்வெளியீடு

"சுந்தாவின் விழுதுகள்"

தலைமையுரை :- திரு இ. வரதீஸ்வரன் அவர்கள்

வெளியீட்டுரை :- பேராசிரியர் S. சிவலிங்கராசா அவர்கள்

[முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர், யாழ் பல்கலைக்கழகம்]

நயப்புரை :- திரு த. ஜெயசீலன் அவர்கள்

[பிரதேச செயலர், பருத்தித்துறை]

---

20.11.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

27.11.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் கார்த்திகைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

[ஓய்வு. அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

[அதிபர்]

**215ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org